Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20

ரூபா 12/00

දිනමුරසු වාරමලර් பெப். 27-மார்ச்.04,2000

# வாரமலர்
# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 346

## சமாதான முயற்சியும் - போராட்டங்களும்



## 8 கோடி கேட்கும் கமல்

## அம்மா நடிகையின் மனவருத்தம்

## எனக்கு எந்த ஈகோவும் கிடையாது
-முரளி-

சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

# முரசம்

## பொறுத்துப் பார்ப்போம்!

**அன்புள்ள உங்களுக்கு,**
**வணக்கம்.**

இலங்கை அரசாங்கம்
தனது ஆறாவது பட்ஜட்டில்
அதிக முக்கியத்துவம்
கொடுத்துள்ளது
யுத்தத்துக்கே.

கடந்த ஆண்டைவிட
11.5 வீதத்தால் அதிகரித்த
5200 கோடி ரூபாயை
அது பாதுகாப்புக்கென
ஒதுக்கியுள்ளது.

இந்த பட்ஜட்டை
யுத்தத்துக்கான பட்ஜட்டென
தமிழ்க் கட்சிகள்
வர்ணித்துள்ளதுடன்
அதை எதிர்க்கப் போவதாயும்
சில கட்சிகள்
தெரிவித்துள்ளன.

அதேவேளை
படைகளுக்கான
வசதிகளை அதிகரித்து
ஆட்திரட்டலுக்கான
பெரும் முயற்சியில்
இறங்கியும் உள்ளது.

அது மட்டுமன்றி,
அமெரிக்காவிடமிருந்து
நவீன ஆயுதங்களைப்
பெற்றுக் கொள்வதற்கான
உடன்படிக்கைகளையும்
செய்துள்ளது.

ஏற்கனவே
படையினருக்குப்
பயிற்சியும் ஆலோசனையும்
வழங்கும் ஒத்துழைப்பை
அமெரிக்காவிடமிருந்து
இலங்கை பெற்றுவருகிறது.

இது ஒருபுறமிருக்க,
மறுபுறமாக
விடுதலைப் புலிகள்
இந்த ஆண்டை
யுத்த ஆண்டாகப்
பிரகடனம் செய்துள்ளார்கள்.

சமாதானத்துக்கான
முயற்சிகள் குறித்து
வன்னி சென்றிருந்த
மதகுருமாரின் தூதுக்குழுவில்
அங்கம் வகித்த
யாழ். ஆயர்
விடுதலைப் புலிகளும்
யுத்தத்துக்கான
தயாரிப்புகளிலேயே
முனைப்புக் காட்டுவதாகக்
கருத்துத் தெரிவித்துள்ளார்.

அங்கு புலிகளின் கட்டுப்பாட்டுப்
பிரதேசத்திலுள்ள
சகலருக்கும்
பயிற்சிகள்
வழங்கப்பட்டவண்ணம்
இருப்பதாகக்
கூறியுள்ளார்.

இந்நிலையில்
இருதரப்பினரும்
யுத்தத்தை நோக்கியே
திட்டங்கள் வகுத்து
வருகின்றார்கள்.

அதற்கு மத்தியில்தான்
சமாதானப் பேச்சுகளுக்கான
புதிய முயற்சிகளும்
மேற்கொள்ளப் படுகின்றன.

அரசாங்கத்தின்
தீர்வுத்திட்ட ஆலோசனைகள்
அரசியல் கட்சிகளிடையே
ஆராயப்படுகிறது.
அதன் இறுதிக்கட்டத்தில்
புலிகளுடனும்
ஆராயப்படுமெனச்
சொல்லப் படுகிறது.

இந்த ஆராய்வுகளில்
அதிக அளவு
உரிமைகளை வலியுறுத்தும்
பேரம் பேசும் திறன்
தமிழ்க் கட்சிகளிடம்
இப்போது இல்லை.

இத்தருணத்தில்தான்
சமாதானப் பேச்சுக்களுக்கான
முயற்சிகளில் ஈடுபட
நோர்வே அரசாங்கம்
முன்வந்துள்ளது.

இதன் முன்னோடி முயற்சியாக
நோட்வெல்ல பதில் வெளி நாட்டமைச்சர்
ஏற்கெனவே இலங்கை வந்து
அரசியல் கட்சிகளைச்
சந்தித்ததைத் தொடர்ந்து
அதன் வெளிநாட்டமைச்சர்
நெட்வெல்ல பெக் இப்போது
நேரடியாக
முயற்சிகளில் குதித்துள்ளார்.

பாலஸ்தீன விடுதலைப்
போராட்டம் அடங்கலாக
பல்வேறு நாடுகளில்
சமாதான முயற்சிகளில்
ஈடுபட்ட அனுபவம்
அவருக்கு உண்டு
இருந்தபோதும்
இலங்கைப் பிரச்சனையின்
சிக்கல்த் தன்மையைப்
புரிந்து கொண்டு
தீர்வை ஈட்ட
அவரால் முடியுமா
என்பதே கேள்வி.

யுத்தத்தை நிறுத்துவதும்
அரசியல் தீர்வைக்
காணுவதுமான
இரண்டு பணிகள்
இங்கே உள்ளன.

தறிகெட்டு ஓடும்
இவ்விரு சில்லுகளையும்
இழுத்து நிறுத்தி
சமாதானப் பாதையில்
இட்டுச் செல்ல
இவரால் முடியுமா?

அதீதமான
நம்பிக்கை கொள்ளாமலும்
அதேவேளை
நம்பிக்கை இழக்காமலும்
பொறுத்திருந்து பார்ப்போம்.
முயற்சி
திருவினையாகட்டும்!

*மீண்டும் மறுமடலில்*
*வந்து கலக்கும்வரை*

**என்றென்றும் அன்புடன்,**
**ஆசிரியர்.**

## ஸ்ரீ கிருஷ்ணரும் ஓவியரும்

துவாரகையில் புகழ் பெற்ற ஓவியன் ஒருவன் இருந்தான். அவன் ஒரு சமயம் ஸ்ரீ கிருஷ்ணரிடம் சென்று "சுவாமி தாங்கள் திருவுருவத்தை நான் ஓவியமாக வரையப் போகிறேன்!" என்றான். அதற்கு ஸ்ரீ கிருஷ்ணரும் "சரி!" என்று சம்மதம் தெரிவித்தார். சரியாக ஒரு வாரம் கழிந்தது. ஓவியன் சொன்னபடியே படத்தைக் எடுத்துக்கொண்டு வந்தான். எல்லோரும் ஆவலுடன் பார்த்துக்கொண்டிருந்தபோது ஸ்ரீ கிருஷ்ணரிடம் அந்தப் படத்தைக் காண்பிப்பதற்காக, அதன் மேல் மூடியிருந்த துணியை ஓவியன் அகற்றினான். அவனுக்கு தூக்கிவாரிப் போட்டது! ஏனென்றால், அந்தப் படம் ஸ்ரீ கிருஷ்ணரது உருவம் போலவே இல்லை! ஓவியன் மீண்டும் மீண்டும் அதே படத்தை வரைந்தான். மீண்டும் மீண்டும் இது போலவே நடந்தது.

அந்த ஓவியன் நாரதரைப் பார்த்தான். அவரிடம் அவன் விசயத்தைச் சொன்னான். நாரதர் புன்சிரிப்பு தவழ ஓவியனிடம்,

ஓவியனே! சுவாமிக்கென்று தனியாக ஓர் உருவம் கிடையாது. எல்லா வடிவங்களும் அவருடைய வடிவங்கள்தான். இங்கே வா உனக்குக் காதோடு காதாக ஓர் இரகசியம் சொல்கிறேன். அதன்படிசெய்," என்று சொல்லி நாரதர் ஓவியனிடம் ஏதோ இரகசியமாகக் கூறினார். உடனே அவன் ஸ்ரீ கிருஷ்ணரிடம் ஓடினான். இந்த முறை ஓவியன் எதையோ துணியினால் மூடி மறைத்துக் கொண்டு வந்திருந்தான். பகவான் ஸ்ரீ கிருஷ்ணரைப் பார்த்து அவன்,"சுவாமி நீங்கள் இந்தத் தடவை எப்படி உருமாறினாலும், படம் உங்களைப் போலவே இருக்கும் பாருங்கள்!" என்று சொல்லித் தன்னிடம் இருந்த பொருளைத் திறந்து காட்டினான். அது ஒரு நிலைக் கண்ணாடி அதில் பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் முகம் அப்படியே தெரிந்தது!

-சத்திய ஒளி-

தொகுப்பு:- அ.சசிகாந்தன்-கோளாவில்.

# ஆன்மீகம்



## அதிகம் பரிவு காட்டுவது யாருக்கு?

எம் பெருமானார் (ஸல்) அவர்களிடம், ஒருவர் "நாயகமே! மனிதர்களில் நான் (உபகாரத்தாலும், நடத்தையாலும்) அழகான முறையில் உறவு கொண்டாட மிகவும் உகந்தவர் யார்?" என்று வினவினார். அதற்கு நபி (ஸல்) அவர்கள் "உம்முடைய அன்னை!" என்றார்கள். அவர் பின்னர் "யார்?" என வினவ, அவர் "உம்முடைய அன்னை" என்றார்கள். மீண்டும் எவர் என வினவ, "உம்முடைய அன்னை!" என்றார்கள். மீண்டும் "எவர்?" என்று வினவியதற்கு நபி (ஸல்) அவர்கள், "உம்முடைய தந்தை" எனக் கூறினார்கள்.

"அதற்குப் பின் மற்ற உறவினர்கள் தூரத்து பந்தங்கள், சுற்றத்தார்கள் என எவர் நெருங்கி இருக்கிறாரோ அந்தளவு முற்படுத்தி முதலிடம் அளிக்க உரிமை உடையவர் ஆவர்கள்." என நபி (ஸல்) அவர்கள் விளக்கினார்கள். என ஹஜ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

*(ஆதாரம்-புஹாரி, முஸ்லிம்)*

எஸ். நஜீம், திருகோணமலை.



## கவிதைப் போட்டி இல. 343

### பரிசுக்குரிய கவிதை

### எங்கு போக?

எங்களுக்கு தீனி போடும்
மனிதர்களே....!
இப்பொழுது வீதி ஓரங்களில்
தீனியாக கிடக்கும்போது,
நாங்கள் தீனிக்கு
எங்கு போக?

எம்.ஏ.எம். ஹாபீஸ்-
காத்தான்குடி-06.

**இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்**

### உயர்வு

புறம் வெளுத்தும்
அகம் கறுத்தும்
இரட்டை வேடமாடும்
மனிதரை விட;
வாழ்வின் தத்துவத்தை
உணர்த்தும்
நீங்கள்
உயர்ந்தவர்கள்!

எம்.ஜெயச்சந்திரன்-
கல்குடா.

### கற்றுக்கொள்!

மனிதனே
நாயிடம் கற்றுக்கொள்-
நன்றியெனும் பாடமதை
காகத்திடம் கற்றுக்கொள்-
ஒற்றுமையெனும் பாடமதை.

அ.யாழினி-மட்டக்களப்பு.

### ஒற்றுமைப் பாடம்!

காகக் கூட்டம்
காட்டும் ஒற்றுமை;
ஈழத் தமிழனுக்கு
இதுவொரு பாடம்!

அ.கௌரிதாசன்-
கிண்ணியா.

### காகங்களே! காகங்களே!!

போர் வந்து இடித்தது
எங்கள் வீட்டை
யார் வந்து உடைத்தது
உங்கள் கூட்டை?

சீ.தங்கவடிவேல்-
மட்டக்களப்பு.

### ஒ(வே)ற்றுமை

நாங்களும் மனிதனைப் போல்
அனைத்தும் உண்ணிகள்தான்!
ஆனால்
ஒரு வேற்றுமை அவர்களுக்கோ
எங்களைப் போல் ஒற்றுமையாக
வாழ முடியாது.
காரணம் அவர்களோ!
இன மத பேதம் பார்ப்பவர்கள்.

கவிதா சாந்தலிங்கம்-ஏறாவூர்-05.

### இரங்கல் கூட்டம்

இது மறைந்த தமிழ்
தலைவர்களுக்காய் ஏங்கும்
பறவைகளின் இரங்கல் கூட்டம்!

அ.சுதர்சன்-மட்டக்களப்பு.

### போதும்

அவனி முழுவதிலும்
இனமென்று இரண்டேதான்!
சமத்துவம் எமக்கிருக்க
சண்டைக்கு வழியேது?
ஐயறிவே போதுமப்பா
ஐக்கியமாய் வாழ்வதற்கு.

ஏ.அஹமது ஜுனைது-ஏறாவூர்-06.

## கவிதைப் போட்டி இல. 346



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள்.
அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 04.03.2000

கவிதைப் போட்டி இல.346
தினமுரசு வாரமலர்,
த.பெ. இல-1772, கொழும்பு.

### ஒற்றுமை

காக்கை வன்னியனாக
இருப்பவர்களே
கற்றுக் கொள்ளுங்கள்
காக்கையின் ஒற்றுமையை!

ரெ.அசோக்குமார்-
டிக்கோயா.

### ஒன்றுகூடல்

தமிழா,
உணவைப்பெறவும்
உறவைக் காணவுமே
ஒன்று கூடுகின்றோம் நாம்!
சுதந்திரம் பெறவும்
சமாதானம் காணவும்கூட
ஒன்று கூடவில்லையே நீ!

இ.சுதர்சனா-
வவுனியா.

### அபகரிப்பு

நரியின் தந்திரத்தால்
உன் வடை
பறிபோனது!
அரசின் தந்திரத்தால்
எங்கள் நிலம்
பறி போனது!

த.நகுலேஸ்வரன்-
கல்லடி, மட்டக்களப்பு.

### தவிப்பு

காகங்களாய் இருந்தாலும்
ஒற்றுமையாய் இருந்திருப்போம்,
ஒன்றாக சேர்ந்திருப்போம்,
தமிழர்களாய் பிறந்ததினால்
திசைக் கொன்றாய் ஆனோமே,
அகதிகளாய் போனோமே!

ப.ரவி-ஊர்காவற்றுறை.

### நிறம்

கறுப்புக்காக்கைகளின் மனங்களோ
வெள்ளை,
அந்தோ! மனங்களிலும் சரி,
தோல்களிலும் சரி
மானிடர்களில் எத்தனை நிறங்கள்?

இ. ஆனந்தி- கோண்டாவில்.

# வாசக(ர்)சாலை



*என் இனிய முரசே!*

உண்மைக்கும் வாய்ப்பூட்டுப் போடப்படத்தான் முடிகிறது. என்பதை ஆசிரியர் 'அற்புதன்' அவர்களின் மரணம் உணர்த்துகின்றது. துப்பாக்கி முனையைவிட பேனா முனைக்கு வலிமை அதிகம் தான். அற்புதன் அவர்களின் மறைவுக்குப் பின் 'முரசு' ஆட்டம் கண்டது என்னவோ உண்மைதான். இழந்த சோபையை திரும்பவும் பெற்றிருப்பதும் உண்மைதான். 'இலக்கிய நயம்' இன்னும் மெருகேறவேண்டும். 'அற்புதனின் அற்புதத் தொடரும்', 'அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை' தொடரும் இல்லாதது பெருங் குறை. 'கிரைம் சக்கர வர்த்தி' 'ராஜேஸ்குமார்' அவர்களின் 'சிகப்பு வணக்கம்' அடுத்து என்னாகுமோவென அடுத்த தொடர் வரும் வரை மனது திக் திக் கென அடித்துக் கொண்டே இருக்கும்.

மர்லியா முஹாஜிரீன்,மீவலதெனிய.

*இனிய முரசே!*

அனைவரது ரசனைக்கேற்ப ஆக்கம் படைக்கும் முரசே! எட்டுத் திக்கும் நடக்கும் நிகழ்வுகளை தூய தமிழில் தொகுத்து வழங்கும் உனது பாணியே தனிதான் பழைய மெருகுடன் உன்னை கண்டதும் மகிழ்ச்சி. தடைகள் எது வந்திடினும் சளைக்காது முன்னேறி உன் பணி மேலும் தொடர எனது வாழ்த்துக்கள்.

எம்.எவ்.சாமிலா,
நிகதொள்ளை, யடவத்த.

*அன்பின முரசே,*

நீ தாங்கிவரும் அத்தனை அம்சங்களும் சுவையிலும் சுவை. அதிலும் இலக்கிய நயத்தின் சுவைக்கே ஈடு வேறெதுவுமில்லை. ஆனால் தற்போது இலக்கிய நயத்தின் சுவை குன்றியே காணப்படுகிறது. ஏன்? எனவே பழைய மெருகுடன் தரவும்.

பற்குணன் அம்பிகாபதி, புளியங்குளம்.

●●

*அன்பான முரசே...!*

எல்லோரையும் கவரும் திறமை படைத்த உனக்கு. உன்னில் பதியப்படும், 'சிறுகதை', 'தேன்கிண்ணம்', 'இலக்கியநயம்', 'சிந்தியா பதில்' அனைத்தும் இனிமையிலும் இனிமை. எனவே இன்னும் உன் சேவை வளர எனது பல்லாண்டு வாழ்த்துக்கள்.

எஸ்.சச்சி, ஸ்ரீநாராயணபுரம்.

●●

*அன்பின் முரசே!*

நீ சுமந்து வரும் அனைத்து அம்சங்களும் சூப்பர். அதிலும் 'பாப்பா முரசு', 'இலக்கிய நயம்', 'சிறுகதைகள்', என்பவை சுவையாகவும் சுவாரசியமாகவும் உள்ளன. என்றென்றும் உனது தமிழ் பணி வளர எனது நல்லாசிகள்.

ப.கௌசல்யா,
கந்தபளை.

*எனதுயிர் முரசே!*

திருக்குறள் மங்கினாலும்!
ஐம்பெரும் காப்பியம்
மங்கினாலும்!
உபநிடத சாஸ்திரம்
மங்கினாலும் சரி!
முரசே! மலைபோல்
தொடர்ந்து கொண்டும்!
உயர்ந்து கொண்டும்!
செல்லும் உனது புகழ்
மங்காது மங்கவும்
கூடாது! என பிரார்த்திக்கும்
உனது! வாசகன்.

சி.அருணன், கிரான்.

*அன்பின் முரசே,*

நீ தாங்கி வரும்
அனைத்து அம்சங்களும்
அருமையானவை அதில்
'பாப்பாமுரசு', 'திருமறை'
தரும் பொதுநெறி 'சிந்தியா
பதில்கள்' என்பன
அற்புதமானவை. உனது
சேவை வளர எனது
வாழ்த்துக்கள்.

சி.லயனி,
இறம்பைக்குளம், வவுனியா.

இனப்பிரச்சனை தீர்வு பேச்சு வார்த்தைக்கு மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தின் முக்கியத்துவம் பற்றி நரனின் தொகுப்பு விரிவாக விளக்கியது.

மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் இல்லாவிட்டால் ஏற்கனவே கிழித்தெறியப்பட்ட ஒப்பந்தங்களை போல் ஆவதற்கு ஏதுவாக இருப்பதற்காகவா மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தை அரசு தட்டி கழிக்க முனைகிறது?

பி.ரெங்கநாதன் அசோக்குமார்,
ஸ்டெம்பொடில், டிக்கோயா.

●●

*வாழ்க வளர்க முரசே!*

அனைத்து மக்களினதும் மனதைக் கவர்ந்த என் இனிய முரசே! தடைகளையெல்லாம் தாண்டி வந்தாய். நீ உன் வாசகர்களை வியக்க வைக்கிறாய். நீ இப்பொழுது போல் எப்பொழுதும் வெற்றிக் கொடி கட்ட எனது வாழ்த்துக்கள்.

பரசுராமன் சங்கீதா,ஏறாவூர்-04.

*பிரியமான முரசே!*

நீ சுமந்து வரும் அத்தனை அம்சங்களும் பிரமாதம். குடாநாட்டில் நடக்கும் அழிவுகளையும், தலைநகரில் நடக்கும் கொலைகளையும், இன்னும் அற்புதமான விஷயங்களைத் தரும் உனக்கு என் மனமார்ந்த நன்றிகள் உரித்தாகட்டும்.

கே.சங்கர்,மாவத்தகம.

### நோர்வேயும், தீர்வும்

ஜனாதிபதியை இரண்டாவது தடவையும் தேர்ந்தெடுத்ததானது மக்கள் அவர்மீது வைத்துள்ள நம்பிக்கையில்தான் (முற்றுமுழுதாக அல்ல) எனவே அவர் இப்போது உள்ளதைவிட இன்னும் துரித கதியில் நடவடிக்கைகள் மேற்கொள்ளவேண்டும். அந்த வகையில் இம்முறை 'புலிகளுடன் பேச்சு வார்த்தை' என்று முஸ்தீபை முடுக்கிவிட்டுள்ளார். இது வரவேற்கத்தக்கதுதான். ஆனால் இரு தரப்பும் வெளியிட்டுள்ள அறிக்கைகளை பார்த்தால், தீர்வு என்பது வெறும் புஸ்வாணந்தான். தமிழீழமே தீர்வு என்று அவர்கள் கூற, ஜனாதிபதி அதை தவிர வேறு எதையென்றாலும் பேசத் தயார் என்கிறார். முற்றிலும் எதிர்மறையான எண்ணங்கள்.

நோர்வே வந்து இதை எந்த வகையில் தீர்க்க போகிறது என்பது கேள்விக் குறிதான்?

ஆ.ஜெகதீஸ்வரன், புசல்லாவ.


**மடல்கள் மற்றும் ஆக்கங்கள்- உட்பட சகல தொடர்புகளுக்கும்:**
**தினமுரசு வாரமலர்,**
**த.பெ.இல:-1772, கொழும்பு.**
**தொலை நகல் (Fax):- 074-513266**


### அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறியோ இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிகொடுத்துவிட்டு,வேறுபிரதி வாங்கிக் கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்துவிடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு. -நிர்வாகி.

# அரசியல் சீர்திருத்த ஆலோசனைக் கூட்டம்!

## எதிர்க்கட்சி பின்வாங்கல் ஏற்படுத்திய ஏமாற்றம்!

**அரசியல் சீர்திருத்த ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு எதிர்க்கட்சித் தலைவருக்கு ஜனாதிபதி சந்திரிக்கா அனுப்பிய அழைப்பினை ஏற்றுக் கொண்டிருந்த ரணில் விக்கிரமசிங்க, இறுதியில் கூட்டத்தில் பங்குபற்ற முடியாது என்று மறுத்து விட்டமையினால் பெரிதும் ஏமாற்றம் ஏற்பட்டிருக்கிறது. திருத்த ஆலோசனைகளைத் தமது கட்சி பரிசீலனை செய்வதற்கு போதிய அவகாசம் தரப்படவில்லை என்று ரணில் குறிப்பிட்டிருப்பினும், அவர் ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தின் பிற் பகுதியில், பழைய சிக்கல்களைக் கிளறியிருப்பது சிறுபிள்ளைத்தனமானதுடன், மேற்கொண்டு தனது ஒத்துழைப்பை வழங்குவாரா என்பது குறித்தும் ஐயப்பாட்டையே ஏற்படுத்துகிறது.**

(எமது சிறப்பு நிருபர்)

பல்லாண்டு காலமாக இந்நாட்டைச் சீரழித்துச் சின்னா பின்னமாக்கிக் கொண்டிருக்கும் போரை முடிவுக்குக் கொண்டு வந்து, இனப்பிரச்சனைக்கு நீதியும் நிரந்தரமானதுமான ஒரு தீர்வை எட்டுவதற்கு, இன்றுள்ள அரசியல் திட்டம் திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்ற எண்ணம் மேலெழுந்தது. இன்றுள்ள பொதுஜன முன்னணி பதவிக்கு வந்ததைத் தொடர்ந்து அரசியல் சீர்திருத்தம் தொடர்பான சட்ட மூலம் பற்றித் தொடர்ந்து பேசப்பட்டதுடன், ஒரு தீர்வுப் பொதியையும் உருவாக்கினார்கள். இத்தீர்வுப் பொதிக்கு ஏற்கனவே பல திருத்தங்கள் கொண்டு வரப்பட்டன.

சில காலம் வரை கிடப்பில்போடப்பட்ட பொதியினை இப்பொழுது மீண்டும் எடுத்து வந்து, சகல அரசியற் கட்சிகளுடனும் ஆலோசனைகள் நடத்தப்பட்டுவருகின்றன. ஆளும் கட்சியில் இணைந்துள்ள கட்சிகளுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டதைத் தொடர்ந்து, தமிழ் அரசியற் கட்சிகளுடனும் ஆலோசனைகள் இடம்பெற்றன.

கடந்த 22ம் திகதி செவ்வாய்க்கிழமையன்று ஐ.தே.கட்சித் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான திரு. ரணில் விக்கிரமசிங்கவுடன் பேச்சு வார்த்தை நடைபெறும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆளும் கட்சிப் பிரதிநிதிகளின் தலைவராகவிருக்கும் ஜனாதிபதி திருமதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவும் திரு. ரணில் விக்கிரமசிங்கவும் சந்தித்து, இந்நாட்டின் முக்கியமான பிரச்சனையைத் தீர்த்து வைப்பதற்கான பேச்சு வார்த்தைகளை நடத்தப் போகின்றனர் என்று, வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அந்த நாளை எல்லாரும் ஆவலுடன் எதிர்பார்த்திருந்தனர். ஆனால் கண்டது பெரும் ஏமாற்றமே.

இந்நாட்டு மக்கள் மட்டுமல்ல, முழு உலகமுமே இந்நாளை எதிர்பார்த்திருந்தனர். ஆனால் 20ம்திகதி மாலையே இந்த 'ஆலோசனைக் கூட்டத்தில் நான் கலந்து கொள்ளப் போவதில்லை', என்று திரு.விக்கிரமசிங்க அறிவித்துவிட்டமை அனைவரையுமே ஏமாற்றமடைய வைத்துவிட்டது.

கடந்த வாரம் இப்பகுதிகளில் நாம் குறிப்பிட்டிருந்ததுபோல், திரு. விக்கிரமசிங்க, இவ்வாலோசனைகளில் கலந்து கொள்ள முட்டுக்கட்டை போட்டு விட்டார் என்றே சொல்ல வேண்டும். 1997 அக்டோபர் 24ம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அரசியல் தீர்வு யோசனைகளையே தான் ஏற்றுக்கொள்ளலாம் என்று கூறியதாகவும், இப்பொழுது அதே யோசனைகள் பலதரப்பட்ட மாற்றங்களை உள்ளடக்கியிருப்பதாகவும் குறிப்பிட்டுள்ள திரு. விக்கிரமசிங்க, இதனைப் பரிசீலனை செய்வதற்குத் தமது கட்சியினருக்கு போதுமான அவகாசம் இல்லாமையினால் பிறிதொரு நாளைக் குறிப்பிடுமாறும், ஜனாதிபதிக்கு அவர் எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசுவதற்கு திட்டவட்டமான நிகழ்ச்சி நிரல் ஒன்றும் ஏற்படுத்தப்பட வேண்டும் என்றும் கேட்டுள்ளார்.

### சிறு பிள்ளைத்தனம்

எதிர்க்கட்சித் தலைவரின் கூற்றில் நியாயமிருப்பதாக ஒரு சாரார் கருதுகின்றனர். இருப்பினும் ஜனாதிபதிக்கு ரணில் எழுதியுள்ள கடிதத்தின் பிற் பகுதியில், ஆளும் கட்சிக்கும் தமது கட்சிக்குமிடையிலான பல முரண்பாடுகளையும் இச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்டியிருப்பது சிறு பிள்ளைத்தனமானது என்று பலரும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

'வெண்ணெய் திரண்டு வரும்போது தாளி உடைந்த' கதைபோல், நாட்டை பேரழிவிலிருந்து பாதுகாக்க எடுக்கப்படும் முயற்சி கைகூடக்கூடும் என்று எதிர்பார்க்கப்படும் இவ்வேளையில், இத்தகைய செயலினால் இரு தரப்பினருக்குமிடையில் மேலும் விரிசல் ஏற்படுமே தவிர, ஒருமித்த கருத்து ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அற்றுப்போய் விடக்கூடும் என்றே அவதானிகள் கருதுகின்றனர்.

இது இவ்வாறிருக்க, ஐ.தே.கட்சியின் ஆலோசனைக் கூட்டம் புதன் கிழமையன்று 'சிறிகொத்தா'வில் நடைபெறவிருந்ததாகவும், இக் கூட்டத்தில் எத்தகைய முடிவு எடுக்கப்படும் என்று கூற முடியாதிருப்பதாகவும் அவர்கள் கூறுகின்றனர்.

---

# காணாமல் போனோரின்

## உறவினர் சங்கம் அதிருப்தி

(நமது நிருபர்)

போரினால் தமது உறவினர்களைப் பறிகொடுத்தவர்களின் சங்கம் வட பகுதியிலும், தென்னிலங்கையிலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது தெரிந்ததே.

இத்தனை பேரழிவுகளுக்கு மத்தியிலும் தமது அன்புக்குரியவர்களை இழந்த உறவினர்கள் வடபகுதி யாழ்ப்பாணத்திலும், போர் முனையில் காணாமல் போன சிங்களச் சிப்பாய்களின் உறவினர்கள் தென் பகுதியிலும் அமைப்பொன்றைத் துவக்கி இயங்கி வருகிறார்கள்.

எனினும் "மனிதாபிமான நோக்கில் இந்த அமைப்புக்கள் எடுக்கும் எந்த நடவடிக்கையையும் அரசு உதாசீனம் செய்து வருகிறது!" என்று வடக்கிலுள்ள காணாமல் போன தமிழ் மக்களின் உறவினர்கள் அமைப்பைச் சேர்ந்தவர்களும், போர் முனையில் காணாமல் போன சிங்களப் படையினரின் உறவினர்களும் கண்டனம் தெரிவிக்கிறார்கள்.

தமது அன்புக்குரியவர்களை இழந்தவர்களின் உறவினர்களுக்கு நீதியைப் பெற்றுப் கொடுப்பதும், கைது செய்யப்பட்டு தடுக்கப்பட்டிருப்போரினது உயிர்களுக்கு மதிப்பளித்து அவர்களின் விடுதலைக்கு உதவும் சட்ட பூர்வ பொறுப்பு வாய்ந்தவர்கள் ஆயினும் இது விடயத்தில் அரசு எதுவித அக்கறையுமில்லாது மனிதாபிமானமற்ற முறையில் தட்டிக் கழித்து வருகிறது என்று அவர்கள் குற்றம் சாட்டு கின்றனர்.

இதனிடையே வடக்கில் புலிகளின் பிடியிலும், தெற்கில் அரசின் சிறைச்சாலைகளிலும் உள்ள போர்க் கைதிகளின் நிலமை குறித்து எதுவித கரிசனையும் காட்டாது அரசு செயற்பட்டு வருகிறது. கைது செய்யப்பட்டு தடுப்பில் வாடுவோரின் நிலைமை கவலையளிப்பதாகவே உள்ளது.

எனவே இன்னமும் காலம் தாழ்த்தாது அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பதினோரு அமைப்புகள் ஜனாதிபதிக்குக் கடிதம் அனுப்பியுள்ளன.

போர்முனையில் காணாழற்போன படையினரின் உறவினர் சங்கம், ஜனநாயக உரிமைகளைப் பாதுகாப்பதற்கான அமைப்பு, உலக ஒத்துழைப்பு மாநாட்டிற்கான இலங்கைக்குழு, இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்திற்குமான அமைப்பு என்பன ஜனாதிபதிக்குக் கடிதம் அனுப்பிய அமைப்புகளில் முக்கியமானவையாகும்.

---

# செய்திச் சிதறல்

★ செம்மணிப் புதைகுழியில் அகழ்ந்தெடுக்கப்பட்ட எலும்புக்கூடுகளும் தடயப் பொருட்களும் அடையாளம் காணப்படுவதற்காக யாழ். மத்திய கல்லூரியில் 21ம் திகதி திங்கட்கிழமை முதல் வைக்கப்பட்டுள்ளன.

செவ்வாய்க்கிழமை மாலையில் இதே இடத்தில் நீதிபதி இளஞ்செழியன் நீதிமன்றத்தைக் கூட்டி செம்மணிப்புதைகுழி விவகாரத்துடன் தொடர்புடையவர்களென ஏற்கனவே குற்றஞ்சாட்டப்பட்ட இராணுவத்தினரையும் பொலிசாரையும் கைது செய்து மார்ச் 14ம் திகதி யாழ். நீதிமன்றத்தில் ஆஜர் செய்யுமாறு உத்தரவிட்டுள்ளார்.

★ வன்னியில் விடுதலைப்புலிகளால் தடுத்து வைக்கப்பட்டிருந்து, விடுதலை கோரி சாகும்வரை உண்ணாவிரதம் மேற்கொண்டிருக்கும் 15 அரசப்படையினரை அவர்களுடைய நெருங்கிய உறவினர்கள் 26 பேர் தென் இலங்கையிலிருந்து 21ம் திகதி இரவு புதுக்குடியிருப்பைச் சென்றடைந்தனர். தமது உறவினர்களைக் கண்டதும் இரு தரப்பாரும் உணர்ச்சி மேலீட்டால் அழுதுபுலம்பி அரவணைத்துக் கொண்டகாட்சி பார்த்திருந்தோர் அனைவரையும் கண்கலங்க வைத்து விட்டதாக அறிவிக்கப்படுகிறது.

★ ஜனாதிபதி சந்திரிக்காவை இலக்கு வைத்து கடந்த டிசம்பர் 18ம் திகதி வெடிக்க வைக்கப்பட்டகுண்டு, தற்கொலைக்குண்டுதாரியால் இயக்கப்படவில்லை என்றும் ஜனாதிபதியை நோக்கி வீசப்பட்ட பார்சல் குண்டு என்றும் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

★ நோர்வேயின் தலையீட்டுடன் இலங்கை மேற்கொள்ளும் சமாதானப் பேச்சு வார்த்தை இந்தியாவுக்குக் கேடு விளைவிக்கும் ஒரு செயலாகும் என்று இந்திய ஜனதா கட்சித்தலைவர் சுப்பிரமணியம் சுவாமி கூறி வருகிறார்.

இதற்கிடையில் நோர்வே நாட்டின் அனுசரணையுடன் மேற்கொள்ளப்படும் அமைதிப் பேச்சு வார்த்தைகள் தொடர்பாக இந்திய அரசுக்கும் அறிவிக்கப்படுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக வெளியுறவுத்துறை அறிவித்திருக்கிறது. நோர்வே வெளியுறவு அமைச்சர் இலங்கை அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தியபோது, இலங்கையின் புது டில்லித் ஸ்தானிகரும் சமூகமளித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. தவிர வெளிநாட்டமைச்சர் திரு. லக்ஷ்மன் கதிர்காமரும் இது குறித்து புது டில்லி செல்கிறார்.

---

# மலையகத் தமிழ்ப்பட்டதாரிகள் பயிற்சிக்குப் புறக்கணிப்பு

(கண்டி நிருபர்)

மத்திய மாகாணத்தில் வேலையற்ற பட்டதாரிகளுக்கு பல்வேறு தொழிற்றுறைகளில் பயிற்சியளிக்கும் திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட 50 பேர்களில் தமிழ்ப் பேசுவோர் புறக்கணிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கைத்தொழில் துறைகளில் பயிற்சியளிக்கும் திட்டத்தின் கீழ் மக்கள் வங்கியின் ஊடாக 50,000/ரூபாவுக்கு மேற்பட்ட தொகை குறைந்த வட்டியில் கடன் வழங்கும் திட்டம் ஒன்றையும் மக்கள் வங்கி இவர்களுக்காக வகுத்துள்ளது.

நூற்றுக் கணக்கானோர் வேலையற்று இருக்கும் பட்டதாரிகளுள், தமிழர்களோ அன்றி முஸ்லிம்களோ இவர்கள் மத்தியில் இல்லையா? எனவும் வேலையற்றபட்டதாரிகள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

பொல்கொல்லை கூட்டுறவு பயிற்சிப் பாடசாலையில் 5 நாள் கொண்ட வதிவிடப் பயிற்சி நெறியின் தொடக்க வைபவத்தில் கைத்தொழில் அமைச்சர் திரு.ஸி.வி குணரத்தின, ம.மாகாண முதலமைச்சர் ஸ்ரீ நந்த மித்திர ஏக்கநாயக்க, மாகாண அமைச்சர் திரு வே.இராதாகிருஷ்ணன் ஆகியோரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

---

# "வெளிநாட்டின் தலையீடு வேண்டாம்!"

## பேரினவாதிகள் போர்க்கொடி

(கண்டி நிருபர்)

"இலங்கையின் புதிய அரசியல் சாசனம் தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கையின்போது நோர்வே நாட்டின் தலையீடு தேவையற்றது. இலங்கை மக்களே இதனைத் தயாரித்துக் கொள்வர்."

இப்படிக் கோரும் தீர்மானம் ஒன்றை "சிங்களே மகா சம்மத்த பூமி புத்ர கட்சி கண்டியில் நிறைவேற்றியுள்ளது.

இக்கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதி தேர்தல் வேட்பாளருமான கலாநிதி ஹரிச்சந்திர விஜேதுங்க தலைமையில் கண்டி வைசாக உபசரிப்பு சங்க மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இத்தீர்மானத்தை முன்னாள் அரச நிருவாக அதிகாரியான திரு சுதத் குணசேகர சபையில் முன்மொழிந்தார். அத்தீர்மானத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

"இலங்கைக்குப் பொருத்தமான அரசியல் யாப்பைத் தயாரிக்க வெளியார் தலைமீடு அவசியம் இல்லை. நோர்வே நாடு இதில் இருந்தும் ஒதுங்கிவிட வேண்டும். எந்த ஒரு சிறுபான்மையினருக்கும் மனித உரிமை மீறப்படாத இந்நாட்டில் பயங்கரவாதத்தை என்ன பாடுபட்டாவது ஒழித்துக்கட்ட வேண்டும். புதியதோர் அரசியல் யாப்பை தயாரித்துக் கொள்ளும் உரிமை இந்த நாட்டு மக்களுக்கே உரித்துடையதாகும்."

கலாநிதி ஹரிச்சந்திர விஜயதுங்க இங்கு பேசுகையில் "மக்களின் வாக்குகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் அல்லாமல் தேசிய பட்டியல் மூலம் நுழைந்தவர்களைக் கொண்டு இந்த யாப்பை பாராளுமன்றத்தில் நிறைவேற்றக் கூடாது.

இறைமை என்பது நாட்டின் மக்களே ஆகும். இந்த உரிமை சிங்களவர்களுக்கு மாத்திரமே உண்டு. வேறு எந்த மக்கள் கூட்டத்திற்கும் இங்கு பிரச்சனை இல்லை. பிரச்சனை இல்லாத மக்கள் கூட்டத்திற்கு உரிமையும் வரப்பிரசாதமும் வழங்க அரசியல் சாசனத்தை உருவாக்குவதற்கு எவருக்கும் உரிமையும் இல்லை. நோர்வே நாட்டின் ஆலோசனையுடன் அரசியல் யாப்பை உருவாக்குவதற்கு இடமளிக்கவும் இயலாது!" என்றார்.

---

# மின் இணைய முதல் தமிழ் சஞ்சிகை 'சூரியன். கொம்'

இலங்கையில் முதன்முதலாக இணையத்தினூடாக தமிழ் வார ஏடான 'சூரியன். கொம்' வெளிவரவிருக்கிறது. கொழும்பிலுள்ள 'பரா கிரியேஷன்ஸ்' வெளியிடவிருக்கும் இச்சஞ்சிகையின் தொடக்க விழா மார்ச் முதலாம் திகதியன்று பிற்பகல் 4.00 மணிக்கு சுகததாசா விளையாட்டரங்குடன் இணைந்த ஹொட்டலில் இடம்பெறவிருக்கிறது.

அரசியல் சார்பற்ற நடுநிலை சஞ்சிகையான சூரியன். கொம் இலங்கையின் பிரபலமான தமிழ் எழுத்தாளர்களின் எழுத்தோவியங்களைத் தாங்கி வெளிவரும் என்று தெரியவருகிறது.

இச்சஞ்சிகையை அடைய விரும்புவோர் 'sooriyan.com' என்ற தொடர்புடன் இணையலாம்.

---

# ம.மா.தமிழ்ப் பாடசாலைகளில்

## ஆசிரியர் பற்றாக்குறை

(கண்டி நிருபர்)

மத்திய மாகாணத்தில் இயங்கும் 430 தமிழ்ப் பாடசாலைகளில் 1776 ஆசிரியர் வெற்றிடங்கள் நிலவுகின்றன.

அத்தொகைப் பாடசாலைகளில் மொத்தமாக இருக்க வேண்டிய ஆசிரியர்களின் எண்ணிக்கை 5214 ஆகும். ஆனால் இப்பொழுத் பணிபுரிபவர்களோ 3438 பேர் ஆவர். மத்திய மாகாண தமிழ் கல்வி அமைச்சர் திரு வே.இராதாகிருஸ்ணன் இத்தகவலை மத்திய மாகாண சபையில் அண்மையில் வெளியிட்டார். அவர் தெரிவித்த தகவலின் அடிப்படையில் பின்வரும் வலயங்களில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்றது:

கல்வி வலயங்கள் : கண்டி - 166, கம்பளை 176, வத்தேகம-160, தெனுவரை 53, தெல் தெனிய 10, கட்டுகஸ்தோட்டை 8, மாத்தளை 81, நுவரெலியா 417, அட்டன் 486, வலப்பனை 106, ஹஸ்குரன்கந்தை 39, அம்பகமுவ 124,

இதே வேளையில் இந்த ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு உதவுமாறு கல்வி, உயர் கல்வி, அமைச்சை, மத்திய மாகாண கல்வி அமைச்சு கோரியுள்ளது.

---

# "சமாதானத் தீர்வுக்கு ஒத்துழைப்போம்!"

## ம.மா.சபை உறுப்பினர்கள் உரை

(கண்டி நிருபர்)

மத்திய மாகாண சபையில் ஆளுநரின் கொள்கைப் பிரகடன உரை தொடர்பாக நன்றி தெரிவிக்கும் பிரேரணை மீதான விவாத நடவடிக்கைகளின் போது, யுத்தத்தை நிறுத்தி, நாட்டில் சமாதானம் நிலைக்கவும் இனப்பிரச்சனைக்குத் தீர்வுகாணவும் மேற்கொள்ளப்பட்டிருக்கும் ஏற்பாடுகள் குறித்து அனைத்து உறுப்பினர்களும் தமது உரைகளில் திருப்தி தெரிவித்தனர்.

ஆளும் பொ.ஜ. முன்னணியுடன் இணைந்து இந்த சமாதான முயற்சிக்கு தமது பூரண ஒத்துழைப்பை வழங்குவதாக ஐ.தே.க உறுப்பினரான டி.எம். கருணாரத்ன பண்டா சபையில் தெரிவித்தார். இவரது உரைக்கு தெம்பூட்டும் வகையில் ஏனைய சில ஐ.தே.கட்சி உறுப்பினர்களும் பொது ஜன முன்னணி உறுப்பினர்களும் தம்மாலான அனைத்து பங்களிப்பையும் வழங்குவதாக உறுதியுரைத்தனர்.

ஐ.தே.கட்சி தலைவரான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்த உறுதிப்பாட்டை மேற் கோள் காட்டிய வண்ணம் ஐ.தே.கட்சி உறுப்பினர்கள் இந்த மனமாற்றத்திற்கு வந்தமை குறித்து மகிழ்ச்சியும் திருப்தியும் தெரிவிக்கப்பட்டது.

மலைய கமக்கள் முன்னணியில் உறுப்பினர்களான திருவாளர்கள் மு. சிவலிங்கம், எஸ்.இராஜகுலேந்திரன் ஆகியோரும் திருவாளர் எம்.எஸ்.செல்லச்சாமி, எஸ்.நடராஜபிள்ளை ஆகியோர் யுத்தம் தொடர்பாக தெரிவித்த கருத்துக்கள் சிங்களம் பேசும் இருபக்க உறுப்பினர்களையும் கவர்ந்து விட்டன என்றே சொல்லலாம்.

---

# அம்பாறையில் வீதிச் சோதனை!

## அடையாள அட்டை பதிந்து ஒப்பமிட பணிப்பு!

(காரைதீவு நிருபர்)

அம்பாறை உதயபுர பொலிஸ் சோதனைச் சாவடியில் என்றுமில்லாதவாறு உக்கிரமான சோதனை இடம் பெற்று வருகிறது. மகா ஓயாவில் அதைவிட மோசமாக உள்ளது. கரையோரப் பிரதேசத்திலிருந்து அம்பாறை நகருக்குச் செல்லும் நுழைவாயிலில் உதயபுர சோதனைச் சாவடி அமைந்திருக்கிறது.

அச்சாவடியில் சகலரும் இறங்கி தமது அடையாள அட்டைகளை காண்பிப்பதுடன் விசேட பதிவேட்டில் பதியப்பட்ட பின்னர் கையொப்பமும் இடவேண்டும்.

இந்நடைமுறையால் அரச ஊழியர்கள் மற்றும் வேறு தொழிலுக்குச் செல்வோர் நேரத்துக்குச் செல்ல முடியாமலிருப்பதாகக் கூறப்படுகிறது.

அம்பாறை நகரில் தொழில் புரியும் கரையோரப் பிரதேச அதிகாரிகள், ஊழியர்களுக்கென தனியான விசேட பாஸ்முறை அமுல் படுத்துவது தொடர்பாக அரசாங்க அதிபர் ஏ.எச்.விக்கிரமரத்ன நடவடிக்கை எடுத்து வருகிறார்.

உதயபுர சாவடியில் தனியார் சோதனை உடலெங்கும் தடவப்பட்டு விசேடமாக நடைபெறுகிறது. வாகனங்கள் விசேட கண்ணாடி பாவித்து சோதனையிடப்படுகின்றன. மோட்டார் சைக்கிள்கள் மேலதிக பாகங்கள் கழற்றப்பட்டு சோதனையிடப்படுகின்றன.

இதேபோன்று அம்பாறை-கொழும்பு பாதையிலுள்ள தமண, மகாஓயா, பதியத்தலாவ போன்ற இடங்களிலும் இத்தகைய சோதனைகள் இடம் பெறுவதாக கூறப்படுகிறது.

இச்சோதனை தமிழர்களுக்கு மட்டுமல்லாது ஏனைய இன மக்களுக்கும் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

---

# ஜனசக்தி சேமிப்புப் பணம்

## திருமலையில் மோசடி

ஜனசக்திச் சேமிப்புப் பணக் கொடுப்பனவில் பாரிய மோசடி திருக்கோணமலையில் இடம் பெற்றிருக்கிறது. கூட்டறவுக் கிராமிய வங்கியில் இடம் பெற்ற இம் மோசடி குறித்து விசாரணைகள் முடுக்கி விடப்பட்டிருக்கின்றன.


திருக்கோணமலை பிரதேசச் செயலர் பிரிவுக்குட்பட்ட ஐயாயிரம் ஜனசக்தி நன்மையாளர்களின் 69 இலட்ச ரூபாய் பணம் இவ் வங்கியில் வைப்புச் செய்யப்பட்டிருக்கிறது.

இப் பணத்தில் ஜனசக்தி நன்மையாளர்கள் மீளப் பெறும்போது, அவர்களது பாமரத்தன்மையைச் சாதகமாக்கி கூடிய தொகை மீளப் பெறப்பட்டு அவர்களுக்கு குறைந்த தொகை வழங்கப்பட்டமை அண்மையில் கண்டு பிடிக்கப்பட்டதைத் தொடர்ந்தே இம் மோசடி அம்பலத்துக்கு வந்துள்ளது.

கூட்டுறவுப் பரிசோதகர் திருமதி ரஞ்சினி செல்வராசன், எதிர்பாராத விதமாக இம் மோசடியைக் கண்டு பிடித்ததைத் தொடர்ந்து, உடனடியாக விசாரணைகள் நடைபெறத் தொடங்கியுள்ளன.

"சுமார் ஆயிரம் பேரின் கணக்குகள் பரிசீலிக்கப்பட்டதில் ஒன்றரை இலட்சம் ரூபா மோசடிகள் கண்டு பிடிக்கப் பட்டுள்ளன. மீதி நாலாயிரம் கணக்குகள் பரிசீலிக்கப்பட உள்ளன. அவையும் பரிசீலிக்கப்பட்டால் பல இலட்ச ரூபா மோசடி அம்பலத்துக்கு வரலாம்" எனக் கூட்டுறவுத் துறை சார்ந்த அதிகாரியொருவர் தெரிவித்தார்.




**ஆங்கிலம் பேச, எழுத, வாசிக்க மூன்றே மாத காலத்தில் தபால் மூலமாக கற்றுத்தரப்படும்**

**எம்மிடம் கல்விகற்கும் மாணவ/மாணவிகளின் கருத்தே எமது கல்வி நெறியின் சிறப்புத் தன்மையாகும்**

*நீங்களும் பயமின்றி ஆங்கிலம் பேச வேண்டுமாயின் மேலதிக விபரங்களுக்கு 3.50 முத்திரையொட்டிய சுயவிலாச மிடப்பட்ட தபாலுறையுடன் தொடர்பு கொள்க...*

**BRIGHT BOOK CENTRE (PVT) LTD**
S-27, First Floor, P.O. BOX 162.
Colombo Central Super Market Complex Colombo-11. T.P. 434770

BRIGHT FUTURE IN YOUR HAND

## "தேவனாலே ஆகாத காரியம் எதுவுமில்லை"

வாழ்க்கையைப் பற்றிய கேள்விக்குறியோடு ஆறுதலைத் தேடி ஓடுகின்றீர்களா? சமாதானமும், ஆறுதலும் அருளும் நாதனாம் இயேசுகிறிஸ்துவையும், அவரது நற்செய்திகளையும் இலவச வேதாகமப் பாடப்பயிற்சியினூடாக அறிந்து கொள்ள இன்றே எம்மோடு தொடர்பு கொள்ளுங்கள்.

**'எம்மாவு வேதாகமப் பாடசாலை,
பெதஸ்தா சுவிசேஷகசபை
21, டிக்மன்ஸ்வீதி, கொழும்பு-05.**

## சித்தர் மாந்திரீகம்

அதிஷ்டகரமான வாழ்க்கை அமைய வேண்டுமா? காதல் விவகாரம் கைகூட வேண்டுமா? தொழில் சிறந்திட வேண்டுமா? இல்லற வாழ்வு இனித்திட வேண்டுமா? இவ்விதமாக உங்கள் பிரச்சனைகள் எதுவாயினும் உடனடியாக பூரணவெற்றி பெற்றிட ஒரு தடவை மட்டக்களப்பு கோளாவில் மணி மாந்திரீகச் சித்தர் "சக்திசரவணா"வுடன் தொடர்பு கொள்ளுங்கள். சங்கடங்கள் தீர சக்தி சரவணாவை நாடுங்கள். சோதிட ரீதியாக உத்தரவாதமான எதிர்காலப்பலன்கள் எம்மிடம் அறியலாம். வெளிநாட்டு அன்பர்களுக்கான சிறந்த துரித விசேட சேவை ஒழுங்கு செய்யப் பட்டுள்ளது. உங்கள் வெற்றியும், திருப்தியும் எமது குறிக்கோளாகும்.

**SHAKTHY SARAVANA,**
48/12; SRI WIMALASARA ROAD, KALUBOWILA, DEHIWALA.
T.P.: 723646. நேரில்-காலை 8மணி முதல் மாலை 2 மணிவரை

வியாழன் விடுமுறை

# விளம்பரப் பகுதி

## மஹாசக்தி மருத்துவம்

INDIA MEDICAL RESEARCH & SERVICES - YOGA-HOMOEOPATHY

"எல்லாப்புகழும் இறைவனுக்கே"

யோகாசனம்-பூசை-தியானம், பிராத்தனை

அரசாங்கத்தினால் பதிவு செய்யப்பட்ட புனித சேவை ஸ்தானம், பதிவு இல: HA14/B7/176 குருசக்தி நிலையத்தின் பிரதமகுரு டாக்டர்- "மந்திரயோகி" (யோகி-டாக்டர்-T.மயில்வாகனம்) YOGI-DR.T.MYLVAGA NAM. [D.Ac-R.H.M.P(CEY) M.B.B.S.H (இந்தியா)] சுகாதார அமைச்சின் பதிவு, இல HO61 (CEYLON) தீயசக்திகளினால் ஏற்பட்ட தீராத நோய்கள், தகாத உறவு, போதை வஸ்த்துப்பாவனை, குடும்பப்பிரிவு, காதல், திருமணம், கல்வி, தொழில், வியாபாரம், வெளிநாட்டுப் பிரயாணம், வேறு காரியத்தடைகள், கணவன்-மனைவி குடும்பப் பிரச்சனைகள், தாம்பத்தியக் குறைபாடுகள் (பாலியல் பலவீனம்) பயம், தாழ்வு மனப்பான்மை, மனநோய் (மனச்சிக்கல்) தீராத தலை இடி, வேறு நோய் பிரச்சனைகளை சீன அக்குப்பங்சர்-ஜேர்மன் ஹோமியோபதி இந்திய மாற்று மருத்துவ மனோதத்துவ, மாந்திரீக மனோவசிய, தெய்வீக வசியயந்திர, சாந்தி பரிகாரங்களினால் நேரில் வந்து தீர்த்துக் கொள்கிறார்கள். வரமுடியாதவர்கள், கடல் கடந்த வெளிநாட்டவர்கள் தபால், தொலைபேசி, பாக்ஸ், ஈமெயில் மூலம் தொடர்பு கொண்டு தபால் மூலம் பெற்று, இறைவன் நாட்டத்தோடு கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொள்கிறார்கள்.

**"சீர்டிவாவா பாதசரனம்"**

இரகசியங்கள், உண்மையாக பாதுகாக்கப்படுகின்றன. சகல ரோகங்களைத் தீர்ப்பதற்கும், நன்மையான மாந்திரீக வசிய விடயங்களுக்கு மாத்திரமே நாடவேண்டிய விலாசம்.

GURUSACKTHY CENTRE (INDIAN CLINIC)
KALLADY- BATTICALOA.(P.O) SRILANKA
FAX-00946523796E.MAIL No-bescom @ vinet lk
தொ.பே.இ: 065-24872

கொழும்பில் குறிப்பிட்ட திகதிகளில் சந்திக்க விரும்பினால் விபரம் அறிந்து முற்கூட்டியே பதிவு செய்து கொள்ளுங்கள்.



## கலை அலங்கார வகுப்புக்கள்

- சிகை அலங்காரம்
- அழகுக்கலை
- மணப்பெண் அலங்காரம்
- 4 மாத கற்கைநெறி

Facial Bleaching முடிவெட்டுதல் போன்றவைகளையும் செய்து கொள்ள முடியும்.

வகுப்புக்கள் வார; வார இறுதி நாட்களிலும் நடைபெறும்.

**ஆரம்பம்:15-03-2000**

சான்றிதழ்கள் வழங்கப்படும்

**FASNAZ BEAUTY SALON**

142டபிள்யூ, ஏ.சில்வா மாவத்தை, கொழும்பு-06 தொலைபேசி: 589457

## மனோதத்துவ வைத்தியம்

பிரபல மனோதத்துவ நிபுணர் Dr. P. ஆறுமுகம் அவர்களை

**கொழும்பில் பெப்ரவரி 20-27 வரை சந்திக்கலாம்**

**Dr. P.Arumugam S.A.M.P. REG.9492**
**SRI SAWBAKIYA INN, 67/A, WOLFENDHAL ST. COLOMBO-13.**
T.P:- 338163-336165, 338166, Fax:- 338161, செல்டெல் No. 072-609388

**கல்முனையில் மார்ச் 05, 06ம் திகதிகளில் சந்திக்கலாம்**

T.M.M. பார்மசி-கல்முனை. T.P. 067-29329


**வவுனியாவில் மார்ச் 12,13ம் திகதிகளில் சந்திக்கலாம்**

(தயவு செய்து பதிவுசெய்து கொள்ளவும்)
(Vanni Inn, 2ம் குறுக்குத் தெரு, ஞானவைரவர் கோயில் ஒழுங்கை, T.P.024-22074, 21405,21406

கடிதத்தொடர்பு:- **Resident T.P. 065-24019**
**Dr. P.Arumugam S.A.M.P.**
No. 51/5, Koolavady Road, Batticaloa . SRI LANKA.



## மலையாள மாந்திரிகத்தின் வெற்றிகள்



நேற்றல்ல இன்றல்ல தொண்டு தொட்டு 33 வருடமாக உலக மாந்திரிக சக்கரவர்த்தியாக விளங்குவது டாக்டர் பீ.கே. சாமி அவர்களே!

மாந்திரிக வேலைகளில் நன்மைக்கு இடமுண்டு தீமைக்கு இடமில்லை. இப்படி செயல் புரிவது டாக்டர் பீ.கே. சாமி அவர்களே!

மாந்திரிக துறையில் வருமான வரி செலுத்துவது என்றால் அது டாக்டர் பீ.கே. சாமி அவர்களே!

மாந்திரிக துறைக்கு வழிகாட்டியாக வரையறுக்கப்பட்ட நிறுவனமாக **P. K. SAAMY ASSOCIATE (PVT) LTD**ஐ உருவாக்கியது டாக்டர் பீ.கே. சாமி அவர்களே!

வாடிக்கையாளரின் நலனை கருதி இரகசியத்தை பாதுகாப்பது என்றால் அது டாக்டர் பீ.கே. சாமி அவர்களே!

வாழையடி வாழையாக மக்களுக்கு உண்மை சேவை புரிவது என்றால் டாக்டர் பீ.கே. சாமி அவர்களே!

தீரும் பிரச்சினைகளுக்கு திட்ட வட்ட திகதி குறித்து கொடுப்பவர் என்றால் டாக்டர் பீ.கே. சாமி அவர்களே!

வசதியற்றோருக்கு தான தர்மம், இலவச சேவை செய்து கொடுப்பது என்றால் டாக்டர் பீ.கே. சாமி அவர்களே!

வசியத்தால் திருமணம் செய்து கொள்பவருக்கும் 25 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும் மாத்திரமே! கட்டுப்பாட்டுடன் காதலன் வசியம் செய்து கொடுப்பவர் என்றால் டாக்டர் பீ.கே. சாமி அவர்களே!

வெளிநாட்டவருக்கு விஷேசமாக அந்தந்த அடருக்கு உரியவரிடம் பார்சல் போய் சென்றடைய உலகளாவிய ரீதியில் பிரதிநித்துவம் அமைத்து வைத்திருப்பவர் டாக்டர் பீ.கே. சாமி அவர்களே!

மதசார்பற்ற சேவை செய்பவர் யார் என்றால் அவர் டாக்டர் பீ.கே. சாமி அவர்களே!

செய்துகொள்ளும் மாந்திரிக வேலைகளுக்கு Gurantee Card கொடுப்பவர் என்றால் டாக்டர் பீ.கே. சாமி அவர்களே!

அறவிடும் பணத்திற்கு முத்திரையுடன் ரசீது வழங்குபவர் என்றால் டாக்டர் பீ.கே. சாமி அவர்களே! 33 மாந்திரிகர் வேலை செய்வதும் என்றால் அது இங்கு தான்.

இனி என்ன உங்கள் பிரச்சினை? மாற்றான் மனைவி தொல்லையா, மனதுக்கு ஏற்றவரை திருமணம் செய்து கொள்ள வேண்டுமா, திருமண வயது ஏறிக் கொண்டே போகிறதா, கணவன் மனைவி பிணக்கு தீர, பிரிந்தவரை அழைத்து எடுக்க, விடுபட்ட திருமணம் நிறைவேற, மனதார நேசித்தவரை மற்றவர் விரும்பாமல் இருக்க, சூனியம் விடுபட, கல்வி சிறப்படைய, வியாபார விருத்தியடைய, தீராத நோய் தீர, பிரயாண தடை நீங்க, அன்றன்றாடு மனநிம்மதியுடன் மற்றவர் மனப்பொறாமை தவிர்த்து வாழ , தீயோர் நட்பு கிட்டாமல் இருக்க, மாங்கல்ய மன நிறைவு பெற உங்கள் குறைகளுக்கு முன்னறிவித்தலுடன் நேரில் வருவது சாலச்சிறந்தது. வெளிநாட்டவர்களுக்கு இலங்கை நேரப்படி காலை 9.00 மணிமுதல் இரவு 9.00 மணிவரை தேவைகளுக்கு டாக்டர் பீ.கே. சாமி அவர்களுடன் நேரடியாக தொடர்பு கொள்ளலாம். தொடர்பு கொள்ள வேண்டிய தொலைப்பேசி இலக்கங்கள்: **466271, 466571, 431137, 470615, 342463, 342464, 344831, 344832** இவை மட்டுமல்ல அருள் ஞானத்துடன் கூறப்படும் தெட்டத்தெளிவான ஜாதகங்கள் என்றுமே பிழைத்ததில்லை. நடந்தது, நடக்கப்போவது, திருமணம் எப்போது, எத்தனையாம் திகதி, எத்தனை மணிக்கு, வாழ்வில் அதிர்ஷ்டம் எப்போது என்பதை என்னால் கூறமுடியும். திகதி மாதம் குறித்து அனுப்பவும். கைரேகை என்றால் திகதி தேவையில்லை. இன்னும் சிறுவர்களுக்கு பிறந்த நாள் பரிசாக தங்க வலம்புரி சங்கு மோதிரத்தை நீங்கள் ஒரு குழந்தைக்கு அணிவிப்பது மூலம் இதன் நன்மையாக சிறுவர்களின் எதிர்காலம் சிறப்படைய நீங்கள் ஒரு தூண்டுகோள் ஆகலாம். அருள் ஞானம் பெற்ற தங்க வலம்புரி சங்கு மோதிரம் எம்மிடம் உண்டு.

கருணாகரபூசனம், உலக மலையாள மாந்திரீக சக்கரவர்த்தி
**Dr. P. K. Samy (J.D.G.A.N) JP**

162, Kotahena Street, Mayfield Road, Colombo 13.
Fax: 0094-1-342464 E-Mail : drpksamy@sltnet.lk

இன்னும் எமது சேவைகளை அறிய எமது இன்டர்நெட் வெப் தளத்தை நாடவும்
Web site: www.imexpolanka.com/drpksami
Web site: www.lgo.slt.lk/swami

**வெளிநாட்டவர்களுக்கான விஷேட சலுகை:**
வெளிநாட்டவர்கள் எமது கட்டணத்தை கம்பியூட்டர் மூலம் செலுத்தி உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளலாம்.

வழமைபோல் நுவரெலியாவிலும் எமது சேவை நடைபெறுகிறது.

## 1வது பிறந்த தின வாழ்த்து



செல்வி ஆர்.ஆர்த்திகா 28.02.2000

கரணவாயைச் சேர்ந்த ராஜசேகரன்-ரூபராணி தம்பதியினரின் **செல்வப் புதல்வி ஆர்த்திகா** தனது முதலாவது பிறந்த தினத்தை சுவிஸ் LAUSANNE நகரிலுள்ள தனது இல்லத்தில் 28.02.2000 அன்று வெகு விமரிசையாக கொண்டாடுகிறார். இவரை அன்பு அப்பா, அம்மா, அப்பப்பா, அம்மப்பா, அம்மம்மா, தாத்தாமார், பாட்டிமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், சித்திமார், மாமாமார், மாமிமார், அக்காமார், அண்ணாமார், மச்சாள்மார், மச்சான்மார், தங்கை சிநேகா, லிங்கி மாழா குடும்பத்தினர், மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் துர்க்கை புல விநாயகர் அருளால் பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்துகின்றனர்.

தகவல்:- மாமா நவநீதன், பேராதனை.

## 1வது பிறந்த நாள் வாழ்த்து

**27.01.2000**



றெபேக்கா விஜயன்

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த விஜயன்-றோஷி தம்பதிகளின் செல்வப் புதல்வி றெபேக்கா தனது முதலாவது பிறந்தநாளை மில்லேனியம் வருட ஜனவரி மாதம் இருபத்தேழாம் திகதி இத்தாலி பலர்மோவிலுள்ள தனது இல்லத்தில் மிகவும் சிறப்பாகக் கொண்டாடினார்.

இவரை அன்பு அப்பா, அம்மா இத்தாலியில் உள்ள சீலன் தொட்டப்பா குடும்பத்தினர், அப்பம்மா குலம் மாமா குடும்பத்தினர், றாயு பெரியப்பா குடும்பத்தினர், திருகோணமலையில் உள்ள அம்மப்பா, அம்மம்மா, றஞ்ஞு அன்ரா, றொபின் மாமா, கனடாவிலுள்ள ரவி பெரியப்பா குடும்பத்தினர், றொஷான் மாமா, மற்றும் பேரன், பேத்திமார், பூட்டன் பூட்டிமார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் பாலையூற்று மாதா அருள் பெற்று பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்துகிறார்கள்.

தகவல்:- அம்மப்பா என்.றட்ணகுலம், 1112 பாலையூற்று, திருகோணமலை.

## 1வது பிறந்தநாள் வாழ்த்து

**08.02.2000**

**செல்வி ப.துஷாயினி**



பருத்தித்துறையைச் சேர்ந்த பரணீதரன்-சகுந்தலா தம்பதிகளின் **செல்வப்புதல்வி துஷாயினி** தனது பிறந்தநாளை நீர் கொழும்பில் உள்ள தனது இல்லத்தில் 08.02.2000இல் வெகு விமரிசையாகக் கொண்டாடினார். இவரை அப்பா (Newzealand), அம்மா நீர்கொழும்பு, அப்பப்பா அப்பம்மா (கற்கோவளம்), அம்மப்பா, அம்மம்மா (பருத்தித்துறை), காண்டீபன் பெரியப்பா குடும்பத்தினர் (சுவிஸ்), பெரியமாமி குடும்பத்தினர் (கற்கோவளம்), குமார் பெரியப்பா குடும்பத்தினர் (இத்தாலி), பார்த்தீபன் பெரியப்பா குடும்பத்தினர் (சுவிஸ்), பிரபு பெரியப்பா குடும்பத்தினர் (சுவிஸ்), ஆதிசித்தப்பா (லண்டன்), சின்னமாமி (கற்கோவளம்), பெரியமாமா (லண்டன்), பெரியம்மா குடும்பத்தினர் (France), சின்னமாமா (லண்டன்), குட்டிமாமா (நீர்கொழும்பு), மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

**தகவல்:- அப்பா, நியூஸிலாந்து.**

## 2வது பிறந்தநாள் வாழ்த்து 21.02.2000

**செல்வன் சிவயாதவன் (SIVAJATHAVAN)**



புங்குடுதீவு 11ம் வட்டாரத்தைச் சேர்ந்த சிவராஜா-லோகேஸ்வரி (லோகா) தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வன் **சிவயாதவன்** தனது 2வது பிறந்த தினத்தை மிலேனியம் வருட பெப்ரவரி இருபத்தோராம் திகதி CANADA NORTH YORK இல் உள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடினார். யாதவனை அன்பு அப்பா, அம்மா, கொழும்பில் வசிக்கும் அப்பம்மா, இந்தியாவில் வசிக்கும் அம்மம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், சித்திமார், மாமாமார், மாமிமார், மற்றும் அண்ணாமார், அக்காமார், தம்பி, மச்சாள்மார், மச்சான்மார் அனைவரும் பாணாவிடை சிவன் கலட்டி வரசித்தி விநாயகர் அருளால் சகல செல்வமும் பெற்று சீரும் சிறப்புடனும் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

தகவல்:- அப்பா, சிவராஜா(கனடா)

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# சமாதான முயற்சியும் போராட்டங்களும்

நோர்வே மத்தியஸ்த முயற்சி ஒருபுறம். தீர்வுத் திட்டம் தொடர்பான பேச்சுவார்த்தை மறுபுறம். யுத்த நகர்வுகள் இன்னொருபுறமுமாக, நிகழ்வுகள் அரங்கேறிய வண்ணம் இருந்தாலும் இப்போதுதான் இனப்பிரச்சனை தொடர்பான முக்கியமான இன்னொரு காலகட்டம் ஆரம்பித்திருக்கிறது எனலாம்.

அதன் முக்கியத்துவம் யாதெனில், இலங்கை இனப்பிரச்சனையில் முதன் முதலாக மேலைத்தேய நாடொன்று மத்தியஸ்தவம் வகிக்கக் கால் வைத்துள்ளமையாகும்.

ஏற்கெனவே கைவைத்துச் சூடுகண்டு கொண்ட இந்திய மத்தியஸ்தத்தையடுத்து நிகழ்கின்ற இரண்டாவது வெளிநாட்டு மத்தியஸ்தம் இதுவாகும்.

இந்திய மத்தியஸ்தத்துக்கும், இப்போது ஏற்பட்டுள்ள நோர்வே மத்தியஸ்தத்துக்கும், குணாம்ச ரீதியான வேறுபாடுகள் நிறையவே உள்ளன.

இந்திய மத்தியஸ்தமென்பது இலங்கைப் பிரச்சனையில் இந்தியாவின் நேரிடையான செயற்பாட்டோடு அமைந்திருந்தது. கூடுதலான நெருக்கத்தைக் கொண்டிருந்தது. அதிக உரிமையைத் தன்வசம் எடுத்துக் கொண்ட மத்தியஸ்தமாக இருந்தது.

இலங்கையின் அயல்நாடாக இந்தியா இருந்ததும், இலங்கைத் தமிழ் அகதிகள் பெருமளவில் இந்தியாவில் தஞ்சம் புகுந்ததும், அதனால் எழுந்த தமிழ்நாட்டு உணர்வலைகளுக்கு இந்தியா செவி சாய்க்க வேண்டிய நிலையிலிருந்ததும், தெற்காசிய நாடுகளில் ஆதிக்கம் வகிக்கும் நாடாக அது விளங்கியதும், தன்னை அண்டியுள்ள பல அயல் நாடுகளின் நெருக்கடிகளில் நேரடித் தலையீடு செய்த- செய்கின்ற ஏதோ ஒருவகை உரிமையை அது முன்னிறுத்தி வந்ததும், அவ்வுரிமைக்கு உலக நாடுகள் அங்கீகாரம் வழங்கும் வகையில் நடந்து கொண்டதும், இலங்கைப் பிரச்சனை தொடர்பாக இந்தியா தலையீடு செய்வதற்கான தார்மீக, உரிமையைக் கொடுத்திருந்தன.

பூட்டானில், நேபாளத்தில், பங்களாதேஷ் பிரிவினைப் போராட்டம் போன்றவற்றில்- ஏன் அண்மையில் மாலைதீவுச் சதிப்புரட்சி முறியடிப்பிலும் இந்தியாவின் நேரடித் தலையீடுகளை உலகம் மௌனமாக ஏற்றுக் கொண்டதை நாம் கண்டுள்ளோம்.

அத்தோடு அக் காலகட்டத்தில் இருந்த உலக அரசியல் முகாம்களில் சோவியத் பக்கம் நின்ற இந்தியாவுக்கு அண்டை நாடான இலங்கை எதிர் முகாமுக்குள் தள்ளப்பட்டுவிடாது பார்த்துக் கொள்ள வேண்டிய தேசிய அக்கறையும் இருந்தது.

இதைவிட, இலங்கையில் ஏற்படுகின்ற ஒரு பிரிவினைப் போராட்டம், ஏற்கெனவே பிரிவினைக்கான உணர்வுகள் தலைதூக்கியுள்ள இந்திய அரசியல் போக்குகளுக்குள்ளும் கருத்து ரீதியாகச் செல்வாக்குச் செலுத்திவிடாதிருப்பதற்கான அக்கறையும், இந்தியத் தீவிரவாதிகளுக்கும் இலங்கைத் தமிழ்த் தீவிரவாதிகளுக்குமிடையே பிணைப்புகளும், ஒத்துழைப்புகளும் ஏற்பட்டு விடக்கூடிய அபாயத்தைத் தடுக்க வேண்டிய அவசியமும் இந்தியாவுக்கு இருந்தது.

இதனால் தமிழ்ப் போராளிக் குழுக்களைத் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் வண்ணம், அபயமும், பயிற்சியும், ஆயுதமும்கூட வழங்கி வந்த இந்தியா, இலங்கைப் பிரச்சனையில் தனக்குள்ள ஈடுபாட்டை வலியுறுத்தி வந்தது மட்டுமல்ல, தன்னை மீறி வேறெந்த நாடுகளும் தலையிடுவதைத் தான் விரும்பப் போவதில்லையென்பதையும் உணர்த்தி வந்தது.

அதற்கேற்றாற்போல் ஆரம்பம் முதல் இலங்கைத் தமிழ்த் தலைவர்கள் இந்தியத் தலையீட்டையே விரும்பியும் நின்றனர், வேண்டியும் நின்றனர்.

இதனால் இந்தியா, மிகச் சௌகரியமாகவும், இறுமாப்புடனும் இலங்கை இனப் பிரச்சனையில் தலையிட உரித்துடைய வலிந்த மத்தியஸ்தராகத் தன்னை முன்னிறுத்திக் கொள்ள முடிந்தது.

இந்திரா காந்தி காலம் முதல் ஜி.பார்த்தசாரதி, நரசிம்மராவ் ஆகியோரைத் தூதனுப்பி இலங்கை இனப்பிரச்சனை தொடர்பான அரசியல் தீர்வுக்கான முன்னெடுப்புகளுக்கு முனைந்த இந்தியா, ராஜீவ் காந்தி காலத்தில், போராளிக் குழுக்களுக்கும் இலங்கை அரசுக்குமிடையிலான முதலாவது நேரடிப் பேச்சு வார்த்தையை தனது மேற்பார்வையின் கீழ் திம்புவில் நிகழ்த்தியது. வெற்றியளிக்காத மேலும் சில முயற்சிகளின் பின் நேரடியாகத் தானே இறங்கி இந்திய இலங்கை ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொண்டு இலங்கைக்கும் தமிழ்ப் போராட்ட இயக்கங்களுக்குமிடையிலான மத்தியஸ்தராகவும், சமாதான ஏற்பாட்டுக்கான உத்தரவாதியாகவும் தனது படைகளுடன் பிரசன்னமானது.

இத்தகைய மத்தியஸ்தத்தில் இரு தரப்பினர் மீதும் நிர்ப்பந்தங்களைச் செலுத்தக்கூடிய ஒருவகை அதிகாரத்தை அது எடுத்துக்கொண்டிருந்தது.

ஆனால் அவ்வதிகாரத்தை விடுதலைப் புலிகள்மீது செலுத்த முற்பட்டபோது பெரும் மோதலை எதிர்கொண்டு, ஈற்றில் இம் முயற்சியிலிருந்து பின்வாங்க நேர்ந்தது. அந்தத் தலையீட்டைமிட்டு கடுமையான எச்சரிக்கைச் செய்தியாக அது ராஜீவ்காந்தி படுகொலையை எதிர்நோக்க வேண்டியதாயிற்று.

அதன்பின் இன்றுவரை இந்தியாவை மத்தியஸ்தத்துக்கு ஏற்புடைய ஒரு நாடாகப் புலிகள் அங்கீகரிக்கவில்லை. இந்நிலையில் இந்தியா இப் பிரச்சனையில் நேரடியாகப் பங்காற்றுவதிலிருந்து தள்ளி வைக்கப்பட்டு விட்டது என்பதுடன், அதுவாகவே சற்றுத் தள்ளி நின்றுகொண்டது.

இலங்கையில் சிங்கள அரசியலிலும் இந்தியாமீது ஆக்கிரமிப்பாளர்களென்ற ஒரு மிகையான அச்சம் காணப்படுவதால், புலிகளின் புறக்கணிப்பையே சாட்டாகக் கொண்டு, இந்திய மத்தியஸ்தத்தைத் தட்டிக்கழித்துவிடும். சாதுரியமான அணுகுமுறையையே இலங்கை அரசாங்கத்தின் பக்கத்திலும் காணக்கூடியதாக உள்ளது.

இத்தகைய பின்புலங்களுடன் நிகழ்ந்தேறிய இந்திய மத்தியஸ்தத்துக்கும் தற்போது அரங்கேறியுள்ள நோர்வே நாட்டு மத்தியஸ்துவத்துக்கும் வேறுபட்ட குணாம்சங்களை நாம் அவதானிக்கலாம்.

நோர்வே, உலக அரங்கில் சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கான மத்தியஸ்தங்களில் அங்கீகாரம்பெற்ற, அனுபவம் கொண்ட நல்லபிப்பிராயத்தைச் சம்பாதித்துள்ள ஒரு நாடு.

ஒரு காலத்தில் இந்தியா எப்படி இலங்கைப் பிரச்சனையில் தலையிட நியாயாதிக்கம் கொண்டிருந்ததோ, அதுபோல் இன்று சர்வதேச சமூகமும் ஒருவகை நியாயாதிக்கத்தைப் பெற்றிருப்பதை நாம் உணர முடியும். ஏனெனில் இலங்கைத் தமிழ் அகதிகள் இன்று சர்வதேச சமூகத்தின் பிரச்சனையாக அதன் மடியில் போடப்பட்டுள்ளார்கள்.

அத்தோடு அந்நாடுகள் இலங்கைக்கு கடன் கொடுக்கும் நாடுகளாக, இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியிலும் மனித உரிமைகள், ஜனநாயக செயற்பாடுகளின் அபிவிருத்தியிலும் அக்கறை கொண்டுள்ள நாடுகளாக விளங்குகின்றன.

இதேவேளை, இலங்கையில் பிரிவினைப் போராட்டத்தை முன்னெடுக்கும் விடுதலைப் புலிகளின் செயற்பாடு, சர்வதேச மட்டத்தில் உள்ளமையும், அதனைக் கட்டுப்படுத்தும்படியான-கோரிக்கைகளை இலங்கை அரசாங்கம் சர்வதேச மட்டத்தில் எழுப்பி வருவதும் இப் பிரச்சனையை சர்வதேச அரங்கில் பேசப்படுவதற்கு வழிவகுத்துள்ளன.

இதேவேளை வெவ்வேறு சந்தர்ப்பங்களில் ஐக்கிய நாடுகள் சபையின் கரிசனையும் இப் பிரச்சனைமீது செலுத்தப்பட்டு வந்திருக்கின்றன. இது குறித்து சில அம்சங்களில் சில ஒப்பந்தங்களை மேற்கொள்வதில் கூட ஐ.நா.சபை அக்கறை காட்டியுள்ளது. ஐ.நா.சபை செயலாளரின் விசேட தூதுவர் ஒலரா ஒட்டுண்ணு விடுதலைப் புலிகளிடமும், அரசாங்கத்திடமும்-சிறுவர்களை யுத்தத்தில் ஈடுபடுத்த மாட்டோமெனப் பெற்றுக் கொண்ட உடன்பாடு இதற்கொரு உதாரணமாகும்.

அதனால் இலங்கைப் பிரச்சனை தொடர்பாக சர்வதேச சமூகத்திடம் ஏற்பட்டுவரும் படிப்படியான அக்கறையை நாம் உணரக் கூடியதாக இருக்கிறது.

இத்தகைய நிலையில்தான் இப்போது நோர்வே நாட்டின் மத்தியஸ்த முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நோர்வே, சர்வதேச சமூகத்தின் பிரதிநிதியாகவே இப் பேச்சுவார்த்தையில் இறங்கியுள்ளதென்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

எந்தவொரு சர்வதேச நாடும் நேரடியாக நோர்வேயைத் தமது பிரதிநிதியாக முன்மொழியாது விட்டாலும் அதற்கான மறைமுகமான ஒரு பொது அங்கீகாரத்தை வழங்கியுள்ளதை நாம் கண்டுகொள்ள வேண்டும்.

இதை, இப் பேச்சுவார்த்தை மத்தியஸ்தத்திற்கான முன்னேற்பாட்டு நடவடிக்கைகளுக்காக இலங்கை வந்து சென்ற நோர்வே நாட்டு வெளிநாட்டமைச்சர் நெட் வெல்லபெக்.

தமது செயற்பாடுகளைக் குறித்து விளக்கமளிக்கும்போது தெளிவுபடுத்தியிருந்தார்.

தாம், சர்வதேச நாடுகளின் விருப்பத்தின் பேரிலேயே இம் மத்தியஸ்த முயற்சியில் இறங்கியிருப்பதாகவும், அதேவேளை தம்மை சர்ச்சையற்ற ஏற்பாட்டாளராக சர்வதேச சமூகம் கருதுவதாகவும் அவர் தெளிவுபடுத்தினார்.

இவ்வேளையில் இந்தியாவின் முகம் கோணலுறுமா, என்ற ஒரு சந்தேகம் யாவருக்கும் இருக்கத்தான் செய்தது.

இந்தியா, தன்னை மீறி வேறொரு நாடு இலங்கைப் பிரச்சனையில் ஈடுபடுவதை அனுமதிக்கப் போவதில்லையென்றவொரு கணிப்பு இராஜதந்திர வட்டாரங்களில் இருந்து வந்தது.

ஆயினும், இதனை அனுசரித்து, "இப் பேச்சுவார்த்தைகள் குறித்து இந்தியாவுக்கும் தெளிவுபடுத்துவோம்" என்ற அறிவிப்பையும் நோர்வே விடுத்துள்ளது.

எவ்வாறாயினும் இது இப்பிரச்சனையில் இந்தியாவைக் கடந்து வைக்கப்பட்ட முதலாவது காலடி என்பது மறக்கப்பட முடியாதது.

இதுகுறித்து இந்தியா மௌனமாக இருக்குமா, அல்லது தனது முக்கியத்துவத்தை எடுத்தியம்பும் மாற்றுத் தந்திரோபாயங்களை வகுக்குமா, என்பதைப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும். இதில் 'இந்தியத் தேசிய நலன்' என்ற துருப்புச்சீட்டை இன்னும் அது தன் கைவசம் வைத்திருக்கிறதென்பதை மறந்துவிட முடியாது.

இது ஒரு புறத்தில் இருக்க, இப் பேச்சுவார்த்தைக்கான மேடையைத் தயாரிக்கும் முதற் பணி தற்போது பூர்த்தியாகியுள்ளது.

யாவரும் எதிர்பார்த்ததுபோல இரு தரப்பாலும் நிபந்தனைகள் போடப்பட்ட போதும், நோர்வே தனக்குரிய சாமர்த்தியமான அணுகுமுறையுடன் அந் நிபந்தனைகள் மீது முதற்கட்டத்தில் பார்வை செலுத்தாமல் தனது மத்தியஸ்தத்துக்கான அடிப்படைகளை நிலை நிறுத்துவதிலேயே கவனம் செலுத்தியது.

அது புலிகள், இலங்கை அரசாங்கம், இலங்கை எதிர்க்கட்சி ஆகியவற்றுடன் நடத்திய பேச்சுக்களில் 'தான், இப் பேச்சுவார்த்தைக்கான அனுசரணையாளர்களாகச் செயற்படுவதை இம் மூவரும் அங்கீகரிக்கிறார்களா' என்ற உறுதி மொழியைப் பெறுவதையே குறிக்கோளாகக் கொண்டிருந்தது.

அவ்வாறான உறுதி மொழியை அது மூவரிடமிருந்தும் பெற்றுக்கொண்டும் உள்ளது. இது ஒரு அடிப்படையான அடித்தளத்தை இங்கே போட்டுள்ளது.



அதாவது, இம் மூன்று தரப்பினரும் நோர்வேயின் மத்தியஸ்தத்துக்குச் சம்மதம் தெரிவித்திருப்பதானது, நோர்வே இதில் வலுக்கட்டாயமாக நுளையவில்லையென்பதையும் இவர்களின் விருப்பத்தின் பேரிலேயே ஈடுபடுகின்றதென்பதையும் ஆரம்பத்திலேயே உறுதிப்படுத்திக் கொள்வதாய் உள்ளது.

இந்த முன்னேற்பாடு, பின்னொரு தருணத்தில் எத்தரப்பினரும் நோர்வேயின் மத்தியஸ்தத்தை நிராகரிப்பதை நியாயப்படுத்த முடியாது செய்யும் ஏற்பாடாக அமைந்துள்ளது.

அடுத்ததாக, நோர்வே உறுதிசெய்து கொண்ட விடயம், 'புலிகளும், அரசாங்கமும் இனப்பிரச்சனைக்குத் தீர்வுகாண ஒருவரோடொருவர் பேச்சுவார்த்தை நடத்துவதற்குத் தயாராக உள்ளார்களா' என்பது குறித்து இவ்விரு தரப்பினரதும் தெளிவான பதிலைப் பெறுவதாகும்.

அவ்வாறு இருதரப்பினரும் பேச்சுவார்த்தையை முதலில் ஏற்றுக்கொள்ளுவதென்பது பேச்சுவார்த்தை ஒன்றுக்கான அடிப்படையான விடயமாகும். அதனையே நோர்வே உறுதிப்படுத்திக் கொண்டது.

இதையடுத்து நோர்வே இந்த முதற்கட்ட நகர்வுகளில் தெளிவுபடுத்திய விடயம் 'தான் இங்கொரு 'அனுசரணையாளராகவே' (பசிலிடேட்டராகவே) செயற்படுவதாகக்' கூறியுள்ளது. அதாவது எத்தரப்பினர் மீதும் அவற்றின் இறைமையையும் சுயாதிக்கத்தையும் மீறும் நிர்ப்பந்தங்களையோ, பலவந்தங்களையோ மேற்கொள்ளாத பங்களிப்பையே தான் மேற்கொள்ளவுள்ளதாகத் தெளிவு படுத்தியுள்ளது.

இத்தகைய நிலை எத்தரப்புக்கும் அச்சத்தை ஏற்படுத்தாத ஒன்றாகும். ஆனால் இவ்வகை 'அனுசரணையாளர்' என்ற பாத்திரத்தால், இணக்கம்காண முடியாத நிலையிலுள்ள இப் பிரச்சனை எவ்வளவு தூரம் முன்னேற்றம் காணலாம் என்ற கேள்வி அவதானிகளிடத்தில் இருக்கவே செய்கிறது.

ஆயினும் அனுபவம் வாய்ந்த நோர்வே வெளிநாட்டமைச்சர், 'அனுசரணையாள'ரென்ற வகையில் செய்யக்கூடிய நிறைய விடயங்கள் உள்ளனவென நம்பிக்கையோடு பதிலளிக்கிறார்.

இந்த நம்பிக்கையின் பின்னால் சர்வதேச சமூகத்தின் கரங்கள் உள்ளனவென்பதே இங்கே புலப்படக்கூடியதாய் உள்ளது.

நோர்வே 'அனுசரணையாளர்' என்ற பாத்திரத்தைக் காட்டிக்கொண்டால் அதற்குப் பின்னாலிருக்கக்கூடிய சர்வதேச சமூகம் பலவிதமான நிர்ப்பந்தங்களை இருதரப்பினர் மீதும் நேரடியாகவோ, மறைமுகமாகவோ மேற்கொள்ளக்கூடிய வாய்ப்பு உள்ளது.

இவ்விரு தரப்பினதும் பிரதானமான பிடிமானங்கள் இன்று சர்வதேச சமூகத்திடமே உள்ளன.

இலங்கை அரசின் செயற்பாட்டுக்கான கடனுதவிகள், தொழில்நுட்ப உதவிகள், பயிற்சிகள் என்பவற்றோடு, யுத்தத்துக்கான ஆயுத வினியோகத்துக்கும் சர்வதேச சமூகத்திலேயே இலங்கை தங்கியுள்ளது. அதன் முன் தனது நற்பெயரை நிலைநாட்டுவது இலங்கைக்கு அவசியமான ஒரு விடயமாகிப்போனது.

"மலேரியா ஒழிப்பு, முதலுதவி, போன்றவற்றுடன் ஐ.நாவின் அக்கறை நின்றுவிட வேண்டும், உள்நாட்டு விடயங்களில் தலையிடக்கூடாது" என்று அண்மையில் இலங்கை வெளிநாட்டமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கூறியிருந்ததைப் போல் சர்வதேச சமூகம் தான தருமங்களை மட்டும் செய்து கொண்டு கைகட்டி நிற்கின்ற ஒரு நிலை இப்போது இல்லை.

தற்போது நோர்வே அரசாங்கம் பேச்சுவார்த்தைக்கான அனுசரணையாளராக இறங்கியிருப்பதுகூட அந்த நிலையைத் தாண்டிய ஒரு பிரவேசம்தான்.

-நரன்-

இதேபோல் மறுப்பக்கத்தில் விடுதலைப் புலிகளின் தரப்பிலும் சர்வதேச சமூகத்தின் பிடி உள்ளது.

இன்று இனப்பிரச்சனை காரணமாக வெளிநாடுகளில் புலம் பெயர்ந்திருக்கும் பெருந்தொகையான தமிழ் மக்கள் இச் சர்வதேச சமூகத்தின் வசம் உள்ளனர். அத்தோடு சர்வதேச நாடுகளில் தான் விடுதலைப் புலிகளின் போராட்டத்துக்கான பரந்துபட்ட செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எனவே சர்வதேச சமூகம் நிர்ப்பந்திக்க விளைந்தால் அதற்கு எதிராகச் செயற்படுவது இரு தரப்பினருக்கும் சிரமமானதாக இருக்கும்.

அவ்வாறான ஒரு நிர்ப்பந்தம் எடுத்த எடுப்பில் இப்போதே ஏற்படுமென்று சொல்வதற்கில்லையாகிலும் பின்னர் எக்கட்டத்திலாவது ஏற்படமாட்டாதெனக் கூறுவதற்கில்லை.

அத்தோடு இப்போது அனுசரணையாளர்களாகச் செயற்படும் நோர்வே, அப் பாத்திரம் முடிந்தபின், இப் பேச்சுவார்த்தையை முன்னெடுத்துச் செல்ல சில நிர்ப்பந்தங்கள் செலுத்தப்படவேண்டுமென்ற நிலையை உணரும்போது, அத்தகைய ஒரு 'பெரிய கையை' இப் பேச்சுவார்த்தைக்குள் அழைத்து வரக்கூடுமென்பதையும் எதிர்பார்க்காதிருக்க முடியாது.

இஸ்ரேல்-பாலஸ்தீன விடுதலை இயக்கப் பேச்சுவார்த்தைகளில் நோர்வே ஆரம்ப ஏற்பாடுகளைச் செய்தாலும் அமெரிக்காவே நிர்ப்பந்தம் செலுத்தும் 'பெரியகை'யாக முதலில் திரைமறைவிலியங்கி, பின்னாளில் பகிரங்கமாகவே முன்னின்றதை நாம் அறிவோம்.

இது ஆரம்பந்தான். போகப்போக பல மாறுபட்ட காட்சிகள் அரங்கேறலாம்.

இதேவேளை இப் பேச்சுவார்த்தையின் அடுத்த கட்ட நகர்வாக இலங்கை அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் நேரடிச் சந்திப்பிற்கான ஏற்பாடு நோர்வேயில் ஒஸ்லோவில் ஏற்பாடாகியுள்ளது.

இப்போதுதான் நிபந்தனைகள் என்பவற்றை எவ்வாறு நோர்வே இங்கு கையாளப் போகின்றது என்பதை நாம் பார்க்க வேண்டியிருக்கும்.

புலிகள் இப்பேச்சுவார்த்தைகளில் நோர்வேயிடம் முன்வைத்துள்ள முக்கிய நிபந்தனைகளிலொன்று 'அரச படைகள் 1995ம் ஆண்டுக்கு முன்னைய நிலைக்குப் பின்வாங்க வேண்டும்' என்பது.

அதாவது யாழ்ப்பாணத்தை இலங்கை இராணுவம் கைப்பற்றியதற்கு முன்னைய நிலைக்கு இராணுவம் செல்ல வேண்டுமென்பது.

அவ்வாறான நிபந்தனைக்கு இலங்கையை இணங்கும்படி கோர நோர்வேயால் முடியாது. அதேபோல் இலங்கை அரசாங்கம் முன்வைத்த நிபந்தனைகளில் ஒன்றான, 'புலிகள் ஆயுதங்களைக் கைவிட வேண்டும்' என்ற நிபந்தனையையும் நோர்வே, புலிகளிடம் வலியுறுத்த முடியாது

எனவே இத்தகைய நிபந்தனைகளின் தடையை உடைத்து பேச்சுவார்த்தைக்கான அரங்கைச் செப்பம் செய்ய இந் நிபந்தனைகளை வேறுவிதமாகக் கையாள வேண்டிய ஒரு தந்திரோபாயத்தை நோர்வே வகுக்க வேண்டியிருக்கும். அதன் திறமை இங்குதான் உண்மையில் பரீட்சிக்கப்படப் போகிறது.

இதைச் சமாளித்துக்கொண்டு, அடுத்ததாக நோர்வேயின் குறி 'யுத்த நிறுத்தமொன்றை ஈட்டுவது எப்படி' என்பதாகவே இருக்கும். அப்போதுதான் இப் பேச்சுவார்த்தை முயற்சி ஒரு 'சீரியஸான' கட்டத்தை எட்டியதாய்ப் பார்க்கப்படும்.

இதேவேளை, மறுபுறத்தில் வேறுவிதமான செயற்பாடுகள் இடம் பெற்று வருகின்றன. ஒருபுறம் அரசாங்கம் தீர்வுத் திட்டம் தொடர்பாக நடத்தும் பேச்சுவார்த்தை ஒரு சில கட்டங்களைக் கடந்து இப்போது எதிர்க்கட்சியுடன் ஆலோசிக்கும் நிலையை நோக்கி நகர்ந்துகொண்டிருக்கிறது. தமிழ்க் கட்சிகளுடனான ஆராய்வுகளில் இன்னும், முக்கியமான சில விடயங்கள் ஆராயப்படவில்லை. அதில் வடக்கும் கிழக்கும் இணைந்திருந்த அலகா பிரிந்த அலகா என்பது அதிமுக்கியமான விடயம்.

இது ஒருபுறமிருக்க மறுபுறம் யாழ்ப்பாணத்தில் யுத்த மேகங்கள் சூழ்ந்த நிலை காணப்படுகிறது. ஆனையிறவு முகாமைத் தாக்கும் முனைப்பில் புலிகள் இப்போது அதிகரித்த செயற்பாடுகளில் இறங்கியுள்ளனர்.

யாழ்ப்பாணத்துக்குள்ளும் புலிகளின் கிளைமோர் தாக்குதல் ஒன்று நிகழ்ந்துள்ளது. இராணுவத்தின் ஹெலிகொப்டரொன்று புலிகளால் சுடப்பட்டு கொடிகாமத்தில் வீழ்ந்துள்ளது.

அதே சமயம் புலிகளின் காவலிலுள்ள இராணுவத்தினர் சிலர் விடுதலை கோரி சாகும்வரை உண்ணாவிரதத்தில் குதித்துள்ளனர். அவர்களைப் பார்க்க உறவினர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

புலிகளின் காவலிலுள்ளவர்கள் புலிகளை மீறி இந்த உண்ணாவிரதத்தை நடத்த முடியாது. எனவே புலிகளின் முக்கியமான ராஜதந்திர நகர்வு ஏதாவது இந்த உண்ணாவிரதத்தில் எதிர்பார்க்கப்படுகிறது.

அவ்வுண்ணாவிரதத்தைப் பிரபலமாக்கி அப் படை வீரர்களை விடுதலை செய்வதன் மூலம் தம்மிடம் சரணடையும் படை வீரர்களுக்கு அபாயமில்லை என்ற செய்தியை புலிகள் இராணுவத்தினருக்கு விடுப்பதாகவும் இது அமையலாம். அப்படியானால் பேச்சுவார்த்தையில் யுத்த நிறுத்தம் ஏற்படுவதற்கிடையில் பாரிய ஒரு இராணுவ நடவடிக்கையை புலிகள் மேற்கொள்ளலாமென எதிர்பார்க்கலாம்.

பேச்சுவார்த்தைக்கிடையில் எவ்வளவு பலமான நிலைக்குச் செல்ல முடியுமோ அந்தளவு பலமான நிலையை ஈட்டுவதற்கான முயற்சியாக இந் நடவடிக்கைகள் அமையலாம்.

-ஸ்பெஷல் ரிப்போர்ட்-

# புலிகள் இயக்கத்தின் வெற்றியின் இரகசியங்கள்

சத்தியன்

புலிகள் வகுத்த
திய தந்திரோபாயம்
இரண்டு விடயங்களை
அடிப்படை நோக்கமாகக் கொண்டு
தீட்டப்பட்டது.

ஒன்று இராணுவ அம்சம்;
அடுத்தது அரசியலம்சம்.

இராணுவ ரீதியில்
இந்தியப் படைகளுடன்
மோதுவது விரயமானது.
இந்தியப் படைகளுடன்
எவ்வளவு வீரமுடன் மோதினாலும்.
இராணுவ ரீதியில்
தோற்கடிக்க முடியாது.

காரணம், இந்தியப் படைகள்
எண்ணிறந்தவை.
படைவீரர் பற்றாக்குறையென்பது
அவர்களுக்கு இல்லவே இல்லை.

மடை திறந்த வெள்ளம்போல்
எல்லாப் பிரதேசங்களிலும்
நிரவி நிற்கக்கூடிய ஆட்பலம்
அவர்களிடம் இருந்தது.

எத்தனைபேரைக் கொன்றாலும்
புற்றீசல் போல
வந்துகொண்டேயிருப்பார்கள்.
இந்தச் சண்டை
அர்த்தமற்று நீடித்தால்
படிப்படியாகப்
புலிகளின் பக்கம்தான்
பலஹீனமுற நேரிடும்.

அத்தோடு,
இந்தியப் படைகளுடனான
யுத்தத்திலேயே மூழ்கிப் போனால்
புலிகள் தங்கள்
பிரதான பாதையை விடுத்து
கிளைப்பாதை ஒன்றிலேயே
இழுத்தடித்துச் செல்லப்படுவர்.

எனவேதான்,
இந்தியப் படைகளுடனான
யுத்தத்துக்கு
முற்றுப்புள்ளி வைக்கவேண்டிய
இராணுவத் தேவையொன்று
அவர்களுக்கு இருந்தது.

இதேவேளை மறுபுறத்தில்
அரசியல் ரீதியாக இருந்த சவால்
வட-கிழக்கு மாகாண சபையாகும்.

இதன் மூலம்
புலிகளுக்கு மாற்றீடாக
வேறொரு அரசியல்
தலைமையொன்று
நிலைநிறுத்தப்பட்டு வந்தது.

அந்த ஆட்சிதான்
தமிழ்பேசும் மக்களின்
அங்கீகரிக்கப்பட்ட
அரசியல் தலைமையாக
வெளியுலகுக்கு
வெளிப்படுத்தப்பட்டு வந்தது.

இது,
விடுதலைப் போராட்டத்தின்
தலைமைப் பாத்திரத்தைக்
கைப்பற்றிக் கொள்வதற்காக
விடுதலைப் புலிகள்
மேற்கொண்ட நடவடிக்கைகள்
அனைத்தையுமே
கேள்விக்கிடமாக்கிவிட
முற்பட்டது.

இந்த முயற்சி
பாரிய உபகண்டமான
இந்தியாவின் துணையோடு
மேற்கொள்ளப்படும்போது,
காலப் போக்கில்
புலிகளை வழிமறிக்கும்
பலமான சுவராக
எழும்பிவிடவும் கூடும்.

இதேவேளை,
விடுதலைப் போராட்டத்தில்
மக்களை இட்டுச் செல்ல
புலிகள் காட்டும் திசைவழியன்றி
வேறோர் அரசியல் மார்க்கம் பற்றிய
நம்பிக்கைகளும் வேரூன்றத்
தொடங்கலாம்.

அதனால்,
மக்கள் மத்தியில்
இரண்டுபட்ட கருத்துப் போக்குகள்
விவாதிக்கப்படும் நிலை
தோன்றலாம்.

ஆயுதப் போராட்டத்துக்கான
கடுமையான பாதையை விடுத்து
மாற்றுப் பாதையின் பக்கம்
நாட்டம் கொள்வதற்கு
மக்கள் தூண்டப்படலாம்.

இது புலிகள் மேற்கொள்ளும்
விடுதலைப் போராட்டத்திற்கான
மக்கள் ஆதரவைக்
குலைவுறச் செய்யலாம்.

அதனால் இந்த
மாகாணசபை அரசாங்கத்தைக்
கலைக்க வேண்டிய அரசியல்
தேவையும்
புலிகளுக்கிருந்தது.

இவற்றை அடிப்படையாகக்
கொண்டே
புலிகளின் திட்டம்
வகுக்கப்பட்டது.

அதேவேளை,
மாகாண அரசைக்
கைப்பற்றிக் கொண்ட
ஈ.பி.ஆர்.எல்.எப். இயக்கத்திடமும்
இன்னோர் திட்டம்
வகுக்கப்பட்டிருந்தது.

ஈ.பி.ஆர்.எல்.எப். இயக்கமானது
இராணுவ ரீதியில் பலஹீனமான
இயக்கமாக இருந்தாலும்,
அரசியல் ரீதியில்
ஆற்றலுள்ள ஓர் இயக்கமாகும்.

விடுதலைப் புலிகளால்
ஓரங்கட்டப்பட்ட பின்
மீண்டும் தழைப்பதற்கான
சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக்
காத்திருந்த வேளையில்தான்
புலிகளுடன் பிரச்சனையுற்ற
இந்திய அரசு
இலங்கை-இந்திய ஒப்பந்தம்,
மாகாண சபை அரசாங்கம்
ஆகியவற்றை நிறைவேற்ற முடியாத
கையறு நிலையில் இருப்பதைக்
கண்டது.

இந்தச் சந்தர்ப்பத்தைச்
சரியாகப் பயன்படுத்தி,
மாகாணசபை அரசைக் கைப்பற்றி,
மக்கள் அங்கீகரித்த தலைமையாக
அதிகார பலத்தை
ஈட்டிக்கொள்ளவும்,
மாற்றுத் தீர்வுக்கு வழிகோலுகின்ற
மற்றோர் தலைமையாக
வெளிக்காட்டிக் கொள்ளவும்,
இந்திய அரசைப் பயன்படுத்தியே
இலங்கை அரசை அடிபணியச்
செய்யவும்,
இந்திய அரசின் இராணுவ
பலத்துடன்
விடுதலை புலிகளை ஓரங்கட்டவும்,
ஒரு சேர முயற்சிக்க
அவர்கள் முனைந்தார்கள்.

இங்கே அவர்கள் ஒரேயடியாக
நான்கு பாரங்களைச்
சுமக்க முனைந்தார்கள்.

தமது இயக்கத்தைப்
பலப்படுத்திக் கட்டியமைத்து
மக்கள் அங்கீகாரத்தைப்
பெறுவது ஒருசுமை.
மாகாண அரசாங்கத்தின்
கட்டமைப்பை நிறுவி
நிர்வகிப்பது மறுசுமை.

இலங்கை அரசாங்கத்தை
எதிர்த்து சவால் விட்டு
அடிபணியச் செய்வது
மற்றோர் சுமை;
இவற்றையெல்லாம்விட
விடுதலைப்
புலிகளுக்கெதிரான
போராட்டத்தை
நடத்தி
வெற்றி கொள்வது
பாரிய சுமை.



இந்தியாவைப்
பயன்படுத்தியே
இந்த நான்கையும்
நிறைவேற்றி
விடலாமென
அவர்கள் கணக்குப்
போட்டனர்.

இந்தியாமீது அபார
நம்பிக்கை வைத்தே
அனைத்து
விடயங்களையும்
ஒருசேர சாதிக்க
முயற்சி செய்தனர்

இதிலே அவர்கள்
இரண்டு பாரிய
தப்புக் கணக்குகளை
மேற்கொண்டு விட்டனர்.

இந்திய இராணுவம்
இவ்வளவு விரைவில்
இலங்கையை விட்டு
வெளியேற மாட்டாதென
அவர்கள் எண்ணியது
முதலாவது தவறு.

அடுத்த விடயம்
எதிர்பார்க்காத ஒன்று.
விடுதலைப் புலிகள், தங்களுடைய
பிரதான எதிரியாக இருந்து வந்த
இலங்கை அரசுடனேயே
கூட்டுச் சேரும்
தந்திரோபாயத்தை
மேற்கொள்ளத் துணிவரென
இவர்கள் ஒருபோதும்
எண்ணியிருக்கவில்லை.

இந்த இரண்டு
தப்புக் கணக்குகளும்தான்
ஈ.பி.ஆர்.எல்.எப்.பின்
பாரிய திட்டத்தைத்
தவிடுபொடியாக்கின.

இவற்றையெல்லாம் எதிர்பார்த்திராத
ஈ.பி.ஆர்.எல்.எப் இயக்கமானது
இந்தியாவின் ஆலோசனைப்படி
விடுதலைப் புலிகளை
முறியடிப்பதற்காக
பாரிய இராணுவமொன்றைக்
கட்ட முற்பட்டனர்.

இந்தத் திட்டத்தின் வாயிலாக
ரி.என்.ஏ. என்னும்
தமிழ் தேசிய இராணுவத்தை
ஏனைய இயக்கங்களுடன்
கூட்டாக நிறுவினர்.


20 ஆயிரம் பேரைக் கொண்ட
பாரிய படையாக இதனை அமைக்க
இந்திய அரசு
நிர்ப்பந்தித்ததையடுத்து
அவசரமான படை திரட்டலுக்காக
ஆட்கள் பிடிக்கும்
நடவடிக்கையில் இறங்கினர்.

இதனால் அவர்கள் மக்கள் மத்தியில்
அவப் பெயரினை ஈட்டிக்
கொண்டனர்.
இவ்வாறான அவப்பெயருக்கு
உள்ளாக நேருமென
அவர்களுக்குத் தெரிந்திருந்தும்,
துணிந்து இவர்கள் இந்த
முயற்சியில்
இறங்கியதற்கும் காரணமுண்டு.

எவ்வளவுக் கெவ்வளவு
தலைகளின் எண்ணிக்கையை
கணக்குக் காட்டுகிறார்களோ
அவ்வளவுக் கவ்வளவு
தொகையான ஆயுதங்களை
இந்திய அரசிடமிருந்து
பெற்றுக்கொள்ள முடியுமென்பது
ஒரு விடயம்.

இதனையும்விட இன்னொரு கணிப்பு
அவர்களிடமிருந்தது.
பலவந்தமாகப் பிடித்து வந்தாலும்
பிடித்தவர்களில் பெரும்
பகுதியினரை
பயிற்சியாலும் கருத்துக்களாலும்,
ஊதியம் மற்றும் சலுகைகளாலும்
நாளடைவில் மாற்றிக் கொள்ளலாம்
என்ற ஒரு நம்பிக்கை இருந்தது.

அவ்வாறு அவர்களில்
பெரும்பகுதியினர்
மாற்றப்பட்டு விடுகின்ற பட்சத்தில்
முரண்டு பிடிக்கும்
சிறுபகுதியினரைத்
திருப்பியனுப்பி வைப்பதன் மூலம்
விருப்பத்துடன்தான் சேர்த்துக்
கொண்டதாக
இருப்பவர்கள் மூலமே
விளக்கமளிக்கலாம்.



இவ்வாறு தம்மோடு இணைக்கப்பட்ட
இளைஞர்களின் பெற்றோர்,
உறவினரும்
பிற்காலத்தில் ஆதரவாளர்களாக
மாறி வரவும் சாத்தியமுண்டு.

முன்னைய காலத்தில்
இயக்கத்தில் சேர்ந்த பிள்ளைகளின்
பெற்றோர்
ஆரம்பத்தில் எதிர்ப்புத்
தெரிவித்தாலும்
ஆதரவாளர்களாகப் பின்னர் மாறிய
அனுபவம் அவர்களுக்கிருந்தது.

இந்தக் கணிப்பு சரியா தப்பா
என்பதைக்
காலம்தான் தீர்ப்பளிக்க
வேண்டியிருந்தது.

ஆனால்,
காலம் அவர்களை ஏமாற்றி விட்டது.
ஏனெனில், அவர்களின் கணிப்பைச்
சரிபார்ப்பதற்குரிய
அவகாசத்தை அது வழங்கவில்லை.

இடையில் குறுக்கிட்ட இந்தியத்
தேர்தல்
அவர்களின் எண்ணத்துக்கு
உலைவைத்து விட்டது.

ராஜீவின் அரசாங்கம் கவிழுமென
அவர்கள் அப்போது
எதிர்பார்க்கவில்லை.

அதே தருணத்தில்
இலங்கை ஜனாதிபதி பிரேமதாஸா
புலிகளோடு கூட்டுச் சேர்ந்து
இந்தியப்படைகளை விலக்கிக்
கொள்ளும்படி
மேற்கொண்டு வந்த பாரிய
அழுத்தத்துக்கு
இந்திய அரசு இணங்குமென்றும்
அவர்கள் சிறிதும்
எதிர்பார்க்கவில்லை.

பலவந்தமாகத் திரட்டப்பட்ட
பயிற்றப்படாத
பெருந்தொகையானோரைக்
கட்டியாள முடியாத கையறு
நிலையில்
ஈ.பி.ஆர்.எல்.எப். விடப்பட்டது.

காலப்போக்கில் அவப்பெயர்
நீங்குமென்று
அவர்கள் போட்ட கணிப்புக்கு
மாறாக
காலம் அவர்களைக் கைவிட்டுப்
போனது.
அவப் பெயர் மட்டும் ஒட்டிக்
கொண்டது.

இந்தத் தருணத்தில்தான்
புலிகளின் இராஜதந்திரம்
மிகக் கச்சிதமாக
வேலை செய்தது.

மிக மிக இக்கட்டான
ஒரு காலத்தை
புலிகள் சமாளித்து
வெற்றி கொண்ட விதம்
வியப்புக்குரியது.

இலங்கை, இந்தியா
ஈ.பி.ஆர்.எல்.எப். ஆகிய
மூன்று எதிரிகளை முகம் கொடுத்த
புலிகள்,
அதைச் சமயோசிதமாகக்
கையாண்ட விதம் இங்கே
எடுத்து நோக்கப் படவேண்டியது.

ஈ.பி.ஆர்.எல்.எப்.
நான்கு சவால்களையும்
ஒரேயடியாக எதிர்கொள்ள
முனைந்தது போல்
அவர்கள் முனையவில்லை.

ஓர் எதிரியைப் பயன்படுத்தி
மற்றைய எதிரிகளை முறியடித்து,
பின்னர் முதலாவது எதிரியைத்
தனிப்படுத்தி முகம் கொடுக்கும்
நுட்பமான அரசியல் தந்திரத்தை
அவர்கள் கையாண்டனர்.

மாக்கியோ வல்லி என்ற
முதலாளித்துவச் சித்தாந்தவாதி
'த, பிரின்ஸல்' என்ற
இராஜதந்திர நூலில்
"உனக்கு மூன்று எதிரிகளிருந்தால் -
இருவரோடு சேர்ந்து ஒருவனை
அழி,
பின் ஒருவனோடு சேர்ந்து
மற்றவனை அழி,
இறுதியில் தனித்திருப்பவனை அழி"
என்று கூறிய
அரசியல் சாணக்கியத்தை
புலிகளே இங்கே
அரகேற்றியிருந்தார்கள்.

இதன்படியே,
இந்தியாவையும்
ஈ.பி.ஆர்.எல்.எப்.பையும்
திருப்பி அனுப்பிவிட்டு
தனித்து விடப்பட்ட
இலங்கை அரசுடன்
தருணம் பார்த்து மோதலைத்
தொடங்கினர்.
அந்த மோதலை
அடுத்த இதழில் பார்ப்போம்.

(இன்னும் நகரும்) □

இலங்கை இனப்பிரச்சனையைத் தீர்த்து வைக்கும் விதத்தில் தமது பூர்வாங்கப்பணிகளை ஆரம்பித்திருக்கும் நோர்வே வெளிநாட்டமைச்சர் நெட் வெல்லபெக் கடந்த வாரம் கொழும்பு வந்திருந்தார்.

அதிகம் அலட்டிக்கொள்ளாது, கூடவே பயனற்ற சந்திப்புக்களையும் மேற்கொள்ளாது, திரு.வெல்லபெக் ஒரு நாளிலேயே தாம் வந்த அலுவலைக் கவனித்துவிட்டு நாடு திரும்பியிருந்தார்.

ஜனாதிபதி சந்திரிக்கா, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, வெளிநாட்டமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் ஆகியோரை மட்டும் திரு.வெல்லபெக் கணிசமானளவு நேரம் சந்தித்து உரையாடியிருந்தார்.

நான்காவது தீர்வு முயற்சியாக சந்திரிக்கா அரசுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே 1995ம் ஆண்டில் பேச்சுக்கள் இடம் பெற்றிருந்தன.

மேற்குறிப்பிட்ட அனைத்து முயற்சிகளுமே தோல்விகளைத் தழுவியிருந்தன. அத்துடன் எவ்விதத்திலும் போதியளவு புரிந்துணர்வுடனும், விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையுடனும் அவை இடம் பெற்றிருக்கவில்லை.

இந்நிலையில் சுமார் ஐந்து வருடங்களின் பின்னர் ஐந்தாவது தடவையாக நோர்வே அரசின் பங்களிப்புடன் தற்போது இனப் பிரச்சனைத் தீர்வு சம்பந்தமான பூர்வாங்க நடவடிக்கைகள் ஆரம்பமாகியுள்ளன.

இப்புதிய தீர்வு முயற்சி நோர்வே வெளிநாட்டமைச்சர் குறிப்பிட்டது போல முதலாவதாக இலங்கையின் தற்போதைய அரசியல் அமைப்பு 'உதவாக்கரை'யானதொன்றென அனைத்துத் தரப்பினராலும் இனங்காணப்பட்டுள்ளது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதிப் பதவியைக் கொண்டதாக இருக்கும் இன்றைய இலங்கையின் அரசியலமைப்பு, பாராளுமன்ற அரசியலின் முக்கியத்துவத்தை இழக்கச் செய்து தனிநபர் ஒருவரிடம் அனைத்து அதிகாரங்களையும் குவித்துவிட்டுள்ளது.

ஏறத்தாழ ஒரு சர்வாதிகாரிக்கு நிகரானவராகவே இலங்கையின் ஜனாதிபதியை இன்றைய அரசியலமைப்பு உருவாக்கியுள்ளது.

ஜனாதிபதியாகவிருந்த ஜே.ஆர்.ஜயவர்த்தன 1978ம் ஆண்டிலேயே தற்போதைய நிறைவேற்று

அலசுவது - இராஜதந்திரி

கண்டித்துள்ளார்.

இருந்தபோதிலும் ஐ.தே.கவின் தலைவரும், ஜே.ஆரின் உறவினருமான எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க எவ்வளவு தூரம் ஆளுந்தரப்புக்கு உத்தேச அரசியலமைப்புச் சீர்திருத்த விடயத்தில் ஒத்துழைப்பார் என்பது கேள்விக்குரியதாகவே இருக்கின்றது.

இந்நிலையில் தற்போதைய நிறைவேற்று அதிகார அரசியல் யாப்பு முழுநாட்டையும் பாதித்துவிட்டுள்ள அதேசமயம், இனப்பிரச்சனைகூட முழுநாட்டையும்,

இது இவ்வாறிருக்க, கடந்த வாரம் நோர்வே வெளிநாட்டைச்சர் திரு.நெட் வெல்லபெக் தமது இலங்கை விஜயத்தை முடித்துக்கொண்டு ஒஸ்லோ திரும்பிய மறுகணம் கொழும்பிலுள்ள நோர்வே தூதரகம் முன்பாக சில சிங்கள பேரினவாதக் கட்சிகள் கூச்சலிட்டுள்ளன.

இலங்கை இனப்பிரச்சனைத் தீர்வில் நோர்வேயின் தலையீட்டை அவை கண்டித்துள்ளன.

இன்று நேற்றல்ல, இனப்பிரச்சனை தோற்றம் பெற்ற காலம் முதல் சமரச

# இனப்பிரச்சனைத் தீர்வு கடினமான பணி என்பதை உணரும் வெல்லபெக்

முக்கியமான பணியொன்றில் இறங்குபவர்கள் வீண் விடயங்களைப் பேசுவதையும், வீணே நேரத்தை விரயமாக்குவதையும் தவிர்த்துக் கொள்வார்கள்.

எனவே திரு.வெல்லபெக்கூட எதனையும் வீணடிக்க விரும்பாது நேரடியாகவே செயலில் இறங்கியுள்ளதையே அவதானிக்க முடிந்தது.

கொழும்பு வருமுன்னர் இலங்கைப் பிரச்சனைபற்றி தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அபிப்பிராயங்களையும் திரு.வெல்லபெக் கேட்டறிந்திருந்தார்.

கொழும்புப் பயணத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பு முன்னர் அறிக்கையொன்றையும் அவர் வெளியிட்டிருந்தார். அந்த அறிக்கை மிகச் சுருக்கமானதாகவே இருந்தது.



அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையைக் கொண்ட அரசியலமைப்பை இலங்கையில் அறிமுகஞ்செய்து வைத்தார். அத்துடன் அவரே இந்த ஆட்சிமுறையின் முதலாவது ஜனாதிபதியாகவும் விளங்கினார்.

ஜே.ஆர்.ஜனாதிபதியாக இருந்த சமயத்தில் அவரது அமைச்சரவையில் நிதி அமைச்சராக இருந்தவரே திரு.ரொனி டி மெல். திரு.டிமெல் ஓர் அரசியல் வாதி மட்டுமல்ல,

இலங்கையின் நிர்வாக சேவையில் ஒரு

குறிப்பாக தமிழ் மக்களையும் வெகுவாகவே பாதித்துவிட்டுள்ளது.

இலங்கையில் இதுவரை காலமும் கொண்டு வரப்பட்ட அரசியலமைப்புக்களில் அழுத்தம் திருத்தமாக தமிழ் பேசும் மக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

எனவே இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வொன்றைக் காண்பதற்கான நோர்வேயின் மத்தியஸ்த நடவடிக்கைகள் ஆரம்பமாகியுள்ள இத்தருணத்தில், மறுபுறத்தே உத்தேச அரசியல் அமைப்புச் சீர்திருத்தம் பற்றியும் கவனத்தில் எடுக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் எதிர்கால அரசியல் காத்திரமடைவதற்கும், இனப்பிரச்சனை ஒரு முடிவுக்கு வருவதற்கும்,

நடவடிக்கைகளைக் குழப்பிவிடுவதில் பேரினவாதக் கட்சிகள் விழிப்பாகவே இருந்து வருகின்றன.

'வெண்ணை திரண்டு வரும்போது தாளியை உடைக்கும்' செயலாகவே பேரினவாதக் கும்பல்களின் இக் கூச்சல்கள் விளங்குகின்றன.

இத்தகைய கும்பல்களால் தெளிவான சிந்தனைகளைக் கொண்டுள்ள மக்களைக்கூடத் திசை திருப்பிவிட முடியும். கடந்த காலங்களில்கூட இதுவே நடந்திருந்தது.

எனவே கால்நடைகள் மத்தியில் மட்டும் கட்டாக்காலிகள் காணப்படவில்லை. மனிதரிடையே கூட 'கட்டாக்காலிகள்' இருந்து தொல்லை கொடுப்பதையே பேரினவாதிகளின் செயல்கள்

# அரசியல் 'கட்டாக்காலிகளை' கட்டிப் போடவேண்டியது அவசியம்!

இலங்கை அரசாங்கம் கேட்டுக் கொண்டதன் பேரிலும், தமிழீழ விடுதலைப் புலிகளின் விருப்பத்தையடுத்துமே நோர்வே இலங்கை இனப்பிரச்சனையைத் தீர்த்து வைக்க முன்வந்துள்ளது. எனினும் இப்பிரச்சனையைத் தீர்த்து வைப்பதற்கு பிரச்சனையில் சம்பந்தப்பட்டவர்களிடையே புரிந்துணர்வு, விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை என்பன தேவைப்படுகின்றது என்று திரு.வெல்லபெக் தமது அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார்.

கூடவே இனப்பிரச்சனைக்கான தீர்வைக் காண்பதற்கு துணிச்சலும், தியாகமனப்பாங்கும் தேவை. இதுவோர் கடினமான பணி; பிரச்சனையைத் தீர்க்க நிறையவே காலமெடுக்கும். அத்துடன் இலங்கைப் பிரச்சனையை அரசியல் அணுகுமுறை மூலமாகவே தீர்க்க முடியுமென்றும் திரு.வெல்லபெக் தமது சுருக்கமான அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளார்.

இலங்கை இனப்பிரச்சனையில் ஆயுதப் போராட்டம் முனைப்படைந்ததையடுத்து இடம்பெறும் ஐந்தாவது தீர்வுமுயற்சியாகவே நோர்வேயின் பங்களிப்புக் காணப்படுகின்றது.

முதல் முயற்சியாக பூட்டானில் திம்புப் பேச்சு வார்த்தை இடம்பெற்றது. அதன்பின்னர் இரண்டாவது முயற்சியாக இலங்கை-இந்திய ஒப்பந்தம் கொண்டு வரப்பட்டது. மூன்றாவது முயற்சியாக ஜனாதிபதி பிரேமதாஸா அரசுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே பேச்சுக்கள் இடம் பெற்றிருந்தன.

ஒரு கடினமான பணியாகவே இருக்கின்றது. அத்துடன் அவர் மேலும் குறிப்பிட்டதுபோல இனப்பிரச்சனையைத் தீர்ப்பதற்கு இருதரப்பிலும் விட்டுக் கொடுக்கும் போக்கு, மிகுந்த புரிந்துணர்வு என்பவை நிறையவே தேவைப்படுவதாகவும் இருக்கின்றது.

இலங்கை இனப்பிரச்சனைத் தீர்வு நடவடிக்கைகளில் நோர்வே ஆர்வம் காட்ட ஆரம்பித்துள்ள இத் தருணத்தில் சந்திரிக்கா அரசு இலங்கையில் உத்தேச அரசியலமைப்புச் சீர்திருத்தம் பற்றிய கலந்தாலோசனைகளிலும் ஈடுபட்டுள்ளது.

ஆளுங்கட்சியான பொதுஜன ஐக்கிய முன்னணியில் அங்கம் பெறுகின்ற அரசியல் கட்சிகளுடன் கலந்தாலோசித்த பின்னர், பாராளுமன்றில் பிரதிநிதித்துவம் செய்கின்ற தமிழ் அரசியல் கட்சிகளுடன் சந்திரிக்கா அரசு கலந்தாலோசனைகளை நடத்தி வருகின்றது.

இக் கலந்தாலோசனைகளில் இலங்கையில் உள்ள பிரதான அரசியல் கட்சிகளிடையே உடன்பாடு ஏற்படும் பட்சத்தில், தமிழீழ விடுதலைப் புலிகளுடனும் உத்தேச அரசியலமைப்புச் சீர்திருத்தம் மற்றும் அதனூடாக இனப்பிரச்சனைத் தீர்வு என்பவை பற்றிப் பேச்சுக்கள் நடத்தப்படுமெனவும் ஜனாதிபதி சந்திரிக்கா தெரிவித்துள்ளார்.

இலங்கையின் இன்றைய அரசியல் நிலபரத்தை எடுத்து நோக்கும்போது இரு வேறு கோணங்களில் நாட்டு நிலபரம் சிக்கலடைந்துள்ளதை அவதானிக்க முடிகின்றது.

முக்கியஸ்தராக இருந்தவர். அத்துடன் ஒரு கல்விமானும்கூட.

எனவே ஜே.ஆரின் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சியில் நிதியமைச்சராக இருந்த திரு.ரொனி டி மெல்கூட அண்மையில் இலங்கையின் நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை வெகுவாகச் சாடியிருந்தார். அத்துடன் இலங்கையில் இன்று ஏற்பட்டுள்ள அநர்த்தங்களுக்கும் இந்த ஆட்சிமுறையே முக்கிய காரணமாக இருக்கின்றதெனவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் நிர்வாகக் கமிட்டியில் அங்கம்பெறும் திரு.டி மெல் இருவாரங்களுக்கு முன்னர் இடம் பெற்ற அக்கமிட்டியின் கூட்டத்திலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டிருந்தார்.

திரு.டி.மெல் தற்போது நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை விமர்சிக்கலாம். ஆனால் கல்வி, கேள்வியில் மேம்பாடுடையவராக இருந்தும், அன்று அவர் அந்த அரசியலமைப்பை எதிர்க்க முன் வரவில்லை. இதன் மூலம் திரு.ரொனி டி மெல் மட்டுமல்ல, இலங்கையின் எந்தவொரு தென்னிலங்கை அரசியல் வாதியும் இலங்கையின் அரசியல் விடயங்களை நாட்டு நலன் கருதி தீர்க்கதரிசனத்துடன் மேற்கொள்ளவில்லை என்பதே தெளிவாகின்றது.

எனவே தற்போது உத்தேச அரசியலமைப்புச் சீர்திருத்தம் பற்றி சந்திரிக்கா அரசு கலந்தாலோசனைகளை ஆரம்பித்துள்ள தறுவாயிலேயே நிறைவேற்று அதிகாரம் குறித்து ஐக்கிய தேசியக் கட்சி தரப்பிலிருந்து திரு.ரொனி டி மெல்

**STATEMENT BY THE NORWEGIAN MINISTER OF FOREIGN AFFAIRS, MR. KNUT VOLLEBÆK**

Foreign Minister Knut Vollebæk of Norway during his visit to Sri Lanka met with the President, Mrs. Chandrika Kumaratunga, Foreign Minister Lakshman Kadirgamar and the Leader of the opposition, Mr. Ranil Wickremasinghe.

A number of issues were discussed. The main issue, however, was the political situation in Sri Lanka.

"The conflict in Sri Lanka can only be solved by political means", Foreign Minister Vollebæk said. "A basis for a dialogue must be established between the parties."

"Upon a request from the President and following a wish from the LTTE, I have today informed the President that Norway is willing to accept the challenging task of trying to bring the parties together in such a dialogue. We have also discussed modalities for commencing direct talks", Foreign Minster Vollebæk said in a statement following his meeting with the President.

"This places a heavy responsibility on the parties themselves. I am encouraged by the expressed willingness to seek a political solution. However, this will take time. It will be difficult. It will require courage and sacrifices and it will require the necessary political will from the parties"" said Vollebæk.

Norway's bilateral assistance to Sri Lanka as well as a number of international issues were also discussed.

Foreign Minister Vollebæk expressed his hope that Sri Lanka will join the Convention on banning anti-personnel mines which have caused so much human suffering not least in this part of the world.

Colombo, 16 February 2000

**வெல்லபெக்கின் அறிக்கை**

மேற்குறிப்பிடப்பட்ட இரு முயற்சிகளுமே நல்ல முறையில் வெற்றிபெற வேண்டியது இன்றியமையாததாகின்றது.

இனப்பிரச்சனைத் தீர்வு, மற்றும் உறுதியான அரசியலமைப்பு ஆகிய இரண்டுமே தற்போதைய அரசியல் நிலபரத்தைப் பொறுத்தவரை வேறுபடுத்திப்பார்க்கப்பட முடியாதவையாகவே இருக்கின்றன.

இந்த இரு வேறு விடயங்களிலும் நல்ல முடிவுகளை எட்டுவதற்கு முயற்சிப்போர் மத்தியில் கருத்தொருமிப்பென்பது பெரிதும் வேண்டப்படுவதாக இருக்கின்றது.

புலப்படுத்துகின்றன.

இந்நிலையில் ஒருபரந்துபட்ட தீர்வு முயற்சிகளில் குதிக்கும் போது முதல் வேலையாக அரசியல் கோதாவில் தோன்றும் இக் 'கட்டாக்காலி'க் கும்பலை இறுக்கமாகக் கட்டிப் போட வேண்டியதே மிகவும் அவசியமானதாகின்றது.

இல்லையேல் அவற்றின் உபத்திரவம், உபாதைகளை உருவாக்கி ஆக்கபூர்வமான தீர்வுகளை 'கைக்கு எட்டியும் வாய்க்கு எட்டாத' நிலைக்கே கொண்டு செல்லும் என்றே கருதமுடியும்.

# உண்மைத் தொடர்

## அதிர் இடி 98

### கடந்தவாரம்

இஸ்ரேலிய அதிரடிப்படையினர் உகண்டாவில் நடத்திய அதிரடி நாடகத்தைப் பற்றி வெளி நாடுகளில் பிரசுரமான தகவல்கள் யாவும் அமீனுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தன. இவற்றால் அவன் கொதிக்கும் எரிமலைபோலிருந்தான்.

கொந்தளிக்கும் அவன் உள்ளத்துக்கு குளிர்ச்சி தர ஃபுளோராவைத் தன் அலுவலகத்துள் வரவழைத்தான். அந்த அலுவலகத்தோடு ஒட்டியிருந்த ஓர் அறையைக் காட்டி அங்கு போகுமாறு ஃபுளோராவை ஏவினான். அந்த அறையுள் அவள் சென்றதும் கதவு வெளியிலிருந்த வண்ணம் பூட்டப்பட்டுவிட்டது.

அந்த அறையினுள் பிரமாண்டமான ஒரு கட்டில் தான் இருந்தது. சுவரில் சுற்றி வளைத்து, பல நாட்டு அழகிகளின் முழு நிர்வாணப் படங்களும் ஒரழகியுடன் அமீன் சல்லாபித்துக் கொண்டிருப்பது போன்ற முழு உருவப் படமும் காணப்பட்டன. இவற்றைக் கண்டு திகைப்படைந்த ஃபுளோரா கட்டிலிலேயே தூங்கிவிட்டாள்.

கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்த அமீன் ஃபுளோராவை ஒருவகைப் பாச உணர்வோடுதான் நோக்கினான். ஏனைய பெண்களை முரட்டுத்தனமாக நடத்தியதைப் போலல்லாமல், இவளைப் பக்குவமாகவென்றெடுக்க வேண்டும் என்று கருதுகிறான்.

இனி...

# இடி அமீன்

**அ**மீன் இதுவரை எத்தனையோ பெண்களைச் சுவைத்திருக்கிறான். ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த அழகிகள், அமெரிக்க நாட்டு அழகிகள் என்று கணக்கிலடங்காத பெண்களை அவன் ருசி பார்த்திருக்கிறான். உகண்டாவிலுள்ள பல இனத்தைச் சேர்ந்த இளம் பெண்களும் அமீனின் பட்டியலில் ஏராளமானவர்கள்.

இருப்பினும் ஃபுளோராவைப் போல் அமீனுக்கு சகல வகையிலும் பிடித்தமான பெண் எவருமில்லை என்றே அவன் கருதினான். ஃபுளோராவின் உடலமைப்பு அமீனுக்கு மிகவும் உவப்பானதாக இருந்தது. அங்கங்கள் அத்தனையும் அமீனின் கண்களுக்கு அணுவும் பிசகாமல் அளவுப் பிரமாணத்துடன் அமைந்து காணப்பட்டன.

அவன் விரும்பும் பெண்ணின் அங்கங்கள் எப்படி எப்படி அமைந்திருக்க வேண்டும் என்று கற்பனை பண்ணியிருந்தானோ, அதற்கேற்பவே ஃபுளோராவின் அங்கங்கள் அமைந்திருந்தன.

அமீன் ஃபுளோராவை தன் விருப்பத்துக்கு ஏற்றவாறு பந்தாடினான். அவளும் அமீனின் சுதந்திரத்துக்கு எத்தகைய தடையும் விதிக்கவில்லை.

ஆனால் அமீன் ஃபுளோராவிடம் ஒருண்மையைக் கண்டு கொண்டான். சவுதி அரேபியாவில் தனது இளமைப் பருவத்தைச் செலவிட்ட போதிலும் ஃபுளோரா ஒரளவு தூய்மையாகவே வாழ்ந்திருக்கிறாள், என்பதை அமீன் கண்டு கொண்டான். இதனால் அவள் மீது அமீனுக்கு மேலும் பற்றும் பாசமும் அதிகரித்தன.

இருவருக்குமிடையில் வயதளவில் பெரும் வித்தியாசம் இருந்தது. இருப்பினும் நீண்ட கால தனது அனுபவத்தைக் கொண்டு ஃபுளோராவை அன்றே பரிபூரணமாக ஆட்கொண்டான்.



மிகவும் இனிமையாக அன்றையப் பொழுதை அனுபவித்த அமீனின் இறுதி நேரப் பேச்சு சற்று சுருதி குலைய வைத்துவிட்டது. ஃபுளோராவிடம்அவன் விடுத்த வேண்டுகோள் அவளைச் சற்றுக் கலங்கவைத்துவிட்டது.

"ஃபுளோரா! உன்னை சட்டப்படி என் மனைவியாக்க விரும்புகிறேன். உனக்காக ஒரு தனி மாளிகையே கட்டித் தருகிறேன். எனக்காக நீ எத்தனை பிள்ளைகளை வேண்டுமானாலும் பெற்றுத்தரலாம்... என்ன உன் விருப்பம்? நீ சம்மதித்தால் இன்னும் மூன்று தினங்களில் நாம் திருமணம் முடித்து விடலாம்...?"

இந்த வார்த்தைகளைக் கேட்டதும் ஃபுளோராவின் கண்களிலிருந்த கண்ணீர் ஆறாகப் பெருக்கெடுத்தது. அவளுடைய கண்ணீரைக் கண்டதும் அமீன் பதைபதைத்தான். அவளுடைய கண்களைத் துடைத்து விட்டான். முத்தமாரி பொழிந்து அவளை ஆசுவாசப்படுத்தினான்.

தேம்பிய வண்ணமே அவள் தன் கதையைக் கூறினாள். தான் கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்தவள் என்றும், தன்னை ஒரு கன்னியர் மடத்தில் சேர்ந்து காலம் முழுவதும் கன்னிகா ஸ்திரியாக வாழவைக்க வேண்டும் என்று தனது தந்தையார் பெரிதும் விரும்பியதாகக் கூறினாள். ஆனால் அவளுடைய தாயார் தன்னை நன்றாகப் படிக்க வைத்து நல்ல கணவனைத் தேர்ந்தெடுத்து அவனிடம் தன்னை ஒப்படைத்துவிடவேண்டும் என்று ஆசைப்பட்டதாகவும் கூறி மென்மேலும் அழுது புலம்பினாள்.

கத்தோலிக்க மடத்தைச் சேர்ந்து அங்கு காலம் பூராவும் கன்னியாகவே வாழவைக்க எண்ணம் கொண்ட ஃபுளோராவின் தந்தையை வாயில் வந்தபடியெல்லாம் திட்டித் தீர்த்தான். அவ்வாறு தனது தந்தையைத் திட்டியதை ஃபுளோரா விரும்பவில்லை. அழுவதைத் தவிர அவளுக்கு வேறுவழி தெரியவில்லை. உடனடியாக எழுந்து குளியலறை சென்று கதவை மூடிக் கொண்டாள்.

ஏதாவது தப்பாகச் செய்து விடுவாளோ என்று பயந்து அமீன், உள்ளேயிருந்து குழாய்த் தண்ணீர் வெளியேறும் சப்தம் வருவதைக் கேட்டு அமைதி அடைந்தான்.

பத்து நிமிடம் கழித்து ஃபுளோரா வெளியே வந்தாள். அவள் அமீனை நேராக நிமிர்ந்து பார்க்கவில்லை. தனது உடைகளை எடுத்துப் போட்டுக் கொண்டு அறையை விட்டு வெளியேற ஆயத்தமானாள். அமீனோ இன்னும் தன் ஆடைகளை அணியவில்லை. அவளை ஓடிப்போய் அணைத்தான். அவளுடைய தகப்பனாரைத் திட்டியது அவளுக்குப் பிடிக்கவில்லை என்பதை ஒரளவு உணர்ந்து கொண்டான். அதற்காக மீண்டும் மீண்டும் மன்னிப்புக் கோரினான். அவனுடைய முரட்டுத்தனமான பிடியிலிருந்து விடுபட அவள் ஆரம்பத்தில் திமிறினாள். ஆனால் முடியவில்லை. அவள் ஒரு பூமாலையைப் போல் அவன் கைகளில் துவண்டாள்.

அவளுடைய சம்மதமோ எதிர்பார்ப்போ இல்லாமல் அவளுடைய ஆடைகள் ஒவ்வொன்றையும் அமீனின் கைகள் களைந்தன. இறுதியில், தான் திருமணப்பேச்சை இனிமேல் எடுக்கப்போவதில்லை என்று சத்தியம் பண்ணினான். பல்வேறு வேடிக்கை கதைகளைக் கூறி அவளைச் சிரிக்கவைத்தான்.

இறுதியில் தான் அழைக்கும் போதெல்லாம் வருவதாகக்கூறி விடைபெற்றாள். தனது பிரத்தியேக மோட்டார் வண்டியிலேயே அவள் வீடுசெல்ல ஏற்பாடு செய்து கொடுத்தான்.

அடுத்த நாள் தனது இராணுவ அதிகாரிகளை அழைத்து எண்டபே விமான நிலையத்தில் இடம்பெற்ற இஸ்ரயேல் நடவடிக்கைகளைப் பற்றி பூரண விசாரணை நடத்தினான். அவனுடைய அமைச்சரவையிலுள்ள சில அமைச்சர்களும், சில இராணுவ அதிகாரிகளும் இஸ்ரயேலரின் கையாட்களாக இருந்துள்ளனர் என்று ஒரு புகாரை சில இராணுவ அதிகாரிகளே தெரிவித்தனர். அத்தகைய 'துரோகி'களின் விவரங்களைத் தனக்குத் தருமாறு கேட்டுக் கொண்டான். அன்று மாலையே ஒரு பட்டியல் அமீனின் கைக்குப் போய்ச் சேர்ந்தது.

தனக்குப் பிடிக்காத எவரையும் உகண்டாவில் உயிருடன் விட்டு வைப்பதில்லை என்று திட்டமிட்டான். ஒரு சிறிதளவேனும் தனக்குப் பிடித்தமில்லாதவர் என்று எவரைக் கருதினாலும் அவரை ஒழித்துக் கட்டிவிட வேண்டும் என்பதே அமீனின் நோக்கமாக விருந்தது.

ஒரியேமா, காணி மற்றும் நீர்வளத் துறை அமைச்சராக இருந்தார். இவர் அமீனுடன் இராணுவத்தில் பணிபுரிந்தவர். பின்னர் பொலிஸ் உயர் அதிகாரியாகப் பதவி வகித்தவர். இவர் அச்சோலி இனத்தவர். இருப்பினும் சகலருடைய நன்மதிப்பையும் பெற்றவர். பொலிஸ் அதிகாரிகளை தனது சுயநல நோக்கில் பலரைத் துன்புறுத்துவதற்குப் பயன்படுத்த அமீன் முயற்சிப்பதை ஒரியேமா விரும்பவில்லை. அமீனிடம் கொடுக்கப்பட்ட- இஸ்ரயேலருக்கு அனுசரணையாக நடந்து கொண்டவர்கள் என்ற பட்டியலில் இடம் பெற்றிருந்த ஓர் அமைச்சர் ஒரியேமா.

உள்துறைஅமைச்சராக அப்போதிருந்த ஒபோத்-ஒ ஃபும்பி என்பவருடைய பெயரும் அமீனிடம் கொடுக்கப்பட்ட பட்டியலில் இருந்தது. உகண்டாவின் கிழக்குப் பிராந்தியத்தில் வாழும் ஜபதோலா என்ற இனத்தைச் சார்ந்தவர் இவர். அமீன் இராணுவத்தின் பிரதித் தளபதியாக இருந்த காலத்தில் பாதுகாப்புச் செயலாளராக இருந்தவர். அமீன் இராணுவத்துக்கான பணத்தைத் தவறுதலாகக் கையாளுவதை இவர் நன்கு அறிவார். இருப்பினும் இருவரும் மிக நெருங்கிய நண்பர்களாகவே சில காலம் இருந்தவர்கள்.

ஏற்கனவே 1960ம் ஆண்டுகளில், கொங்கோ தங்கம் மற்றும் யானைத் தந்தம் போன்றவை பரிமாறப்பட்டபோது அமீன் நடத்திய ஊழல் விவகாரங்கள் பற்றியும் நன்கு தெரிந்து வைத்திருந்தார். இது தவிர 1971ம் ஆண்டு இடம் பெற்ற இராணுவப் புரட்சியைத் தொடர்ந்து அமீன் நடத்திய கொலைகள் பற்றியும் விவரமாக ஒ ஃபும்பி தெரிந்து வைத்திருந்தார். இவரை அமைச்சரவையில் வைத்திருப்பது என்றாவது ஒரு நாள் தனக்குத் தீங்கினை ஏற்படுத்தலாம் என்று, அவரை வெளியில் போட அமீன் தக்க சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்தான்.

## தருவது அழகன்

அமீன் தனது முதல் அமைச்சரவையை 1973ல் கலைத்தபோது ஒ ஃபும்மியை பதவியிலிருந்து நீக்கினான். ஆசிய நாட்டவர்களை 24 மணிநேரத்தில் உகண்டாவைவிட்டு வெளியேற உத்தரவிட்டதைத் தொடர்ந்து, அவர்கள் விட்டுச்சென்ற ஏராளமான சொத்தைக் கணக்கெடுப்பதற்கு தகுதியும் நம்பிக்கையும் வாய்ந்த ஒருவர் இல்லாமையினால் அதற்கு முற்றிலும் பொருத்தமானவர் ஒ ஃபும்மியே தான் என்பதனாலேயே அவரை அமைச்சர் பதவியிலிருந்து விலக்கி இப்பொறுப்பான புதிய பதவியை வழங்குவதாகக் கூறியிருந்தான். அத்துடன் ஆசியர்கள் விட்டுச் சென்ற மாளிகையில் ஒ ஃபும்மி எதைத் தனக்கு விருப்பம் என்று தீர்மானிக்கிறாரோ அதைத் தனக்குச் சொந்தமாக்கிக் கொள்ளலாம் என்றும் அமீன் அப்போதே கூறியிருந்தான்.

இன்று அதே ஒபோத் ஒ ஃபும்மி தேசத் துரோகி என்ற பட்டியலில் இடம் பிடித்துள்ளார்.

(இடி தொடரும்)

# ராகுலும் காதலியும்



**இ**ந்த நூற்றாண்டின் தொடக்க நாளில் முதன் முதலில், சூரிய கிரகணங்கள் பூமியைத் தொட்ட இடம் கட்ஸ் தீவு என்று கருதப்பட்டது.

இங்கே சூரிய உதயத்தைப் பார்ப்பதற்காக உலகம் முழுவதிலிருந்தும் பலர் கூடியிருந்தார்கள். அவர்களில் பல பிரபலங்களும் அடங்கியிருந்தனர்.

அவர்களில் இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் மகன் ராகுல் காந்தியும் அவருடைய காதலியும் காணப்பட்டனர்.

ராகுல் காந்தி அமெரிக்காவில் படித்து வந்தவர். கொலம்பியாவைச் சேர்ந்த பெண் ஒருவரைக் காதலித்து வருகிறார்.

கட்ஸ் தீவுக்கு இவர்கள் இருவரும் வந்திருப்பதை உணர்ந்த புகைப்படக்காரர்கள் கவனம் இவர்களின் மீதே பதிந்தது. இவர்கள் இருவரையும் வெகு தூரத்திலிருந்து 'கிளிக்' செய்தார்கள்.

இவர்களின் அருகில் நெருங்க முடியவில்லை. இவர்களுக்கு அதிக பாதுகாப்புக் கொடுத்திருந்ததே அருகில் செல்ல முடியாததற்குக் காரணம்.

# பாடசாலையில் திருமணம்



**யே**ய்-ஸ்டேஃபனி இருவரும் அமெரிக்காவில் உள்ள பாடசாலையில் ஆசிரியர்களாகக் கடமை புரிகிறார்கள். பாடசாலையில் வேலை பார்க்கும்போது இருவருக்குமிடையே காதல் மலர்ந்தது.

இவர்கள் இருவரும் அண்மையில் திருமணம் செய்து கொண்டனர். எங்கு தெரியுமா? தம் இருவரையும் இணைத்து வைத்த பாடசாலையிலேயே இவர்கள் திருமணம் செய்து கொண்டனர்.

மாணவர்கள் மத்தியில் இவர்கள் திருமணம் படு கொண்டாட்டமாக நடைபெற்றது. இவர்கள் இருவரும் பாடசாலை மேடையில் மாணவர்களுக்கு முன்னால் மோதிரங்களை மாற்றிக் கொண்டார்கள்.

# புரதச் சத்துப் புள்ளி விபரம்



**ந**ம் நாட்டில் மாணவர்கள் பால், முட்டை, இறைச்சி போன்றவற்றில் புரதச் சத்து எத்தனை சத வீதம் உள்ள தென புத்தகங்களின் புள்ளி விபரங்கள் மூலம் படிப்பார்கள்.

சீனாவில் வெளியிடப்பட்டிருக்கும் புதிய புள்ளி விபரக் கணக்கைப் பாருங்கள். கரையானில் பதினாறு சதவீதமும், வண்ணத்துப் பூச்சியில் ஆறு சதவீதமும், கருவண்டில் இருபது சதவீதமும், கரப்பான் பூச்சியில் இருபத்து மூன்று சதவீதமும் புரதம் உள்ளதாம்.

இவற்றைப் பொரித்துச் சாப்பிடுவதை விட வேகவைத்துச் சாப்பிட்டால் சத்துக்கள் வீணாகாதாம். சத்துக்கள் வீணாகாமல் சமைக்க சமையல் குறிப்பும் கொடுக்கப் பட்டுள்ளதாம்.

என்ன, இதைப் படிக்கவே 'உவ்வே' வருகிறதா? படத்தைப் பாருங்கள் எப்படிச் சப்புக் கொட்டிச் சாப்பிடுகிறார்கள் என்று.

# கையெழுத்தால் ஏற்பட்ட பிரச்சனை



**நி**யூயோர்க்கில் உள்ள பேர்த் இஸ்ரேல் மருத்துவ மனையில் தனது முதல் பிரசவத்திற்காகச் சேர்ந்தார் லிண்டா ஜெட்ஸீ என்ற பெண்.

சிசேரியன் அறுவைச் சிகிச்சை மூலம் கடந்த வருடம் செப்டெம்பர் 7ம் திகதி குழந்தை பிறந்தது. இந்த அறுவைசிகிச்சையை வெற்றிகரமாகச் செய்தவர். டாக்டர் அலென் சர்க்கின் என்பவர்.

இந்த சந்தோஷத்தில் பெண்ணின் அடிவயிற்றில் 'டாக்டர் ஸோரோ' என்று கீறிப் பொறித்தாராம். லிண்டா அப்போது மயக்கத்தில் இருந்தாராம்.

பின் மயக்கம் தெளிந்து எழுந்து பார்த்தார் லிண்டா. இதனால் மன உளைச்சலுக்குள்ளானார். "ஏதோ ஆடு, மாட்டின் மேல் குறியிடுவதைப் போல உள்ளது!" என்று கூறினார்.

இதன் பின் தனக்குச் சிகிச்சையளித்த மருத்துவரும், மருத்துவமனையும் 5.5 மில்லியன் டொலர் (சுமார் 40 கோடியே 15 இலட்சம்) நஷ்டஈடு வழங்க வேண்டுமென்று வழக்குத் தொடர்ந்தார்.

வழக்கை விசாரித்த நீதிமன்றம் லிண்டவுக்கு சுமார் 15 கோடி இழப்பீடு வழங்க வேண்டும் என்று உத்தரவிட்டது. டாக்டரின் மருத்துவ உரிமையும் இரத்துச் செய்யப்பட்டது. இத்துடன் அவருக்கு 25 வருட சிறைத் தண்டனையும் விதித்துள்ளது.

# வீட்டை விற்கும் மடோனா




**பி**ரபல பாடகியும் நடிகையுமான மடோனா தனது இங்கிலாந்து வீட்டை விற்க முயற்சி செய்து வருகிறார். வீட்டை விற்க நினைப்பதால் மடோனாவுக்கு ஏதோ கடன் சுமையோ என்று எண்ணம் வரும்.

அதுதான் இல்லை. மடோனா இருக்கும் வீடு இலண்டன் செல்சீ என்ற இடத்தில் அமைந்துள்ளது. வசதி படைத்தவர்கள் மட்டும் வாழும் அளவிற்கு விலையுயர்ந்த பிரதேசம்.

ஆனால் அங்கு பாதுகாப்பு மிகக் குறைவு. கடந்த வருடம் மட்டும் அங்கு இரண்டு பிரபலங்கள் கொலையானார்கள். ஒருவர் பீட்டில்ஸ் இசைக்குழுவைச் சேர்ந்த ஜோர்ஜ் ஹரிசன். மற்றவர் பி.பி.ஸி தொலைக்காட்சி நிகழ்ச்சித் தொகுப்பாளர் ஜில் டேண்டோ.

அந்த வீட்டை விற்குமாறு பலர் மடோனாவுக்குக் கூறி வருகின்றனர். எனவே தான் அந்த வீட்டை விற்க முயற்சி செய்கிறார். நான்கு மாடிகள் கொண்ட அந்த வீடு நாற்பது இலட்சம் பவுணிற்கு (நம்நாட்டு மதிப்பில் சுமார் 468 கோடி ரூபாய்) விலை போகுமாம்.



## உயரமான ஹோட்டல்

↑ உலகிலேயே மிகவும் உயரமான ஹோட்டல் இதுதான். டுபாய் நாட்டில் உள்ள இந்த ஹோட்டலின் பெயர் 'அரேபியன் டவர்'.

இதன் உயரம் 321 மீட்டர். நாற்புறமும் கடலால் சூழப்பட்டிருக்கும் இந்த ஹோட்டல் கடலில் மிதப்பது போன்று காணப்படுகிறது. அது மட்டுமல்ல இந்த ஹோட்டலில் தங்குபவர்களும் பணத்தில் மிதப்பவர்களாகத்தான் இருக்க வேண்டும்.

இந்த ஹோட்டலில் ஒரு நாள் தங்க எவ்வளவு வாடகை தெரியுமா? 15 ஆயிரம் ஸ்ரேர்லிங் பவுன்ஸ். நம்நாட்டு மதிப்பில் இது சுமார் 17 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய். அடேயப்பா!

அண்மையில் திறந்து வைக்கப்பட்ட இந்த ஹோட்டல் சாதனைகளைப் பதிவு செய்யும் கின்னஸ் புத்தகத்தில் உலகிலேயே மிக உயரமான ஹோட்டல் என இடம் பெறப்போகிறது.


## பிரமாண்டமான லிங்கம்


→ இந்துக் கோவில்களில் கர்ப்பக்கிரகத்தினுள் வைத்துப் பூஜிக்கப்படுவது லிங்கம் என்பது அனைவருக்கும் தெரியும்.

இந்தியாவின் தமிழகத்தில் கோயம்புத்தூர் மாவட்டத்தில் வெள்ளியங்கிரி மலை ஒன்றுள்ளது. இந்த மலைச்சாரலில் பிரம்மாண்டமான லிங்கம் ஒன்று சமீபத்தில் நிறுவப்பட்டுள்ளது.

13 அடி 9 அங்குல உயரமும் 76 அடி சுற்றளவும் கொண்டது இந்த லிங்கம். இதில் ஏழு சக்கரங்களுள்ளன. பீடம் ஏழு முறை சுருண்ட பாம்பின் மீதும் அமைந்துள்ளது.

கிரனைட் கற்களால் உருவாக்கப்பட்டது; செம்பால் சுற்றப்பட்டிருக்கிறது, இந்த லிங்கம். இதை 'ஈஸா பவுண்டேஷன்' நிறுவனம் உருவாக்கியுள்ளது. இந்துக்கள் மட்டுமன்றி சர்வ மதத்தினரும் வணங்கும் வண்ணம் இதில் 'அனைத்து மதச் சின்னங்களும் பொறிக்கப்பட்டுள்ளன





## தாயும் சேயும்

← தாய் தன் சேய்மீது பாசத்தை பொழிவது மனித இனத்திற்கு மட்டும் சொந்தமானது அல்ல. இது எல்லா ஜீவராசிகளுக்கும் பொதுவானது.

இங்கே தனது சேய்க்கு பாசத்துடன் முத்தமிடுகிறது தாய் ஒட்டகச் சிவிங்கி. சீனாவில் உள்ள ஷங்காய் மாகாணத்தில் உள்ள உயிரியல் பூங்காவில்தான் இந்தக் காட்சி 'க்ளிக்' செய்யப்பட்டது.

பிறந்து இரண்டே நாட்களே ஆன இந்த ஒட்டகச் சிவிங்கிக் குட்டியின் உயரம் 5 1/2 அடி. எடை 85 கிலோ.

## ஆய்வாளர் எறும்பு

↓ படத்தில் பூதாகரமாகத் தெரிவது சாதாரண எறும்புதான். ஒரு மில்லிமீட்டரை 10 ஆயிரம் மடங்கு உரு பெருக்கி எடுக்கப்பட்ட இப்படத்தில் எறும்பு இராட்சச உருவில் காட்சி தருகிறது.

இந்த எறும்புக்குப் புட்டிப்பால் கொடுக்கப்பட்டுள்ளதோ என்று எண்ணிவிட வேண்டாம். ஒரு சதுர மில்லி மீட்டர் அள வான 'மைக்ரோ சிப்ஸ்' என்ற ஓர் ஆய்வுக் கான கருவியை ஆய்வாளர்கள் கொடுத்துள் ளனர். இந்த எறும்பார் தனது கூட்டுக்குள் இக் கருவியை மெல்லக் கொண்டு போய் விடுவார். எறும்புக் கூட்டுக்குள் ஏனைய எறும்புகளின் பலதரப்பட்ட நடவடிக்கைகளை யும் மிகத் துல்லியமாக மோப்பம் பிடித்து இந்த மைக்ரோசிப் ஆய்வாளர்களுக்கு வழங்கப்போகிறது.

இந்த ஆராய்ச்சியை பிரிட்டனிலுள்ள ஹட்டேர்ஸ் ஃபிலிட் பல்கலைக்கழக தொழிலியல் மையம் மேற்கொண்டு வருகிறது.





## சாகசம்

↑ சாகச விளையாட்டுக்கள் செய்வதில் சீனர்கள் பெயர் பெற்றவர்கள். அண்மையில் அமெரிக்காவில் உள்ள போர்ட்ஸ்மித் என்ற நகரில் ஒரு கலை நிகழ்ச்சி நடைபெற்றது.

அந்த நிகழ்ச்சியில் சீனாவைச் சேர்ந்த 'தங்க ட்ரகன்' என்ற குழுவைச் சேர்ந்த 3 பெண்கள் உடலை வளைத்துச் செய்த சாகசங்களில் ஒன்றுதான் இது.

**தகவல் பெட்டி**

## மினி சினி

* 'சேது' வெற்றிப்பட நாயகன் விக்ரம் அடுத்து 'வேலு நாயக்கர்' என்ற படத்தில் நடிக்கப் போகிறார். இப்படத்தை 'ப்ரியமுடன்' பட இயக்குநர் வின்சென்ட் செல்வா இயக்கவுள்ளார்.
* பிரசாந்த் நடிக்கும் 'விரும்புகிறேன்' படத்தில் அவருக்கு ஜோடியாக நடிப்பவர் ஷிவானி. கன்னட நடிகையான இவர் சரளமாகத் தமிழ் பேசுகிறார்.
* இரட்டை வேடக் கதாபாத்திரம் கொண்ட படத்தில் அர்ஜுன் நடிக்கவிருக்கிறார். இப்படத்தில் கதாநாயகியாக மனிஷா கொய்ராலா நடிக்கவுள்ளார்.
* 'மந்திரவாசல்' உட்பட பல தொலைக்காட்சித் தொடர்களைத் தயாரித்து வரும் குட்டிபத்மினி, பெரிய திரைக்காகப் படமொன்றைத் தயாரிக்கப்போகிறார்.
* 'டபுள்ஸ்' படத்தின் மூலம் இசையமைப்பாளராகும் 'தேனிசைத்தென்றல்' தேவாவின் மகன் ஸ்ரீகாந்திற்கு அப்படம் வெளிவரு முன்னரே 4 புதுப்படங்களுக்கு இசையமைக்கும் வாய்ப்புக் கிடைத்துள்ளது.
* 'கல்வெட்டு' படத்தில் முரளிக்கு ஜோடியாக அறிமுகமாகும் மலையாள நடிகை திவ்யா உன்னி, கார்த்திக் நடிக்கும் புதுப்படத்திலும் கதாநாயகியாக நடிக்கிறார்.
* 'துள்ளாத மனமும் துள்ளும்' கன்னடத்தில் 'ஓ நல்ல நல்லே' என்ற பெயரில் தயாராகிறது. தமிழில் விஜய்-சிம்ரான் நடித்த வேடங்களில் கன்னடத்தில் ரவிச்சந்திரன்-இஷா கோபிகர் நடிக்கின்றனர்.
* 'ரிதம்' படத்திற்குப் 'பூப்பூக்கும் ஓசை' என்று பெயர்மாற்றினார்கள். பின் 'ரிதம்' என்றே வைத்துவிட்டார்கள். இப்போது ப்ரியதர்ஷன் இயக்கும் படத்திற்கு 'பூப்பூக்கும் ஓசை' எனப் பெயரிடப்பட்டுள்ளது.
* செல்வமணியின் மேற்பார்வையில் அவரது சகோதரர் ராஜரத்தினம் இயக்கும் படம் 'பொட்டு அம்மன்'. இதில் நாயகி, வில்லி என இரட்டை வேடத்தில் நடிக்கிறார் ரோஜா.
* சத்தமாகப் பட வாய்ப்புக்களின்றி இருக்கும் ராம்கி, படமொன்றை இயக்கப் போகிறார். படத்தின் நாயகனாக இவர் நடிக்கவில்லையாம். ராமராஜன் இதில் நாயகனாக நடிக்கவுள்ளார்.

## கிளுகிளு கதையுடன் 'இளமைக் காதல்'

மாணவர்களுக்கு பாலியல் கல்வி தேவையில்லை என்று வாதிடும் பூபஸி குடும்பத்தில் ஏகப்பட்ட பிரச்சனை. கல்யாணம் முடித்த மூத்த மகனுக்கு மனைவியைச் சந்தோஷப்படுத்த முடியாத பிரச்சனை.

கல்யாணமாகாத இரண்டாவது மகனுக்கு முறைகேடான பழக்கங்களால் வியாதி.

திருமணத்திற்கு முன் கற்பிழந்த மகள். இப்படிப் பல சோதனைகளுக்குப் பின் செக்ஸ் கல்வி அவசியம் என்ற முடிவுக்கு வருகிறார்கள்.

இந்தக் கிளு கிளு கதையுடன் வெளியான 'ஜவானி கி கஹானி' என்ற இந்திப் படம் 'இளமைக் காதல்' என்ற பெயரில் தமிழில் மொழி மாற்றப்படுகிறது.

விஜய் அரோரா, ரமேஷ் தியோ, சினிதா ஷர்மா, அபிலாஷா போன்றோர் நடித்துள்ள இப்படத்தை ரங்கன் என்பவர் இயக்கியுள்ளார்.

## கிடப்பில் 'கேசவன்'

சரத்குமார்-ரம்பா நடிக்கும் 'கேசவன்' படத்தை கிடப்பில் போட்டு விட்டு சொந்தப்படம் எடுக்கவுள்ளார் அதன் இயக்குநர் முருகராஜ் சிவம்.

இந்தப் படத்தில் கதாநாயகனாக சத்யராஜ் நடிக்கிறார். கதா நாயகியாக? வழக்கம் போல் இயக்குநரின் அபிமான நடிகை தேவயானி நடிக்கிறார்.



# சினி துளி



[illegible]-விஜய்-ஸ்ரீவித்யா
படம்- கண்ணுக்குள் நிலவு

## மறுக்கிறார் ரம்பா

இரட்டை நாயகிகள் படத்தில் நடிக்க அழைத்தால் கண்டிப்பாக மறுத்து விடுகிறார் ரம்பா.

ஏன் தெரியுமா?

தன்னை வெறும் கவர்ச்சிக்கு மட்டும் பயன்படுத்திக் கொண்டு விடுகிறார்களாம். 'உன்னருகே நானிருந்தால்' படத்தில் தன்னை டம்மியாக்கி விட்டு மீனாவுக்கு முக்கியத்துவம் கொடுத்து விட்டார்களாம்.

இதே போன்று வந்த இரண்டு பட வாய்ப்புகளை நிராகரித்து விட்டார் ரம்பா.

## 8 கோடி கேட்கும் கமல்

புதிய இயக்குநர்களுக்கு வாய்ப்பளித்து வெற்றிப் படங்களைத் தயாரித்து வரும் ஆர்.பி.சௌத்ரி முதன் முறையாக கமலை வைத்துப் புதிய படமொன்றைத் தயாரிக்கவுள்ளார்.

இதற்காக இவர் கமலை அணுக, அதற்குக் கமல் சம்பளமாக 8 கோடி ரூபாய் கேட்டுள்ளார். சௌத்ரி 6 கோடி ரூபாய் வரை பேரம் பேசியுள்ளார்.

'மருதநாயகம்' படத்தை வெளிக் கொண்டு வரும் முயற்சியில் பெரும் செலவிற்காக கமல் தன் சம்பளத்தில் இருந்து குறைக்க மறுத்து விட்டாராம்.

## அப்படியா விக்ரமன்?

எஸ்.வி.ரங்கராவ், சுந்தர்ராஜன், ஏ.வி.எம்.ராஜன், ஜெய்சங்கர் நடித்து பல வருடங்களுக்கு முன் வெளியான படம் 'அன்புச் சகோதரர்கள்'.

இதே சாயலில் தான் விஜயகாந்த் இரட்டை வேடத்தில் நடித்து விக்ரமன் இயக்கத்தில் 'வானத்தைப் போல' படத்தின் கதையும் அமைந்துள்ளதாகப் பேசப்படுகிறது.

அப்படியா விக்ரமன்?



## திரையுலக மறுபக்கம் (137)

# காதல் மனைவியைக் கழற்றி விட்ட கதாநாயகன்

## தயாரிப்பாளரின் ஆசையும் நடிகையின் மறுப்பும்

தமிழ்நாட்டிலிருந்து மயன்

தமிழ்த் திரையுலகில் எல்லாராலும் மதிக்கப் படுபவர் அந்த நடன இயக்குநர். அவருக்குப் பிறந்த பிள்ளைகளும் தந்தை வழியில் நடன இயக்குநர்களாகி விட்டார்கள்.

ஆனால் மகன்கள், நடிகைகள் பின்னால் அலைவதையும் உபதொழிலாகச் செய்ய ஆரம்பித்து விட்டார்கள். அதனால்தானோ என்னவோ தந்தை நொந்து நூலாகிப் போய் விட்டார்.

மூத்த மகன் ஒரு கவர்ச்சிக் கதாநாயகியைத் தூக்கித் தூக்கி லவ் வருகிறார். இவர்கள் திருமணம் வெகுவிரைவில் நடக்கும் எனப் பலர் கூறி வருகின்றனர். இருப்பினும் திரையுலகில் நாளை நடப்பதை யார் அறிவார்?

இரண்டாவது மகன் நடனத்தில் சாதித்து நடிகராகி விட்டார். ஆட்டம் சொல்லிக் கொடுக்கும் போது இந்த நடன மாஸ்டரை ஆட்டுவித்து விட்டார் ஒரு நடன அழகி. இவர் முஸ்லிம் மதத்தைச் சேர்ந்தவர்.

### எதிர்ப்புடன் திருமணம்

பலத்த எதிர்ப்பையும் மீறி நடன அழகியைத் திருமணம் செய்து தனியாக வாழ்ந்தார் நடிகர். இடையிடையே தந்தை வீட்டிற்கும் சென்று வந்தார் நடிகர்.

நடிகர் தனது காதல் கல்யாணம் வெளியே தெரியாமல் இருப்பதற்காக பேட்டி கொடுப்பதையே தவிர்த்து வந்தார். அது மட்டுமன்றி சினிமா நிருபர்களைக் கண்டால் முகம் கொடுத்தே பேச மாட்டார். காததூரம் விலகி ஓடி விடுவார்.

குடும்ப விஷயங்களை வெளியிட விரும்பாத நடிகருக்கு ஒரு குழந்தை பிறந்தது. அந்தக் குழந்தையின் கால் பிறவியிலேயே வளைமாயிருக்க பெற்றவர்கள் பதறிப் போய் விட்டார்கள்.

பின் மருத்துவர் ஒருவரை தினசரி வீட்டுக்கு வரவழைத்து சிகிச்சை செய்து குணமாக்கி விட்டார்கள்.

### மனக்கசப்பும் பிரிவும்

இப்போது அந்த நடனத் தம்பதிகளுக்கிடையே மனக் கசப்புக் கூடிவிட்டது. தினமும் தகராறு. 'என்ன இருந்தாலும் மனைவி ஆறாப் டான்னர் தானே' என்ற எண்ணம் நடிகருக்கு மேலோங்கி வர ஆரம்பித்து விட்டது.

இருவரும் குடும்பம் நடத்திய வீட்டில் காதல் மனைவியை குடியிருக்க வைத்து விட்டு கொஞ்சம் பணத்தையும் கொடுத்து நடிகர் தனியாகப் பிரிந்து வந்து விட்டார். இடையில் எப்போதாவது மனைவியைச் சந்தித்து விட்டு வருவார். அது மட்டுமன்றி அவர் மன்மதனாக நடிக்கும் படத்தின் ரதியுடன் படுநெருக்கமாக இருந்து வருகிறார்.

தனது மகன்களின் காதல் லீலைகளைப் பார்க்கப் பொறுக்காமல் அவர்களின் பெற்றோர் தமது சொந்த ஊரான மைசூரிலேயே போய் குடியேறி விட்டார்கள்.

### அட்வான்ஸும் அழைப்பும்.

கடந்த வருடம் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய இராமாயணக் கதாப்பாத்திரம் ஒன்றின் பெயரைக்கொண்ட படத்தின் இயக்குநர் இப்போது இரண்டெழுத்துப் பெயருடைய படமொன்றை இயக்கி வருகிறார்.

இந்தப்படத்தைப் பணத்தைத் தண்ணீராகச் செலவழித்துப் படங்களைத் தயாரிக்கும் தயாரிப்பாளர் ஒருவர் தயாரித்து வருகிறார்.

இந்தப்படத்தில் இரண்டாவது நாயகியாக நடிக்க ஐந்தெழுத்து 'மா' நடிகையை ஒப்பந்தம் செய்தார் தயாரிப்பாளர். இதற்காக பெரிய தொகை ஒன்றையும் அட்வான்ஸாகக் கொடுத்தார் அவர்.

இந்த நடிகை தனக்கு ஜோடியாக அறிமுகமான மூன்றெழுத்து இளம் நாயகனுடன் காதல் வயப்பட்டிருக்கிறார்.

முதல் நாள் அட்வான்ஸ் கொடுத்த தயாரிப்பாளர் மறுநாள் நடிகையின் வீட்டுக் கதவைத் தட்டி, 'உனக்கு என் படத்தில் சான்ஸ் கொடுத்திருக்கிறேன். அதற்காக எனக்கு 'நீ பார்ட்டி' கொடுக்க வேண்டும்' என்று ஆசையாக அழைப்பு விடுத்தார்.

தயாரிப்பாளரின் ஒரு கல்லில் இரு மாங்காய்களை அடிக்கும் தந்திரத்தைப் புரிந்து கொண்ட நடிகை,

"என்னை இந்தப் படத்தில் நடிக்க அழைத்தது இதற்காகத்தான் என்பது இப்போது புரிகிறது. அதனால் உங்கள் படத்தில் என்னால் நடிக்க முடியாது." என்று கண்டிப்பாகக் கூறி வாங்கிய அட்வான்ஸையும் திருப்பிக் கொடுத்து விட்டார்.



என்.வி.சேகர்-ஊர்வசி
படம்- திருப்பதி எழுமலை வெங்கடேசா

## ஒரே பெயரில் மூ…

சேரன் 'வின்னோடும் முகிலோ… படத்திற்காக ஷிவானி என்றொரு புது… கொண்டு வந்தார்.

பின் பிரபுதேவா நடிக்கும் 'யாரடா நீ… படத்தில் ஷிவானி என்ற பெயரில் ஒருவ… கொண்டிருக்கிறார்.

இப்போது பிரசாந்த் நடிக்கும் 'விரு… படத்தில் ஷிவானி என்று இன்னுமொரு… கொண்டிருக்கிறார்.

மூவருக்கும் பெயர் ஒன்றாக இருக்… டும் ஒருவரல்ல. பெண் குழப்பம் வரா… வது பெயரை மாற்றிக் கொண்டால்தா…



அர்ஜுன்-மனிஷா
படம்- முதல்வன்

## முரளி நடிக்கும் 'அய்யன்'

புருஷ லட்சணம்', 'பத்தினி' போன்ற படங்களைத் தயாரித்த பட நிறுவனம் அடுத்துத் தயாரிக்கும் படத்திற்கு 'அய்யன்' என்று பெயரிட்டுள்ளது.

இப்படத்தின் கதாநாயகனாக முரளி நடிக்க அவருக்கு ஜோடியாக பிரபல நடிகை ஒருவர் நடிக்கவுள்ளார்.

இவர்களுடன் ஆர் சுந்தர்ராஜன், அலெக்ஸ் உட்பட பலர் நடிக்கின்றார். முக்கிய வேடத்தில் குஷ்பு நடிக்கவுள்ளார்.

பிரபல இயக்குநர்கள் பலரிடம் உதவி இயக்குநராகப் பணியாற்றிய சுந்தரகுமாரன் என்ற புதியவர் இப்படத்தை இயக்கவுள்ளார்.

## கன்னடத்தில் சுவலட்சுமி

தமிழில் வெற்றி பெற்ற 'கோகுலத்தில் சீதை' கன்னடத்தில் 'கிருஷ்ண லீலா' என்ற பெயரில் தயாராகவுள்ளது.

இப்படத்தில் சிவராஜ்குமார் கதாநாயகனாக நடிக்கிறார். தமிழில் நாயகியாக நடித்த சுவலட்சுமியே கன்னடத்திலும் நடிக்கிறார்.

தமிழில் மணிவண்ணன், கரண் நடித்த வேடங்களில் கன்னடத்தில் முறையே ஆனந்த் நாக்கும் ரமேஷ் அரவிந்தும் நடிக்கின்றனர்.



பார்த்திபன்-மீனா
படம்- உன்னருகே நானிருந்தால்



சாக்ஷி
படம்-மீசைக்கார அண்ணே

## எனக்கு எந்த ஈகோவும் கிடையாது–முரளி

முரளி நாயகனாக நடித்த 'கனவே கலையாதே' படத்தின் தோல்வியால் ஏற்பட்ட நஷ்டத்தைச் சமாளிக்க அதன் தயாரிப்பாளர் சிவசக்தி பாண்டியனுக்கு உதவும் முகமாக பார்த்திபனுடன் இணைந்து 'வெற்றிக் கொடி கட்டு' படத்தில் நடித்து வருகிறார்.

இது பற்றி முரளி பேட்டி ஒன்றில் பின்வருமாறு தெரிவித்தார்.

"பார்த்திபன் எனது நண்பர். இரண்டு ஹீரோக்கள் நடிக்கும் படத்தில் நடிப்பது எனக்கு உடன்பாடான விஷயம். நாம் இருவரும் எந்த ஈகோவும் இல்லாமல் நல்ல நண்பர்களாக நடித்து வருகிறோம்."

## அதே பாணியில் அடுத்த படம்

'திருப்பதி ஏழுமலை வெங்கடேசா' படத்தைத் தந்து வெற்றி வாகை சூடிய இராம.நாராயணன் இதே பாணியில் அடுத்த படத்தையும் உருவாக்கவுள்ளார்.

இப்படத்திற்கு 'கந்தா கடம்பா கதிர் வேலா' என்று பெயரிடப்பட்டுள்ளது. இப்படத்திலும் பிரபு-ரோஜா நாயகன் நாயகியாக நடிக்கின்றனர்.

இவர்களுடன் எஸ்.வி.சேகர்-கோவை சரளா, விவேக்-நிரோஷா ஜோடிகளும் முக்கிய வேடத்தில் வடிவேலும் நடிக்கின்றனர்.

'லவ்பேர்ட்ஸ்', 'சங்கமம்' உட்பட பல படங்களைத் தயாரித்த 'பிரமிட்' நடராஜன் இப்படத்தைத் தயாரிக்கவுள்ளார்.

## பிறமொழிப் படங்களில் விஜய்

'கண்ணுக்குள் நிலவு' படத்தை அடுத்து விஜய் நடித்து வெளிவரவிருக்கும் அடுத்த படங்கள் 'உதயா' மற்றும் 'குஷி'.

இதையடுத்து அவர் மேலும் இரண்டு புதிய படங்களில் நடிக்க ஒப்புக்கொண்டுள்ளார்.

அதில் ஒன்று மலையாளத்தில் வெற்றிபெற்ற 'ப்ரண்ட்ஸ்'. இரண்டாவது தெலுங்கில் வெற்றி பெற்ற 'பவித்ர பந்தம்' வெங்கடேஷ் நடித்து வெற்றி பெற்ற படம் இது.

## அம்மா நடிகையின் வருத்தம்

சின்னத்திரையிலும், பெரிய திரையிலும் அழகான அம்மாவாகவும் திகழ்ந்து வருபவர் கவிதா.

கடந்த வருட மத்தியில் கர்ப்பமான இவர் புத்தாயிரமாம் ஆண்டின் முதல் நாளில் முதல் குழந்தையாகத் தன் குழந்தை பிறக்கும் என நினைத்திருந்தார்.

ஆனால் அது நடக்க முடியாமல் போய்விட்டது. அதனால் வருத்தத்தில் இருக்கிறார் கவிதா.

## உயர்கிறார் விவேக்

நகைச்சுவை நடிகர்களில் விவேக்கின் நிலை நாளுக்கு நாள் கூடி வருகிறது. எப்படித் தெரியுமா?

'வீரலுக்கேத்த வீக்கம்' படத்தில் இவருக்கு ஜோடி முன்னாள் நாயகி கனகா.

இப்போது 'ஜேம்ஸ்பாண்டு' படத்தில் இவருக்கு ஜோடி இன்னொரு முன்னாள் நாயகி அஞ்சு.

அடுத்து 'கந்தா கடம்பா கதிர் வேலா' படத்தில் விவேக்கிற்கு ஜோடியாக நடிப்பவர் முன்னாள் நாயகி நிரோஷா.

இப்போது சொல்லுங்கள், விவேக் நிலை உயர்கிறதுதானே?

## காதோடு சொல்லுகிறோம்

**ம**னம் வீசும் மான் நடிகைக்குத் தமிழில் படங்கள் இல்லை. எனவே சின்னத்திரைக்குப் போய் முகம் காட்டி வரும் இவர், பிரபல ஹோட்டல்களின் பார்களில் பகிரங்கமாக மது அருந்தி வருகிறாராம்.

**வா**ளி நடிகைக்கு சுத்தமாக வாய்ப்பு இல்லை. இருந்தும் சற்றும் மனந்தளராமல் தயாரிப்பாளர்கள், ஹீரோக்கள் என்று சந்தித்து வாய்ப்புக் கேட்டு வருகிறாராம். அத்துடன் அவர்கள் போடும் கண்டிஷன்களுக்கெல்லாம் சம்மதிப்பதாகவும் கூறி வருகிறாராம்.

**மு**ஸ்லிம் வாலிபரை மணந்து, குழந்தைக்குத் தாயாகி அவரை விவாகரத்துச் செய்தார் அந்த வாரிசு நடிகை. பின் ஒரு கம்ப்யூட்டர் என்ஜினியருடன் இரகசியக் குடித்தனம் நடத்தினார். இப்போது அவருடனும் லடாய் ஏற்பட்டு பிரிந்து விட்டாராம்.

**ஜோதி** மயமான அந்தத் தங்கை நடிகை செய்யும் 'பந்தா' தாங்க முடியவில்லையாம். படப்பிடிப்புத் தளத்தில் நடிகர், இயக்குநர் தவிர வேறு யாருடனும் பேச மாட்டாராம். யாராவது பேச முன் வந்தால், இரண்டடி தள்ளி நின்று சொல்கிறாராம்.

**எ**ண்ணெய் வள நாட்டிலிருந்து வந்த நடிகை நடித்து அண்மையில் வெளியான படத்தில் நடிகைக்கு கௌரவ வேடம்தான். இந்தப் படத்திற்குப் பிறகாவது புதுப்பட வாய்ப்புக்கள் வருமென்று எதிர் பார்த்தாராம். ம்கூம். ஒரு படம்கூட வரவில்லையாம்.



பார்த்திபன்-முரளி-மனோரமா
படம்- வெற்றிக் கொடி கட்டு

## குஷ்பு ரெடி

பிரபுவின் 'திருநெல்வேலி' படத்தில் ஒரே பாடல் காட்சியில் நடனமாட மறுத்து விட்டார் குஷ்பு.

இது பற்றி குஷ்பு கூறும் போது,

"நானும் பிரபுவும் சினிமாவில் ஒரு வெற்றிப்பட ஜோடி. எங்களை ஜோடியாகப் பார்த்துத்தான் இரசிகர்களுக்கு பழக்கம். ஒரு பாடலுக்கு மட்டும் ஆடச் சொன்னார்கள். அதனால் மறுத்து விட்டேன்.

பிரபுவுடன் ஜோடியாக நடிக்க அழைத்தால் நான் எப்போதும் ரெடிதான்" என்று தெரிவித்துள்ளார்.

## பிரசாந்த்-ஷாலினி இணையும் 'காதல் நீதானா'

பல படங்களில் நடித்து வரும் பிரசாந்த் முதன் முறையாக ஷாலினியுடன் இணையும் படத்திற்கு 'காதல் நீதானா' என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.

மலையாளத்தில் பெரு வெற்றி பெற்ற 'நிறம்' தான் தமிழில் 'காதல் நீதானா' என்ற பெயரில் தயாராகிறது.

மலையாள இயக்குநர் கமல் இயக்கும் இப்படத்திற்கு உதவி இயக்குநராகப் பணியாற்றவுள்ளார் முன்னாள் நடிகை சரிதா.

## முகப்பில்

## கமல்–முரளி

## மனிஷா

## என்னைத் தெரியுமா?

மீண்டும் ஒரு தடவை
உன் நெஞ்சை கேட்டுப்பார்
நான் யார் என்று!
***
அனுமதி இல்லாமலே
உன் முதல் காதலை
யாசித்துக் கொண்ட
கள்ளன்.
***
உன்
கனவுகளை எல்லாம்
உருவமாக்கித் தந்த
சிற்பி!
***
நீ மறந்து போனாலும்
மீண்டும் மீண்டும்
உன் எண்ணங்களை
சிறகடிக்கச் செய்யும்
உள்ளார்ந்த
கவிஞன்!
***
இன்னுமா
புரியவில்லை...?
ஊசிபோடாமலே உன்
இளமை உணர்வுகளை
உனக்கு உணர்த்திய
வைத்தியன்!
***
உன் கண்ணுக்கும்
இதயத்துக்குமிடையே
பாலம் அமைத்த
பொறியியலாளன்.
***
உன்னை
மீண்டும் மீண்டும்
கண்ணாடி முன்னால்
நிற்கச் செய்த
வித்தைக்காரன்!
***
புரிகிறது?
என் கண்களை நீ
தவிர்ப்பதில் இருந்து...
என்னை வெறுப்பதில் இருந்து,
உன் இதயத்தில்
எனக்கு ஓர் இடம்
இருக்கிறது என்பதை;
காதலன்!
***
உன் அன்புக்காக நான்
"ஏங்க வேண்டும்" என்று
நீ நினைத்து இருந்தால்,
உன் வீட்டு வாசலில்
பிச்சைக்காரனாக....!
***
பிச்சையாக-வேறு
எதுவுமே வேண்டாம்!
உன்னைப் போட்டுவிடு
எனக்குள்!
***

உத்திரன்-இணுவில்.

## இதயமும் இரவலல்ல

நீ என்னை
ஏசி விட்டாய்....!
பரவாயில்லையடி!
♥
என் உடைகள்
இரவல் தான்;
ஒத்துக் கொள்கிறேன்.
♥
என் கைகளில்
மின்னும் கடிகாரம்
நண்பனுடையதுதான்;
பளபளக்கும் 'ஷுவும்'
பள்ளித் தோழனுடையது தான்.
♥
நான் போட்டு வரும்
குளிர் கண்ணாடி,
ஏறி வரும்
'ஸ்கூட்டர்'
எல்லாமே
என்னுடையதல்லதான்.
♥
இப்படி....
எதுவுமே எனதில்லாமல்
எனக்கு நானே
அந்நியமானதெல்லாம்
உன்னைக்கண்டபின் தானடி!
♥
ஆனாலும்.
உன்னையே நினைக்கின்ற
நான் சுமக்கும்
அந்த இதயம் மாத்திரம்
சத்தியமாய்......
சத்தியமாய் என்னுடையதடி!

மன்னார் எம்.ஷிபான்.



## ஏமாற்றி விடாதே

அன்பே...!
உன்
நினைவுகளால்
தினம்-தினம்
உள்ளத்தாலும்
உடலாலும்
வாடும்
இந்த
உயிருள்ள
உன்
காதலனை
மறந்துவிடாதே...!
▶▶▶
நீ
நம்
காதலுக்கு
பச்சைக்கொடி
காட்டி,
இருவரும்
உல்லாச வானில்
வலம் வந்ததை
மறந்து விடாதே....!
▶▶▶
ஆனால்
இப்போது-ஏனோ
நீ
சிகப்புக் கொடி
காட்டி
தடைவிதிக்கிறாய்...!
▶▶▶
அன்பே....
இன்னும்
நான்
உன்னையே
நினைக்கின்றேன்!
உள்ளத்தால்
மட்டுமல்ல;
உடலாலும்-கூட
அதனால்
நீ
என்னை
மறந்து விடாதே!
அதிலும்,
ஏமாற்றி விடாதே....!

என்.எல்.முஸம்மில்-
புதிய காத்தான்குடி-06.

## சிந்தித்துப் பார்....

சிந்தித்துப்பார்
ஜனனத்தின்
உண்மைபுரியும்....!
★★★
இருளில்
அமர்ந்துகொண்டு
ஒளியைத்தேடும்
மனித மடைமை புரியும்...!
★★★
மனிதனை மனிதன்
அடையாளம் காண
அடையாள அட்டைகேட்கும்
விசித்திரம் புரியும்.....!
★★★
மண்ணாகிப் போகும்
உடலுக்குக் கூட
பொன்னாடை போர்த்தும்
பொய்மை புரியும்....!
★★★
சுதந்திர நாட்டில்
சுதந்திரம் தேடும்
சுயநலவாத
அரசியல் புரியும்.....!
★★★
நினைத்த இடத்தில்
நினைத்த நிமிடத்தில்
தமிழனைக் கைதுசெய்யும்
பேரினவாதம் புரியும்....!
★★★
சிந்தித்துப்பார்...!
ஜனனத்தின்
உண்மை புரியும்....!
★★★
உன்னையே – நீ
திட்டிக்கொள்வாய்....,
ஏன்
பிறந்தேன் என்பாய்!
உலகமே
பொய்யென்பாய்,
வாழ்ந்தது
போதுமென்பாய்,
சாவே மேலென்பாய்
சிந்தித்துப்பார்.....
ஜனனத்தின்
உண்மை புரியும்.....!

எம்.ரமேஷ்-கொழும்பு-15.

## மடிமீது தலைசாய்த்த போது

தேவியிவள் மடி மீது
தலை சாய்த்து விழித்திருந்தேன்;
தேயாத மதி முகத்தை
தான் பார்த்து களித்திருந்தேன்.
♦♦♦
விரல்களில் வாரி விடு
வற்றாத அன்பு சுகம்
விலைகளில் இல்லை சுகம்
தலை கோதி விடும் சுகம்.
♦♦♦
பாதி விழி யான் மூடி
மிதக்கின்றேன் மடிமீது
பாதி வலி குறைந்த படி
உணர்கின்றேன் இப்போது!
♦♦♦
கோதி விடும் விரல்களும்
கோவை இதழ் மொழிகளும்
கோடை மழை தரும் சுகம்
கொஞ்ச வந்த பிஞ்சி சுகம்!
♦♦♦
இமை மூடித் தூங்கி விட்டால்
மடி மீது ஏது சுகம்?
சுமை பாடி துவண்டு விட்டால்
தேவ சுகம் ஏது தினம்?
♦♦♦
மனை தோறும் இந்த சுகம்
மாலையிலே வந்து நிதம்
துணை வாழ்க்கை இன்ப சுகம்
கண்டு விட்டால் என்ன தினம்!


கதிர்-பிட்டியகந்தை.

## தேன் கிண்ணம்

## மின் கணினியில் தமிழ் எழுத்து – முதன் முதலில் புகுத்தியவர் 'ஈழத்துப் பூராடனார்'

இன்றைய அச்சுக்கலை மிக உன்னதமான வளர்ச்சியைக் கண்டுள்ளது. ஈயத்தில் வார்க்கப்பட்ட எழுத்துக்களை ஒவ்வொன்றாகப் பொறுக்கி எடுத்து அடுக்கியேதான் நேற்று வரை புத்தகங்களும் செய்தித்தாள்களும் ஏனையவையும் அச்சு வாகனம் ஏறி வெளிவந்தன.

கடந்த கால் நூற்றாண்டுக்குள் அச்சுக்கலை அமோக முன்னேற்றம் கண்டுவிட்டது. ஏன் இதனை ஒரு புரட்சி என்றே சொல்லலாம். கொம்பியூட்டர் எனும் மின் கணினி மூலம் தான் அச்சுப் புரட்சி உலகில் இடம் பிடித்தது; இன்று உலகம் எங்கும் ஆக்கிரமித்துக் கொண்டது.



ஈழத்துப் பூராடனார் செலவராசகோபால

'ஆக 26 எழுத்துக்களைக் கொண்ட ஆங்கில மொழி கணினிமுறை அச்சுக் கோர்த்தலுக்குச் சுலபமானது. அவ்வாறிருக்க, 246 பிரதான எழுத்துக்களையும் ஆயுத எழுத்து மற்றும் வட எழுத்துக்களையும் உள்ளடக்கிய அரிச்சுவடி அமைப்பினை கணினி முறையில் புகுத்துவது சாத்தியப்படாது' என்று தான் தமிழறிஞர்களும் ஆர்வலர்களும் தயங்கினர். தமிழ் நாட்டில்கூட இதே காரணம்தான் கூறப்பட்டது.

இந்தச் சூழலில் புலம்பெயர்ந்து கனடாவில் வாழ்ந்த ஒரு குடும்பம், மின் கணினியில் தமிழ் எழுத்து முறையைப் புகுத்தி அச்சுக் கலைப்புரட்சியில் முன்னோடியாகத் திகழ்ந்தது.

தமிழ் வரிவடிவங்களை மாற்றி அமைத்து, எழுத்துச் சீர்திருத்தம் செய்தால் மட்டுமே மின்கணினியில் தமிழைப் புகுத்தலாம் என்று முடிவெடுத்த தமிழறிஞர்கள் அதற்கான முயற்சிகளில் இறங்கியிருந்த வேளையில், எந்த விதமான எழுத்துச் சீர்திருத்தமுமில்லாமலே தமிழை மின்கணினி அச்சுமுறையில் பயன்படுத்தலாம் என்று நிரூபித்துக் காட்டியவர் ஈழத்துப்பூராடனார் திரு.செல்வராச கோபால்.

மட்டக்களப்பு தேற்றாத்தீவில் வாழ்ந்து வந்த திரு.க.தா.செல்வராசாகோபால் ஒரு தமிழாசிரியர். தமிழறிஞர் பரம்பரையின் வழித்தோன்றல். மனோகரா அச்சகம் என்ற அச்சகத்தை தனது கிராமத்திலேயே நிறுவி நூற்றுக்கும் மேற்பட்ட நூல்களை ஈழத்துப் பூராடனார் என்ற பெயரில் வெளியிட்டார். எழுபதாம் ஆண்டின் பிற்கூறில் குடும்பத்துடன் கனடா சென்று ரொரண்ரோ நகரில் குடியேறினர். இவருடைய மூத்த புதல்வர்கள் மூவரும் எந்திரவியலாளர்களாக உயர்வடைந்தனர். திரு.செல்வராச கோபால் கனடாவிலும் தனது தமிழ்ப் பணியைத் தொடர்ந்தார். 'இலக்கியமணி' என்று போற்றப்பட்டார்.

இவருடைய மூத்த மகன்களான திரு. ஜோர்ஜ் இதயராஜ், கலாநிதி வெஸ்லி ஜீவா ஆகிய இருவருடைய துணையுடன் மின்கணினியில் தமிழ அச்சு எழுத்துக்களைப் புகுத்துவதற்கு பல ஆய்வுகளைச் செய்து 1985ல் இத்துறையில் வெற்றியும் கண்டார்.

உடனடியாகவே 'பெத்தலகேம் கலம்பகம்' மற்றும் 'இயேசுபுராணம்' ஆகிய இரு காவியங்களையும் மின் கணினிமூலம் அச்சுவாகனம் ஏற்றிப் பிரசுரித்தார். மூன்றாவது மகனான அல்பேட் இதய மனோகரைத் துணை கொண்டு தமிழில் முதன் முதலாக மின்கணினி மூலம் 'நிழல்' பத்திரிகையைப் பதிப்பித்து வெற்றியும் கண்டார்.

மின் கணினி அச்சுவாகனமேறிய முதல் தமிழ்ப்பத்திரிகை 'நிழல்' என்பதை ஒட்டாவா அரச ஆவணக் காப்பாகத்தில் 1986ல் பதிவு செய்துள்ளனர். ரொரண்ரோவில் ரிப்ளெக்ஸ் அச்சகத்தை நிறுவி அங்கு வாழ் தமிழ் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்தார். இவரது மனைவி திருமதி வியற்றிஸ் பசுபதி அவர்களே ஈழத்துப் பூராடனார் செல்வராச கோபாலின் நூல்களின் பதிப்பாசிரியராக விளங்குகிறார். ரிப்ளெக்ஸ் பதிப்பகத்தின் பொறுப்பாளராக இவருடைய மற்றுமொரு மகன் திரு.சந்திர ஜீவா, மகளான செல்வி யெஸ்மி இதயரஜனி ஆகியோர் பணிபுரிகின்றனர்.

தமிழ் சினிமா ஆரம்பக் காலத்திலிருந்து கடந்த நூற்றாண்டு முடியும்வரை வெளியான தமிழ்த் திரைப்படங்கள் தொடர்பான விவரங்கள் அனைத்தையும் உள்ளடக்கிய 'தமிழ் சினிமா கலைக் களஞ்சியம்' என்ற பெயரில் 50 தொகுதிகளை வெளியிட்டுள்ளார். இத்தகையதான ஒரு முயற்சியை தமிழ்நாட்டில்கூட எவரும் செய்யவில்லை. பல சைவசமய சம்பந்தமான நூல்களையும் வெளியிட்டிருக்கிறார். 12 ஆயிரம் செய்யுள்களைக் கொண்ட 'தமிழழகி' என்ற நூலையும் பதிப்பித்து வெளியிட்டுள்ளார்.

திரு.செல்வராசகோபாலின் குடும்ப உறுப்பினர்கள் அனைவருமே தமிழ்ப் பணியில் ஈடுபட்டு உழைத்துவருவதனால் 'ரிப்ளெக்ஸ் குடும்பம்' என்ற சிறப்புப் பெயரையும் பெற்றது.

கனடாவில் 'தமிழ் மகன்' என்ற தமிழ்த் திரைப்படத்தையும் தயாரித்து கடல் கடந்த தமிழர்கள் வாழும் இடங்களிலெல்லாம் திரையிட்டுள்ளனர். ■

## நில் கவனி முன்னேறு

நம்பிக்கையுடன் செயல்படும்போது ஒருவனிடமிருந்து சக்தி பல மடங்குகளாக பெருகி விடுகிறது. அதனால் நம்பிக்கை மிகுந்தவன் கடினமான வேலைகளைக்கூட விரைவாகவும் சிறப்பாகவும் செய்து முடிக்கிறான். பெரிய பதவிகள், செல்வாக்கு, பெருமை, புகழ், சொத்து, பணம் போன்றவைகள் நம்பிக்கையுடன் செயல்படுபவர்களுக்குத்தான் கிடைக்கும்.

நம்பிக்கை தோல்வியைத் தாங்கிக் கொள்ளும் சக்தியைக் கொடுக்கிறது. சிலர் தாங்கள் சொல்லுவதை தாங்களே நம்பாதவர்களைப் போன்று மெதுவாகத் தட்டுத் தடுமாறி குழப்பத்துடன் பேசி வருகிறார்கள். இவர்கள் பேச்சில் சிறிதுகூட உறுதி இருக்காது.

இப்படிப் பேசும் பழக்கம் கொண்டவர்களுடைய பேச்சை அவர்கள் குழந்தைகள்கூட செவி கொடுத்துக் கேட்க மாட்டார்கள்.

நீங்கள் பேசும்போது உங்களது குரல் கம்பீரமாக ஒலிக்கட்டும். மற்றவர்களுடைய கைகளைக் குலுக்கும்போது அவர்களுடைய கண்களைப் பார்த்துக் கொண்டு புன்முறுவலுடன் கெட்டியாகக் கை குலுக்குங்கள். அவநம்பிக்கை வெளியிலிருந்து வந்து ஒருவனைத் தொத்திக் கொள்ளுவதில்லை. அதை நம் உள்ளத்தில் நாமாகவே உருவாக்கிக் கொண்டு தோல்வியை நோக்கிச்சரிய ஆரம்பித்து விடுகிறோம்.

'என்னை யாரும் மதிக்கப்போவதில்லை' என்று நினைத்து பார்ப்பவனை யாரும் நிச்சயம் மதிக்கப் போவதில்லை. 'எனக்கு எங்கே வேலை கிடைக்கப் போகிறது?' என்று நினைப்பவருக்குக் கட்டாயம் வேலை கிடைக்காது. 'நான் வியாபாரத்தை ஆரம்பித்து நிறையப் பொருள் சம்பாதிக்கப் போகிறேன்' என்ற நம்பிக்கை நிறைந்த எண்ணம்தான் வியாபாரம் ஆரம்பிக்கும் முயற்சியில் முதல் படியாக அமையும்.

'எனக்குத்திறமை போதாது, என்னால் இந்த காரியத்தைச் செய்ய முடியாது' என்பதைப் போன்று நம்பிக்கையைக் குலைக்கும் எண்ணங்களை நினைத்து வருபவர்களுக்கு வளமான எதிர்காலம் கட்டாயம் கிட்டாது.



இதற்கு மாறாக, கம்பீரத்துடன் ஆணித்தரமாக சந்தேகத்திற்குச் சிறிதுகூட இடமின்றி பேசும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டவர்களுக்கு வெற்றி பெறும் வாய்ப்புகள் நிறையக் கிட்டும். வெளியில் நடந்து செல்லும்போது கூனிக் குறுகிக் கொண்டு தரையில் பார்வையைப் பதித்தபடி செல்லுபவனிடம் நம்பிக்கை இருக்காது.

உங்களுடைய உடலை நிமிர்த்தி மற்றவர்களுடைய கண்களைப் பார்த்துக் கொண்டு பேசுவதைப் பழக்கமாக ஏற்படுத்துக் கொள்ளுங்கள். உட்காரும்போதுகூட சரிந்தவாறு அமராமல் உங்கள் முதுகெலும்பை நேர்கோடாக இருக்கும்படி வைத்துக் கொண்டு கம்பீரமாக உட்காருங்கள்.

அதற்கு மாறாக, 'என்னை விட இன்னும் மோசமான சூழ்நிலையில் வாழ்ந்தவர்கள்கூட மாபெரும் காரியங்களைச் செய்து முடித்திருக்கிறார்கள்.

முடியும் என்பதே முன்னேற்றம்தான். இதுதான் முன்னேற்றத்தின் முதற்படியாகும். 'மற்றவர்கள் செய்த காரியங்களை என்னாலும் செய்து காட்டமுடியும்' என்ற நம்பிக்கை ஒருவனை முன்னேற்றப் பாதையில் வீறுநடை போடச் செய்யும்.

கவர்ச்சியும், கம்பீரமும் நமது நடை உடைகளில் இருப்பது, மற்றவர்கள் மத்தியில் ஒரு தனி மதிப்பை உண்டாக்கும்.

'ஆடைபாதி, ஆள்பாதி' என்ற பழமொழி கூட இதற்காகத்தான் ஏற்பட்டது. ■

## பேனா நண்பர்கள்



பெயர்: எம்.றிபாஸ்
வயது: 17
முகவரி: இல.787,
மௌலானா வீதி,
ஏறாவூர்-03, மட்டக்களப்பு.
பொழுது போக்கு:
பத்திரிகை, வானொலி.



பெயர்: எஸ்.சபானா,
வயது: 17
முகவரி: 3, ரஹ்மத்புரம்,
கொத்தாந்தீவு.
பொழுது போக்கு:
வானொலி,
தொலைக்காட்சி.

## இந்தவாரம் உங்கள் பலன்

**27.02.2000 முதல் 04.03.2000வரை**

ஜோதிடர் 'கரினா'

**மேடம் :**
தொழில் வளர்ச்சி காணும் தேக சுக நன்மையடையும். பணப்பரிமாற்றமுண்டு. மனதில் வேதனையுடன் பெண்களுக்கு சற்று சிக்கல்கள் தோன்றலாம் பொருளாதார சேர்க்கை அச்சுவினிக்காரருக்குண்டு.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், சனி.
அதிஷ்ட நிறம் : வெள்ளை; எண் : 05.
அதிஷ்ட திகதிகள் : 23, 25.

**இடபம் :**
மனக்கவலை தீரப்பெறும், பெண்வழித் தொடர்பு மூலம் சில இலாபங்கள் கிடைக்கும், கல்வி, தொழில் என்பன நன்மையாத் தொடரும். சிறு பிள்ளைகளுக்கு வார இறுதி நோய்துன்பங்களைக் கொடுக்கும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : மண்ணிறம்; எண் : 09.
அதிஷ்ட திகதிகள் : 24, 26.

**மிதுனம் :**
உத்தியோக உயர்வும் பிள்ளைகளின் முயற்சி வெற்றியும், தூர இடத்து பயணத் தொடர்பும் ஏற்படும். திங்கட்கிழமை நன்மையான செய்தி கிடைக்கும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், சனி.
அதிஷ்ட நிறம்: நீலம்;எண்: 04.
அதிஷ்ட திகதிகள் : 22, 25.

**கடகம் :**
மனதில் பதற்ற நிலை காணப்படும். கலைக்கல்வி பயில்வோருக்கு எதிரிகள் நண்பராவர். பணச் செலவு அதிகரிக்காமல் பார்க்கவும்.
அதிஷ்ட நாட்கள் :செவ்வாய், வியாழன்.
அதிஷ்ட நிறம் : இளமஞ்சள்; எண் : 06.
அதிஷ்ட திகதிகள் : 24, 26.

**சிம்மம் :**
பதற்றமான நிலை மாறும். புதிய மாற்றத்துக்கிடமுண்டு. ம ன மகிழ்வு ஏற்படும். விவசாய தொழில் பெருக்கமும், எடுத்த விடயம் வெற்றியைக் கொடுக்கும்.
அதிஷ்ட நாட்கள் : வியாழன், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : சாம்பல் வர்ணம்; எண் : 05.
அதிஷ்ட திகதிகள் : 23, 24.

**கன்னி :**
சனிகால சேர்க்கை. மனதில் வெறுப்பும், செய்காரிய தடுமாற்றமும் கொடுக்கும். எடுத்த விடயத் தடை தாமதமும் கொடுக்கும். அத்த பெண்கள், வீண் அலைச் சலைத் தவிர்க்கவும்.
அதிஷ்ட நாட்கள் : வெள்ளி, ஞாயிறு.
அதிஷ்ட நிறம்: றோஸ்;எண்: 07.
அதிஷ்ட திகதிகள் : 20, 25.

**துலாம் :**
சுகக் குறைவு, திருமண விடயம் பற்றி யோசனை பணச்செலவுடன் உறவினர்களின் தலையீடு காணப்படும். கல்வி,தொழில் நிலை ஏற்றம் காணும். வீடு வாசல் இடமாற்ற மும் கொடுக்கும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், திங்கள்.
அதிஷ்ட நிறம்: பச்சை; எண்: 01.
அதிஷ்ட திகதிகள் : 23, 24.

**விருட்சிகம் :**
புதிய முயற்சியுடன் பல அதிரடி நடவடிக்கைகள் காணப்படும். உற்பத்தித் துறை சார்ந்தோருக்கு உயர்வு தரும். அத்துடன் இவரின் பணச் செலவை கட்டுபடுத்த வேண்டும்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், வியாழன்
அதிஷ்ட நிறம் : மண்ணிறம்; எண் : 03.
அதிஷ்ட திகதிகள் : 21, 24.

**தனுசு :**
உயர்கல்வி மதிப்புடன் உயர்வடையும். அத்துடன் தன யோக ஸ்தான உதவியும் இவ் வாரம் கிடைக்கும். எடுக்கும் முயற்சி பல சித்தியாக அமையும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், ஞாயிறு.
அதிஷ்ட நிறம் : இளஞ்சிவப்பு; எண் : 03.
அதிஷ்ட திகதிகள் : 24, 26.

**மகரம் :**
நோய் துன்ப நிவர்த்தியுண்டு. கல்வி உயர்கௌர வமும் கிட்டும். எடுத்த கருமம் தடைதாமதத்துடன் வெற்றியும், மணமாகாதாருக்கு திருமண நிர்ணய பலனும் உண்டு.
அதிஷ்ட நாட்கள் : சனி, புதன்.
அதிஷ்ட நிறம் : இளநீலம்; எண் : 08.
அதிஷ்ட திகதிகள் : 22, 26.

**கும்பம் :**
மனச்சங்கடம் விலகும். ஏஜென்சி தொழில் செய்வோருக்கு பணப் பெருக்கம் காணப்படும். பொருள் உயர்வும், உறவினர், பெரியோர்களின் ஆசிர்வாதமும் காணப்படும்.
அதிஷ்ட நாட்கள் : செவ்வாய், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : பலவர்ணம்; எண் : 06.
அதிஷ்ட திகதிகள் : 24, 25.

**மீனம் :**
பெண்களுக்கு திருமண வெற்றியும் பிரயாண பலிதமும் சுபயோகமான காலமாக அமையும். பெற்றோர்களின் உதவியும் பொன் பொருள் சேர்க்கையும் காணப்படும்.
அதிஷ்ட நாட்கள் : வெள்ளி, சனி.
அதிஷ்ட நிறம் : மஞ்சள்; எண் : 01.
அதிஷ்ட திகதிகள் : 23, 25.

# லேடீஸ் ஸ்பெஷல்

லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல்

## உடல் மெலிந்து அழகாக

## உபயோகமான டிப்ஸ்

நாமும் கண்ணுக்கு இலட்சணமாக ஸ்லிம்மாக இருக்க வேண்டும் என்ற ஆசை, குண்டான பெண்களின் மனதில் ஓர் ஏக்க மாகவே இருக்கும். நீங்கள் கவலையேபட வேண்டாம். இங்கே கொடுக்கும் டிப்ஸை செய்து பாருங்கள். நீங்களும் அழகுப் பதுமையாக மாறிவிடலாம்.

முதலில் உங்களுடைய உடலின் எடையைப் பார்த்துக் கொள்ள வேண்டும். அதன்பிறகு ஆறு மாதத்திற்குள் ஆறு கிலோ எடையைக் குறைக்கும் முயற்சியில் நீங்கள் இறங்க வேண்டும். தினமும் டயரியில் எழுதுங்கள்: நான் தினமும் உடற் பயிற்சி செய்வேன், எடையைக் குறைக்கும் முயற்சியைத் தொடர்ந்து செய்வேன். எந்தநாளும் மறக்காமல் உடற் பயிற்சி செய்வேன் என்று தினமும் எழுதினால், அதன்படி நீங்கள் செயல்படுவீர்கள்.



அடிக்கடி எடையை பாருங்கள். குறைந்திருந்தால் சந்தோஷப்பட்டு உடற்பயிற்சியை விட்டுவிடாதீர்கள். தொடர்ந்து செய்யுங்கள். ஒரு வேளை எடை குறையவில்லையென்றால், உடற்பயிற்சியில் தீவிரமாக இறங்கி விடுங்கள். தினமும் முடிந்தால் எடை பார்த்து, அதற்கேற்ப உடற்பயிறசி செய்யலாம்.

### இரவு நேர உணவில் கவனம் தேவை!

விருந்துச் சாப்பாட்டையோ அல்லது வீட்டுச் சாப்பாட்டையோ ஒரு பிடி பிடித்து விடக்கூடாது. இதனால் உடம்பு குண்டாகி விடும். எப்பொழுதும் இரவில் மிதமான உணவையே உண்ண வேண்டும்.

மாலை ஆறு மணிக்கு மேல், திட உணவை உட்கொள்ளாமல், திரவ உணவான பால் மற்றும் பழங்களைச் சாப்பிடலாம். 'அதிகமாகப் பசிக்கிறதே, நிறைய சாப்பிட்டால்தானே தூங்க முடியும்' என்று சிலர் நினைக்கலாம். அதற்காக திட உணவை வயிறு நிறைய சாப்பிடாமல், அளவோடு சாப்பிட்டுச் சூடாக பால் குடித்தால் போதும்.

### சுவைத்துச் சாப்பிட வேண்டும்.

அவசரமாகவோ அல்லது உணவை விழுங்கினால் போதும் என்றோ நீங்கள் சாப்பிட்டால், உங்கள் உடம்பு குண்டாகிவிடும். எளிய உணவாக இருந்தாலும், சுவைத்து மென்று சாப்பிடும்போது, வாயிலுள்ள ஜீரணம் செய்யும் பாக்டீரியாக்களின் உதவி கிடைக்கிறது. இதனால் தேவையற்ற கொழுப்புகள் உடலில் தங்காமல் வெளியேறிவிடும்.

### வியர்வை வர உழைத்தால்...

"நான் வீட்டு வேலைகளையெல்லாம் செய்கிறேன். ஆனா உடம்புதான் குறையவே மாட்டேங்குது!" என்று அங்கலாய்க்காதீர்கள். வேலை செய்தால் மட்டும் உடம்பு குறையாது. வியர்வைச் சிந்த வேலை செய்யும்போதுதான் உடம்பு குறையும். நடக்கலாம், ஓடலாம், கயிறு தாண்டலாம், சிறுவர்களுடன் சேர்ந்து விளையாடலாம். இதில் உங்களுக்குப் பிடித்ததைச் செய்து பாருங்கள். உங்களுடைய வியர்வை வெளியேற வேண்டும். அதுதான் முக்கியம்.

நீங்கள் என்னென்ன சாப்பிட்டீர்கள் என்று பட்டியல் போட்டுக் கொண்டால், தொடர்ந்து அதே உணவை எடுத்துக் கொள்ளமாட்டீர்கள். இன்றைக்கு இதுதான் சாப்பிட வேண்டும் என்ற பட்டியல் உங்கள் மனதில் இருந்தால், தேவையில்லாத சத்துக்கள் உடலில் சேராது. ஒரே உணவை அடிக்கடி சாப்பிடாமல் இருப்பதே நல்லது.

### மனம் உற்சாகமானால்..

இளமையான மனம் இருந்தாலே போதும், உடலும் அதற்கேற்ற படி இளமையாகவே இருக்கும். அதற்கு என்ன செய்ய வேண்டும். என்கிறீர்களா?

ஓய்வு நேரத்தில் இசையை இரசியுங்கள். பிடித்த எந்த இசையையும் கேட்கலாம். உற்சாகமாக இருக்க உங்கள் மனம் எந்த இசையை விரும்புகிறதோ, அதை அடிக்கடி கேட்கலாம்.

நடனம் தெரிந்தவர்கள் ஆடலாம். இதனால் வியர்வை நன்றாக வெளியேறிவிடும். குண்டான உடம்பை வைத்துக்கொண்டு ஆட முடியுமா? என்று கேட்க வேண்டாம். குண்டான உடலைக் கொண்டு நடிகர் பிரபுவால் ஆட முடிகிறதே! அவரை உதாரணமாக நினைத்துக் கொள்ளுங்கள். ஆடுவதற்கு மெலிதான உடல் தேவையில்லை, மனம்தான் தேவை.

### எதையாவது ஒன்றைச் செய்து கொண்டிருந்தால்...

மனதை சோம்பலாக இருக்க விடக் கூடாது. மனச்சோர்வு உடலை கெடுத்துவிடும். நோய் எதிர்ப்பு சக்தி இல்லாமல்கூட போகும். எப்பொழுதும் சுறுசுறுப்பாக வேலை செய்தால் மனமும், உடலும் ஒரே மாதிரி இருக்கும்

என்ன இந்த டிப்ஸை செய்து பார்ப்பீர்கள்தானே!


## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்.

மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்

★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.

(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.



**வாரம் ஒரு பட்டுச் சேலை** HD

பெயர்:..........................

முகவரி:..........................

..........................

தொழில்:..........................

கையொப்பம்:..........................

உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 04-03-2000

அனுப்பவேண்டிய முகவரி- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


வழங்குவது புவனா

27

# மோனிக்கா என் மோனிக்கா

கிளின்ரன் மோனிக்கா பாலியல் உறவுகளை பகிரங்கமாக வெளியிட வேண்டிய நிர்ப்பந்தம் மோனிக்காவுக்கு ஏற்பட்டிருந்தது. மோனிக்காவின் நீண்ட காலச் சினேகிதி லிண்டா ரிறிப் என்பவளிடம் மோனிக்கா தனக்கும் கிளின்ரனுக்குமிடையில் ஏற்பட்டிருந்த உறவுகளைப் பற்றித் தெரிவித்திருந்தாள். இரவு வேளைகளில் கிளின்ரன் மோனிக்காவுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு நீண்ட நேரம் உரையாடுவதைப் பற்றியும் ரிறிப்பிடம் கூறியிருந்தாள்.

இத்தகவல்களனைத்தையும் மோனிக்காவைக் கிண்டிக் கிளறி ரிறிப் பெற்றுக் கொண்டாள். கிளின்ரனுக்கும் மோனிக்காவுக்குமிடையில் இடம் பெறும் தொலைபேசி உரையாடல்களையும் ரிறிப் ஒலிப்பதிவுசெய்து கொண்டாள். ரிறிப் மூலம் இத்தகவல்கள் மெல்ல மெல்லக் கசியத் தொடங்கின, பத்திரிகைகள், வானொலி – தொலைக்காட்சிகளிலும் சுவாரசியமான செய்திகளாக வெளிவரத் தொடங்கின. உலகம் முழுவதுமே இச் செய்திகள் பரபரப்பூட்டும் தகவல்களாகப் பவனி வரத்தலைப்பட்டன.

நீதிபதி கென்னத் ஸ்டார் என்பவர் தானாகவே கிளின்ரன் - மோனிக்கா பாலியல் உறவு தொடர்பாக பகிரங்க விசாரணையை நடத்தினார். நீதிமன்றில் ஆரம்பத்தில் கிளின்ரன் மோனிக்காவுடனான தொடர்பை முழுமையாக மறுக்கவே செய்தார். நீதிபதி முன்னிலையில் சாட்சியமளிக்கையில், "நான் கூறுவது அனைத்தும் உண்மை. உண்மையைத் தவிர நான் வேறு எதையும் கூறப்போவதில்லை" என்று வேதாகமப் புத்தகத்தில் அடித்து சத்தியமும் செய்தார். ஆனால் பின்னர் தான் பொய்ச்சத்தியம் பண்ணியதாக ஒப்புக் கொண்டார்.

### இழிவான செயல்

இன்றைய உலகிலேயே அதி உன்னதமான நிலையில் இருக்கும் ஒருவர் இத்தகைய மிகக் கீழ்த்தரமான காரியத்தைச் செய்யத் துணிந்தமை மிக மிக இழிவான செயல் தான். இருப்பினும் அவரோ இன்றும் அதே உயர்ந்த பீடத்திலிருந்த வண்ணம் உலகுக்கு வழிகாட்டிக் கொண்டிருக்கிறார்.

அந்தரங்கமான விடயங்கள் அம்பலத்துக்கு வரத்தொடங்கிய பின்னர், நீதிவிசாரணைகளின் போதும், பத்திரிகை, தொலைக்காட்சி, வானொலி நிருபர்களுக்குக் கொடுத்த பேட்டிகளின் போதும் மோனிக்கா எத்தகைய தகவலையும் ஒளிவு மறைவின்றி எடுத்துக் கூறினாள். உலகெங்கும் இத்தகவல்கள் பரவிய வண்ணம் இருந்தன.

### அந்தரங்கத் தகவல்கள்

நீதிபதி கென்னத் ஸ்டாரின் விசாரணையின்போது, கிளின்ரன் பற்றி மோனிக்கா கூறிய தகவல்களில், அவர் மீது தான் கொண்டிருந்த காதல் பற்றி மிக சுவாரசியமான தகவல்களை வெளியிட்டாள். 'ஏற நனைந்தவனுக்கு சாண் போனாலென்ன முளம் போனாலென்ன' என்ற முதுமொழிக்கு ஏற்ப, தங்களுக்கிடையில் இருந்த சகல அந்தரங்கங்களையும் ஒன்று விடாமல் மோனிக்கா விவரித்திருந்தாள்.

கிளின்ரன் மீது தனக்கு கவர்ச்சி ஏற்பட்டமைக்கான காரணத்தை விளக்கும் போது, "குழந்தையைப் போன்ற சுபாவமுடைய சிறுவனைப் போல் அவர் எனக்குத் தென்பட்டார். இத்தகைய அவருடைய குணாம்சமே என்னை அவர் பால் ஈர்த்தது. 'கதிரொளியானது மரஞ்செடி கொடிகளைத் துரிதமாக வளரச் செய்கிறது. வர்ணங்களையும் துடிப்புடன் ஒளிரவைப்பதும் அதே சூரிய ஒளிதான். நீங்களும் எனக்குக் கதிரொளி போலவே காட்சி தருகின்றீர்கள்!" என்று ஒரு தடவை அவரிடமே கூறினேன்.

"அதேவேளை அவருடன் சேர்ந்து இருப்பதையே நான் பெரிதும் விரும்பினேன். அவர் என்னையே கவர்ச்சிகரமானவளாக்கினார். ஆனால் அவர்மீது காதல் ஏற்படும் என்று நான் கருதவில்லை. அவருடனான தொடர்பு என்னை குதாகலப்படுத்தியது. அவர் நாட்டின் ஜனாதி பதி என்பதனால் ஏற்பட்ட எண்ணமல்ல!" இதேவேளை கிளின்ரன்மீது அவள் கவனம்அதிகமாகத் திரும்பியிருந்தமையினால் அவளுடைய பழைய காதலன் அண்டி பிளேய்லரின் மீதிருந்த கவனம் குறைந்து போயிற்று.

### பலபெண்களுடன் தொடர்பு

அடிக்கடி கிளின்ரன் மீது மோனிக்காவுக்கு சந்தேகங்களும் ஏற்படத் தொடங்கின. அவருக்கு மோனிக்காவுடன் மட்டுமல்லாமல் வேறு பலபெண்களுடனும் பாலியல் உறவுகள் உள்ளன என்பது மோனிக்காவுக்கும் தெரிந்த விடயம் தான். வெள்ளை மாளிகையில் அவரைப் பற்றிய வதந்திகள் பரவவே செய்தன.



கிளின்ரன்மீது சில சந்தர்ப்பங்களில் மோனிக்காவுக்கு இரக்கமும் பச்சாதாபமும் ஏற்படுவதுண்டு. 'அவருடைய வாழ்வில் அவருக்கு வேண்டிய இன்பத்தை அவர் பெற்று அனுபவிக்கவில்லை' என்று அவள் கருதினாள். 'இத்தகைய மென்மையான சுபாவமுடையவர், தனது வாழ்வில் போதுமான சுகத்தை அடையவில்லை. இதனால் எனக்கு அவர் மீது அனுதாபமே ஏற்படுகிறது. அதே வேளை, அவர் பல பெண்களுடன் தொடர்பு கொள்வதனால், என்மீது அவர் வைத்துள்ளதாகக் காட்டிக் கொள்ளும் அன்பும் போலியானது தானோ?' என்று அவரைப்பற்றி இரு வகையான கருத்துக்களை நான் கொள்வதுண்டு." இவ்வாறு மோனிக்கா கிளின்ரனைப் பற்றி ஒரு சமயம் கூறியிருக்கிறாள்.

மோனிக்காவின் மனம் பலதரப்பட்ட கற்பனைகளையும் கட்டியெழுப்புவதுண்டு. எந்த ஒரு விடயத்தை எடுத்துக் கொண்டாலும் அதிலுள்ள நன்மைகளைப் பற்றி சிந்திப்பதைவிட, பல மடங்கு தீமையானவற்றையே அலசுவாள். ஜனாதிபதி மீதான தனது உறவுகளை மீட்டும் அவளுக்கு அடிக்கடி சந்தேகங்களே அதிகம் தலை யெடுக்கும்.

தனது வீட்டில் தனது தனிப்பட்ட தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசுவதாக கிளின்ரன் கூறுவார். ஆனால் அவ்வாறு செய்யமாட்டார். இவ்வாறு பல தடவைகள் மோனிக்கா தொலைபேசி அழைப்பு வரும் என்று எதிர்பார்த்து ஏமாந்து போயிருக்கிறாள். இச்சந்தர்ப்பங்களில் மோனிக்கா தன்னையே நொந்து கொள்ளுவாள். 'உடல் பருத்து வயிறு தொப்பையாகத் தோற்றமளிக்கும் என்னை ஏன் அவர் கருத்தில் கொள்ளப் போகிறாள்' என்று விரக்தியடைவாள்.

## "கதிரொளிபோல் காட்சி தருகிறார்"

### தொலைபேசியில் பாலியல்

ஜனவரியில் ஒரு நாள் நள்ளிரவு கடந்ததன்பின்னர் தொலைபேசியில் கிளின்ரன் மோனிக்காவுடன் தொடர்பு கொண்டார். அவருடைய உரையாடல் முழுவதும் அன்று பாலியல் தொடர்பாகவே அமைந்தது. மோனிக்காவால் அவருடைய உரையாடலுக்கு ஏற்றதாக வார்த்தைகளை உபயோகிக்க முடியாமற் போய் விட்டது. உரையாடல் முடியும் போது "சுவீற்ட்றீம்ஸ்!" (இன்பக்கனவுகள்) என்ற வார்த்தைகளுடன் தான் முடித்தார்.

இருப்பினும் மோனிக்கா அந்த உரையாடலின் போது உணர்ச்சிவசப்பட்டிருந்தமையினால், அவருடைய பேச்சுக்கு ஏற்றாற் போல் அவளால் ஈடுகொடுக்க முடியாமற் போய்விட்டது. நான் பேசியமுறை அவருக்குப் பிடிக்காதிருக்குமானால் இனிமேல் அவர் என்னுடைய உரையாடவோ என்னைப் பார்க்கவோ மாட்டார். மிக விரைவாகவே அவர் என்னை மறந்து விடுவார், என்றும் கருதலானாள்.

இதன் பின்னரும் பல நாட்கள் கிளின்ரனிடமிருந்து மோனிக்காவுக்கு அழைப்பு எதுவும் வரவில்லை. இடையில் ஒரு நாள் தொலைபேசியில் அழைப்பதாக கூறியிருந்தார். ஆனால் அன்றும் மோனிக்காவுக்கு ஏமாற்றமே.

தொடர்ந்து வந்த - ஜனவரி 21ம் திகதி ஞாயிற்றுக்கிழமை வெள்ளை மாளிகையில் முக்கியமான அலுவல் ஒன்றைக் கவனித்து விட்டு அவசரமாக வீடு திரும்பிக் கொண்டிருந்தாள் மோனிக்கா. கிளின்ரன் தனது இல்லத்திலிருந்து ஒரு மெய்காப்பாளருடன் உரையாடிய வண்ணம் ஓவல் அலுவலகம் நோக்கி வந்து கொண்டிருந்தார். மோனிக் காவைக் கண்டதும் அவளைச் சைகை காட்டி நிறுத்தி விட்டு, மெய்காப்பாளரையும் அனுப்பிவிட்டு, அருகில் சென்றார். தான் ஓவல் அலுவலகத்துள் செல்லப்போவதாகவும், வேறெங்காவது போய்விட்டு வருவதுபோல், யாரும் காணாமல், ஓவலுக்கு வருமாறும் கேட்டுக் கொண்டார்.

மோனிக்கா இத்தடவை இரண்டில் ஒன்று பேசித் தீர்த்துவிடுவதென்று சங்கற்பம் பூண்டிருந்தாள். தன் மீது உண்மையான அன்பிருந்தால் அடிக்கடி தொலைபேசியில் தொடர்பு கொள்வதுடன் மட்டுமல்லாமல், அடிக்கடி உல்லாசமாக இருக்க வழிதேடவேண்டும் என்று அவரிடம் திடமாகச் சொல்லிவிட வேண்டும். இல்லாவிட்டால் இக்கண்ணாமூச்சு விளையாட்டை உடன் நிறுத்திவிட வேண்டும் என்று அவரிடம் கூறிவிடுவது, என்று எண்ணிக் கொண்டிருந்தாள்.

தான் சென்ற பாதையில் சற்றுத் தூரம் நடந்து சென்ற மோனிக்கா மீண்டும் தனது அலுவலகத்துக்கு வந்து, ஓவல் அலுவலகத்தின் மேற்குப்புறமாக உள்ள கதவுக்கருகில் போய் மெதுவாகத்தள்ளினாள். கதவி திறந்து அவளை உள்வாங்கியதும் தானாக மூடிக்கொண்டது.

அவளை எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருந்த கிளின்ரன், அவர்கள் வழக்கமாக காதல் லீலைகளில் ஈடுபடும் பிரத்தியேகமான பின்புற அறைக்குப் போகவருமாறு, சைகைகாட்டினார். முகத்தை 'உம்' என்று வைத்துக் கொண்டு, தலையைக் குனிந்த வண்ணம் மோனிக்கா நின்றிருந்தாள். மீண்டும் இரு தடவை மோனிக்காவை கிளின்ரன் அழைத்தார். அவள் ஆடாமல் அசையாமல் அப்படியே நின்றாள்.

(வருவாள்)


## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?

## தலைமன்னார் வாசகிக்கு அதிஷ்டம்!

| இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி | |
| --- | --- |
| இவர்தான் | திருமதி வி.ஞானமலர் தற்குரூஸ், கீளியன் குடியிருப்பு, தலைமன்னார். |

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.



## பாப்பா முரசு சிறுகதை

# இறைவனின் விருப்பம்



குளத்திலிருந்து மீன்களைச் சாப்பிட்ட இரண்டு நாரைகள், சற்று இளைப்பாறுவதற்காக ஒரு மரத்தின் மீது அமர்ந்தன.

அவற்றில் ஒன்று ஆண் நாரை. மற்றொன்று பெண் நாரை.

இரண்டும் தங்கள் எதிர்கால வாழ்கை குறித்து பேசத் துவங்கின.

பேசிக் கொண்டே பெண் நாரை தற்செயலாக கீழே பார்த்தது.

கீழே-

ஒரு வேடன் அவைகளை வில்லால் குறிபார்த்துக் கொண்டிருந்தான். அதைக் கண்டு திடுக்கிட்ட பெண் நாரை, சட்டென்று தன்மேல் விழுந்து அப்பால் செல்லும் நிழலையும் கவனித்து, விருட்டென்று தலையைத் தூக்கி மேலே பார்த்தது.

ஒரு பெரிய வல்லூறு அவைகளைப் பிடிக்க மிக அருகாமையில் வட்டமிட்டுக் கொண்டிருந்தது.

பெண் நாரையின் நெஞ்சு 'திடுக்' கென்று அதிர, அது ஆண் நாரையைப் பார்த்து, "இன்று நாம் தொலைந்தோம். கீழே பாருங்கள். ஒரு வேடன் நம்மை அம்பால் வீழ்த்தக் குறிபார்த்துக் கொண்டிருக்கிறான். மேலே ஒரு கொடும் வல்லூறு நம்மைப் பிடிக்க பறந்துகொண்டிருக்கிறது. நம் வாழ்க்கை அவ்வளவுதான்!" என்று சொல்லிவிட்டு அழத் தொடங்கியது.

அப்போது ஆண் நாரை அதைப் பார்த்து, "இதோ பார்! நீயாக எந்த முடிவுக்கும் வந்து மனதைப் போட்டு வருத்திக் கொள்ளாதே. நாம் செத்துத்தான் போவோம் என்று இவற்றை பார்த்ததும் முடிவுக்கு வந்துவிடக்கூடாது. இறைவனின் விருப்பம் அதுவாக இருந்தால் நாம் இறப்பதை யாராலும் தடுக்க முடியாது. ஆனால், இறைவனின் விருப்பம் வேறு விதமாக இருந்தால்.....!" என்று சொல்லி நிறுத்தியது.

அப்போது "ஆ!" என்று ஒரு சத்தம் கீழே இருந்து வந்தது.

இரண்டு நாரைகளும் கீழே பார்த்தன.

வேடனை ஒரு பாம்பு தீண்ட, அவன் அலறிக்கொண்டே தடுமாறி விழ, அவனது கையில் பாய்வதற்குத் தயார் நிலையில் இருந்த அம்பு, அந்த தடுமாற்றத்தால் வில்லில் இருந்து சீறிப் பாய்ந்து சென்றது. வானத்தில் வட்டமிட்டுக் கொண்டிருந்த வல்லூறுவின் உடலில் சரியாகப் பாய்ந்தது.

அலறிய வல்லூறு கீழே விழுந்து துடி துடித்து சிறிது நேரத்தில் இறந்தது.

அதே சமயம், கொடிய பாம்பின் விஷம் தலைக்கேறியதும் வேடனும் துடி துடித்து இறந்தான்.

இந்தக் காட்சியைக் கண்டு ஒரு கணம் உறைந்து போனாலும், அதுதான் இறைவனின் விருப்பம் என்று உணர்ந்து தலை கவிழ்ந்தது பெண் நாரை. அவசரப்பட்டு, தான் ஒரு முடிவுக்கு வந்ததை நினைத்து அது வெட்கமும் பட்டது.

பிறகு ஆண் நாரையை அது பார்க்க, அதுவும் பெண் நாரையைப் பார்த்து, "இறைவனின் விருப்பத்தைப் பார்த்தாயா? ஒன்று மட்டும் தெரிந்துகொள். எதிர்காலத்தில்... அவ்வளவு ஏன்.... அடுத்த விநாடி நமக்கு என்ன நடக்கும் அல்லது உலகில் என்ன நடக்கும் என்பதை கணித்துக் கூறும் சக்தி மனிதன் உட்பட எந்த உயிரினத்துக்கும் இல்லை. அது இறைவன் மட்டுமே வைத்துக் கொண்டுள்ள இரகசியம். அதை ஒருவர் கணித்துக் கூறுகிறார் என்றால், அது பொய். புரிந்து கொண்டாயா?" என்றது.

"ஆமாம்! இந்த சம்பவத்திற்குப் பிறகு தான் எனக்கு எல்லாமே விளங்குகிறது. இனிமேல், இருக்கின்ற அறிவைக் கொண்டே சிந்தித்து செயல்படுவேன்!" என்றது பெண் நாரை. அதைக் கேட்டு ஆண் நாரை சந்தோஷமடைந்தது.


பிறகு இரண்டும் மரத்தை விட்டு கிளம்பி, தங்கள் இருப்பிடத்தை நோக்கி பறந்தன.

## யாருடைய தூண்டில்

முகேஷ், ரமேஷ், தினேஷ் ஆகிய மூவரும் தூண்டில் போட்டனர். ஆனால் ஒருவரது தூண்டிலில்தான் மீன் சிக்கியது. அந்தத் தூண்டில் யாருடையது?




## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **04.03.2000.**

வர்ணம் தீட்டும் போட்டி இல: **333**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 331

**பரிசுக்குரியவர்:**
பத்மநாதன் தனூஜா,
தவசிக்குளம், வவுனியா.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| சாள்ஸ்,<br>பியந்தா சிறுவர் இல்லம், கல்குடா. | சிவபாதசுந்தரம் சகிராம்,<br>புனித சூசையப்பர் கல்லூரி, திருகோணமலை. |
| ஜெ. தயாழினி,<br>சரஸ்வதி த.ம.வித்தியாலயம், லிந்துல. | ஆர். ஜெயந்தகுமார்,<br>விஜயரத்தினம் இந்துக் கல்லூரி, நீர்கொழும்பு. |
| முஹமட் சிராஜ் ஜிப்ரி,<br>சாஹிரா தேசிய பாடசாலை, மாத்தளை. | பி. அன்டன் பிரசாத்,<br>தொட்டுலாகலை தமிழ் வி., அப்புத்தளை. |
| அ.சரணியா ஏஞ்சல்,<br>மட்/றோ.க.த.க.பாடசாலை, தாழங்குடா-03, ஆரையம்பதி. | எம். லோகாஷினி,<br>நு/மெதடிஸ்ட் தமிழ்மகா வி. கந்தப்பளை. |
| எஸ். லயனி,<br>இறம்பைக்குளம் மகளிர் ம.வி., வவுனியா. | எஸ். ஜீவானந்தன்,<br>தமிழ் மகா வித்தியாலயம், தலவாக்கெலை. |

## மாண்ட்ரில்



ஆபிரிக்காவின் மேற்குப் பகுதியில் காணப்படும் பெரிய குரங்கினம் மாண்ட்ரில். கரும்பழுப்பு நிறம். நீண்ட கைகளும் பெரிய வெட்டுப்பற்களும் கொண்டவை.

கூட்டமாகத் தரையில் வாழும் இவை தாவரங்கள், பழங்களை உண்கின்றன. ஆண் குரங்கின் கன்னம் நீல நிறமாகவும், மூக்கு சிவப்பாகவும் பின் பகுதி சிவப்பும் நீலமுமாகவும் இருக்கும்.

கோபமடையும் போது இந் நிறங்கள் பளிச்சென்று தெரியும்.

ஆபிரிக்கா மற்றும் அரேபியாவில் உள்ள பெரிய குரங்கினம் பபூன் ஆகும். தலை நீண்டு பெரிதாக இருக்கும். பற்கள் கூர்மையானவை. கைகளும் கால்களும் ஒரே அளவு நீளமானவை.

கன்னங்களில் உணவை அடக்கிக் கொள்ளும் இவற்றின் உணவு காய், கனி, பூச்சிகள். இவையும் கூட்டமாக வாழும். ஒரு கூட்டத்தில் 10 முதல் 100 குரங்குகள் வரை காணப்படும்.

## விண்வெளி தகவல்கள்

1. நவீன விண்வெளியுக தந்தை -சியோல் கோவ்ஸ்கி.
2. லூனா விண்கலம் அனுப்பிய நாடு - சோவியத் ஒன்றியம்.
3. இந்தியாவின் முதல் விண்வெளிவீரர் -ராகேஸ் சர்மா.
4. பூமிக்கருகிலுள்ள நட்சத்திர கூட்டம் - அந்ரோ மீடா.
5. சந்திரனுக்கும் பூமிக்குமிடையான தூரம் - 2,40,000 மைல்.
6. சந்திரனில் முதல் இறங்கிய கலம் - லூனா 1.
7. செவ்வாய் கிரகத்தின் விட்டம் - 4200 மைல்.
8. உலகிலே மிகப்பெரிய கோள் மண்டலம் உள்ள இடம் - மாஸ்கோ.
9. வியாழனின் உப கோள்களில் பெரியது - கனிமீர்.
10. விண்வெளிக்கு அனுப்பிய பாரமான விண்கலம் - அப்பலோ.

தொகுப்பு:- மு.சக்திலேந்திரன்-கொழும்பு.

## செய்து பாருங்கள்



ஒரு புதிய மைப் பேனாவை வாங்குங்கள். மைக்குப் பதிலாக எலுமிச்சம் பழத்தைப் பிழிந்து வடிகட்டி சாறு எடுத்து, அந்தப் பேனாவில் நிரப்புங்கள்.

ஒரு வெள்ளைத்தாளில் சரியாக எழுதுகிறதா என்று எழுதிப் பாருங்கள். நீங்கள் தனியாக அமர்ந்து உங்கள் நண்பர்கள் ஒவ்வொருவராகக் கூப்பிடுங்கள்.

"இது தண்ணீர் நிரப்பிய பேனா. இதைக் கொண்டு இந்த வெள்ளைத் தாளில் ஏதாவது எழுதுங்கள். அது என்னவென்று கண்டுபிடிக்கிறேன்!" என்று சொல்லுங்கள்.

பிறகு மேசையில் ஒரு மெழுகுதிரியை ஏற்றி வைத்துவிட்டு, "மெழுகுவர்த்தியே! இவர்கள் எழுதியதைச் சொல்"? என்று அந்த வெள்ளைத்தாளை, மெழுகுவர்த்திச் சுடரின் மேல் சூடேற்றுங்கள். கவனமாகச் சூடேற்ற வேண்டும். இல்லாவிட்டால் தாள் எரிந்து விடும். சூடேற்றிய தாளில் நாங்கள் எழுதியது பளிச்சென்று தெரியும்.



# திக் திக் தொடர்

"சத்தம் கேட்டதுன்னு சொன்னான். நான் என்னவோ ஏதோன்னு போய் கதவைத் தட்டிப் பார்த்தேன். உள்ளேயிருந்து எந்தச் சத்தமும் வராமே போகவே வேலைக்காரனை வேண்டிலேட்டர் வழியா பார்க்கச் சொன்னேன்...."

"பொமரேனியன் நாய் எப்பவுமே பங்கஜ் கூடத்தான் இருக்குமா....?"

"அவன் ஊர்ல இருந்தா நாய் அவனை விட்டுப் பிரியாது! எங்கே அந்த நாய்....?"

அந்த அம்மாள் அறைக்குள் சற்றும் முற்றும் பார்க்க சார்லஸ் கனமான பெருமூச்சோடு சொன்னார்,

"அந்த நாய் மேல கொலையாளிக்கு என்ன கோபம்ன்னு தெரியலை. அதையும் ரத்தக் களரியாக்கிட்டுப் போயிருக்கான்...."

"அய்யா... என்ன சொன்னீங்க....?" அந்த அம்மாள் கேட்டுக் கொண்டிருக்கும் போதே, ஃபாரன்ஸிக் ஆபீஸர் ஒருவர் வேக வேகமாய் பக்கத்தில் வந்து நின்றார்.

"ஸார்....."

"எஸ்..."

"ஒரு நிமிஷம் என்கூட வர்றீங்களா?"

"டிட் யூ கெட் எனி க்ளு....?"

"எஸ்.... ஸார்...."

"என்ன....?"

"ப்ளீஸ் கம் வித் மீ ஸார்...."

சார்லஸ், ஃபாரன்ஸிக் ஆபீஸரைப் பின் தொடர்ந்து போக, அவர் அந்த அறையில் இருந்த ஜன்னலுக்குக் கூட்டிக் கொண்டு போனார். ஜன்னலில் பதித்திருந்த க்ரில் கம்பிகளைத் தொட்டுக் காட்டினார்.

"இதைக் கொஞ்சம் அசைச்சுப் பாருங்க ஸார்...."

அசைத்தார்.

போட்டுக் கொண்டு வந்தானாம்..."

"அவன் சொல்லுவது நம்பும்படி இல்லையே?"

"எங்களுக்கும் அதே கருத்துதான் ஸார். அவன் மாட்டிக் கொண்ட பின், தப்பித்துக் கொள்வதற்காக அப்படிப் பொய் சொல்லியிருக்கிறான். அவனுக்கு தேர்ட் கிரேடு ட்ரீட்மெண்ட் கொடுத்து விசாரணை பண்ணி பார்த்தீர்களா....?"

"ஸார்.... அவனுக்கு அந்த ட்ரீட்மெண்ட்டைக் கொடுக்க முடியாது..."

"ஏன்....?"

"அவனைச் சோதனை பண்ணின டாக்டர் கொடுத்த மெடிக்கல் ரிப்போர்ட்படி, அவன் ஒரு ஹார்ட் பேஷண்ட். அவனை வதைத்து உண்மை வாங்குவது உயிருக்கே ஆபத்தாக முடியலாம் என்பது டாக்டர் செய்த எச்சரிக்கை.... அந்த வார்னிங்கை மனசுல வெச்சுகிட்டுத்தான் அவனை ஹார்ஷா ட்ரீட் பண்ணலை..."

"அதுக்காக மயிலே மயிலே இறகு போடுன்னா அது போடாதே....?"

"ஸார்! அவனை ஹார்ஷா ஹேண்டில் பண்ணப் போய், உயிரை விட்டுட்டான்னா உண்மைகளை வாங்க முடியாதே ஸார்..."

"அந்த முரளி க்ரூப்பை கஸ்டடிக்கு கொண்டு போய் கசக்கி எடுத்ததில் ஏதாவது உண்மை வெளியே வந்ததா?"

"ஸார்... அந்த க்ரூப் க்ளீயரா சொல்லிட்டாங்க. "நாங்க கிரிக்கெட் ப்ளேயர்ஸ் எல்லாரையும் ஒண்ணா தீர்த்துக் கட்டத் திட்டம் போட்டுத்தான் பைரவியை மனித வெடிகுண்டா மாற்றி ஏர்போட்டுக்கு அனுப்பி வெச்சோம். பட், பைரவி போலீஸ்ல மாட்டிகிட்டா... அவ உண்மை சொல்லாததினால் அவளை ஒரு மறைவு இடத்துக் கொண்டு போய் வெச்சுகிட்டு எங்களையும் போலீஸ் ட்ராப் பண்ணி

"அதுக்கு ஒரு வழி இருக்கு...?"

"என்ன வழி ஸார்....?"

"ஃபோன்ல வேண்டாம். நேர்ல வந்து சொல்றேன்...." சார்லஸ் ரிஸீவரை வைத்துவிட்டு ஒரு புதிய வேகத்துடன் எழுந்தார்.

க்யூ ப்ராஞ்ச் இயங்கிக் கொண்டிருந்த அந்தக் கட்டடத்துக்கு முன்பாக, ஜீப்பை மௌனமாக்கிவிட்டு அஸிஸ்டண்ட் கமிஷனர் சார்லஸ் உள்ளே போக, இன்ஸ்பெக்டர் ஒருவர் எதிர்கொண்டார்.

சல்யூட் அடித்துவிட்டு அவர் ஒதுங்கி நிற்க, கேட்டார்: "என்ன சொல்றான் அந்த பாலசுப்ரமணியன்?"

"சொன்ன பதிலையே திருப்பித் திருப்பி சொல்லிட்டிருக்கான் ஸார்..."

"வாங்க பார்க்கலாம்..."

உள்ளே போனார்கள். அரையிருட்டில் அமிழ்ந்து கிடந்த என்கொய்ரிஸெல்லுக்கு முன்பாய் போய் நிற்க, செண்ட்ரிக்கு இருந்த கான்ஸ்டபிள் கம்பிக் கதவில் தொங்கிக் கொண்டிருந்த பூட்டுக்கு விடுதலை கொடுத்தார்.

நாற்பது வாட்ஸ் பல்புக்கு உயிர் கொடுக்கப்பட, உள்ளே சிமெண்ட் திட்டில் ஒருக்களித்துப் படுத்துக் கொண்டிருந்த அந்த இளைஞன் சோர்வாய் எழுந்து உட்கார்ந்தான்.

உடம்பில் நடுக்கம். கண்களில் பயம். போட்ட பெண் வேஷம் பாதி கலைந்து போயிருக்க, கண்களில் தீற்றியிருந்த மையும் கன்னங்களில் படிந்திருந்த ரோஸ் பௌடரும் மிச்சம் இருந்தது.

எழுந்து நின்றான்.

சார்லஸ், செண்ட்ரி இருந்த பக்கம் கையை நீட்ட, அவர் கைக்கு லாட்டி வந்தது.

லாட்டியால் அவன் முகம் நிமிர்த்தப் பட்டது. "இதுவரைக்கும் நீ பொய் பேசியிருக்கலாம். இனிமேல் உன் வாயிலிருந்து ஒரு பொய் கூட வரக் கூடாது. நீ யார்? உண்மை

## 15 சிகப்பு வணக்கம்

க்ரில் கம்பிகள் ஆடின.

ஃபாரன்ஸிக் ஆபிஸர் சொன்னார். "ஸார்! கொலையாளி இந்த வழியாகத்தான் உள்ளே வந்து காரியத்தை முடிச்சுட்டு வெளியே போயிருக்க முடியும். இந்த க்ரில் கம்பிகளை முன்கூட்டியே யாரோ ஆக்ஸா பிளேடால அறுத்து, அதை டம்மியா பொருத்தி வச்சுட்டு, பங்கஜ் உள்ளே தூங்கிட்டிருக்கும் போது க்ரில்லை எடுத்து வச்சுட்டு, உள்ளே வந்து காரியத்தை முடிச்சுட்டு மறுபடியும் க்ரில்லைப் பொருத்திகிட்டு போயிருக்கணும்...."

"நீங்க சொல்றதைப் பார்த்தா பங்கஜ் கிரிக்கெட் விளையாடறதுக்காக இங்கிலாந்து போனபோதே இந்தக் காரியத்தை யாரோ பண்ணியிருக்காங்க?"

"மே...பி... ஸார்! பட் இந்த வீட்ல இருக்கிறவங்களுக்குத் தெரியாமே யார் வந்து இந்தக் காரியத்தைப் பண்ணியிருக்க முடியும்....?"

"எதிரி நாம் எதிர்பார்த்ததைக் காட்டிலும் புத்திசாலியாக இருக்கிறான்..." சொன்ன சார்லஸ் ஜன்னலின் க்ரில் கம்பிகளை மறுபடியும் இழுத்துப் பார்த்தார்.

ஒரு போர்ஷன் கையோடு வந்தது. க்ரீல் அறுபட்ட இடம் தார் பூசியது போன்ற கறுப்பில் தெரிய, சார்ல்ஸ் கேட்டார்.

"என்ன இது கறுப்பாய்....?"

"க்ரில் கம்பியை அறுப்பதற்கு முன்னால் அந்த இடத்தில் அமிலம் கலந்த ரசாயனக் கலவையைப் பூசியிருக்காங்க ஸார்... கம்பியை சுலபமாய் அறுப்பதற்கு இது ஒரு வழி ஸார்..."

சார்லஸ் சில விநாடிகள் கண் மூடி நின்றுவிட்டு பக்கத்திலிருந்த டெலிஃபோனை நோக்கிப் போய் ரிஸீவரை எடுத்துக்கொண்டார். டயலில் சில எண்களைத் தட்டிவிட்டு, மெல்லிய குரலில் கேட்டார்.

"க்யூ ப்ராஞ்ச்....?"

"எஸ் ஸார்...."

"ஏர்போர்ட்டில் பெண் நிருபராய் வேஷம் போட்டுக் கொண்டு வந்த ஆள் இப்போது உங்க கஸ்டடியில் தானே இருக்கிறான்,....?"


"ஆமாம்.... ஸார்..."

"அவனிடமிருந்து ஏதாவது விஷயம் கிடைத்ததா?"

"ஸார்... அவனிடம் எப்படியெல்லாமோ விசாரணை பண்ணிப் பார்த்துவிட்டோம். அவன் திரும்பத்திரும்ப ஒரே பதிலைச் சொல்லிக் கொண்டிருக்கிறான்...?

"என்ன சொல்கிறான்...?"

"அவன் பெயர் பாலசுப்ரமணியனாம். நண்பர்களிடம் போட்ட பந்தயத்தில் ஜெயிப்பதற்காக பெண் வேஷம்



பிடிச்சுட்டாங்க.

நாங்க போலீஸ்கிட்டே பிடிபட்டாலும் வேற ஒரு க்ரூப் எங்க நோக்கத்தைத் தவணை முறையில் நிறைவேத்திகிட்டு வர்றாங்க. அந்த குரூப் யார்ன்னு எங்களுக்குத் தெரியாது. அவங்களுக்கும் எங்களுக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. நீங்க எங்களை ரெண்டா வெட்டிப் போட்டாலும் இதுதான் உண்மை. எங்ககிட்ட விசாரணை பண்ணி டயத்தை வேஸ்ட் பண்ணாமே, வேற வழிகளில் அந்த க்ரூப்பைப் பிடிக்க முயற்சி பண்றது நல்லது"ன்னு முரளி க்லியரா சொல்லிட்டான். அவங்க சொல்றதும் எனக்கு உண்மையாத்தான் சார் படுது..."

"அப்படீன்னா அந்தப் பெண் வேஷம் போட்ட பாலசுப்ரமணியன் கிட்டத்தான் ஏதோ தப்பு இருக்கு?"

"எஸ்... ஸார்....! பட் அவனை ஹார்ஷா ஹேண்டில் பண்ண முடியாதே ஸார்.... உண்மையை எப்படி வாங்கறது....?"

யைச் சொல்லு... உனக்குப் பின்னாடி இருக்கிற அந்த தீவிரவாத அமைப்புல மொத்தம் எத்தனை பேர் இருக்காங்க...?"

அவன் கும்பிட்டான்: "ஸார்! நீங்க நினைக்கிற மாதிரி நான் எந்த ஒரு தீவிரவாத அமைப்பையும் சேர்ந்தவன் கிடையாது. என் பெயர் பாலசுப்ரமணியன். கிரிக்கெட்ன்னா எனக்கு வெறி. கிரிக்கெட் ப்ளேயர்களைப் பக்கத்திலிருந்து பார்க்கவும் அவங்களோடு பேசவும் ஃபோட்டோ எடுத்துக் கொள்ளவும் எனக்கு ரொம்ப ஆசை. அதான் ப்ரஸ் ரிப்போர்ட்டர்ன்னு சொல்லிட்டு ஏர்போர்ட்டுக்குள்ளே நுழைஞ்சுட்டேன்...."

"என்ன.... மாட்டிகிட்ட பின்னாடி கதை விடறியா....?"

"இது கதை கிடையாது ஸார். உண்மை...."

"நீ சொல்றது உண்மைன்னா எதுக்காகப் பெண் வேஷம் போட்டே....?"

"ரிப்போர்ட்டர்ஸ்ல ஜெண்ட்ஸ் நிறைய பேர் இருக்கிறதை போன தடவையே வாட்ச் பண்ணினேன். நான் ஏற்கெனவே காலேஜ் நாடகங்கள்ல பெண் வேஷம் போட்ட அனுபவம் இருந்ததினால், பெண் ரிப்போர்ட்டராப் போனா என்னான்னு மனசுக்குத் தோணிச்சு. ஃப்ரண்ட்ஸ்கிட்ட சொன்னேன். அவங்க, 'வேண்டாம்..... போலீஸ் உன்னைக் கண்டு பிடிச்சுடுவாங்க'ன்னு சொன்னாங்க. நான் அதை ஒரு சவாலா எடுத்துக்கிட்டு பெண் வேஷம் போட்டேன். என் பேரை நர்மதான்னு வெச்சு, 'சூர்யக்கதிர்' பத்திரிகையின் ப்ரஸ் ரிப்போர்ட்டர் மாதிரி நேம் பேட்ஜ் தயார் பண்ணிக் குத்திகிட்டேன்.

'சூர்யக்கதிர்' அவ்வளவா பிரபலமாகாத பத்திரிகை. அதனால யாரும் என்னைக் கண்டுக்கலை... கிரிக்கெட் ப்ளேயர்ஸைப் பக்கத்துல பார்க்கணும், அவங்ககூட

**கிரைம் சக்கரவர்த்தி**
**ராஜேஸ்குமார்**

ஃபோட்டோ எடுத்துக்கணும்ங்கிற அளவுக்கு மீறின ஆசையின் காரணமா இப்படி ஒரு காரியம் பண்ணிட்டேன் ஸார்...."

சார்லஸ் அவனுடைய முகத்தை உற்றுப் பார்த்துக்கொண்டே கேட்டார்.

"உனக்கு இதே ஊரா....?"

"இல்லை ஸார்... கோயமுத்தூர்க்குப் பக்கத்துல சின்னியம்பாளையம். அப்பா ஊர்ல விவசாயம் பார்த்துகிட்டிருக்கார். நான் இங்கே தனிப்பட்ட முறையில் இண்டீரியர் டெக்கரேட்டரா வேலை பார்த்துக்கிட்டிருக்கேன்...."

"உன் ஃப்ரண்ட்ஸ்கிட்ட சவால் போட்டுட்டு வந்ததா சொன்னே.... அந்த ஃப்ரண்ட்ஸ் யாரு?"

(தொடர்ந்து வரும்)

---

'சிறை', 'தர்மயுத்தம்' போன்ற வெற்றிப்படங்களை இயக்கியவர் ஆர். சி.சக்தி. அவரது சூடும் சுவையும் கலந்த அனுபவங்கள் இங்கு தொடராகின்றன.

# தர்மயுத்தம் 25

## உணர்ச்சிகள்

அங்கெல்லாம் 'ராச லீலா'வுக்கு நல்ல பெயரும், பணமும், புகழும் கிடைத்தன. ஆனால் அதன் பிறகும் 'உணர்ச்சிகள்' வெளியாகவில்லை.

வேறு வழியின்றி அந்த நண்பர் சென்னையிலும் 'ராச லீலா'வைத் திரையிட்டுவிட்டார். சென்னை, நியூ எல்ப்பின்ஸ்டன் தியேட்டரில் (இப்போது அந்த தியேட்டர் இல்லை) திரையிடப்பட்டு வெற்றிகரமாக ஓடத் தொடங்கியது.

'ராச லீலா' சென்னையில் நூறாவது நாள் ஓடும்போது எங்களது தமிழ் 'உணர்ச்சிகள்' சென்னை ஓடியன் தியேட்டரில் (இந்தத் தியேட்டரும் இப்போது இல்லை) ரிலீசானது.

படம் பலரது பாராட்டையும் பெற்றது.



எனக்குத் திரையுலக வாழ்வில் நல்லதொரு அஸ்திவாரமாக அமைந்தது. 'யார் அந்த ஆர்.சி.சக்தி?' என்று கேட்கவைத்தது.

தமிழ் 'உணர்ச்சிகள்' படத்திற்கு விமர்சனம் எழுதிய ஒரு ஆங்கில நாளிதழில் ஆரம்பமே 'Unarcchigal' based on a Malayalam movie 'Rasa leela'_ என்று குறிப்பிடப்பட்டிருந்தது. இங்கிருந்து போன கதை எங்களது தாமதத்தினால் அங்கிருந்து வந்த கதையாக முடிந்துவிட்டது!.

இதற்கிடையில் கமலின் தாயார், எங்களின் அனைவரின் அன்பிற்குரிய அம்மா எதிர்பாராதவிதமாக காலமானார். அவரால் சுவிட்ச் ஆன் செய்து ஆரம்பிக்கப்பட்ட 'உணர்ச்சிகள்' படத்தை பார்க்காமலேயே போய்விட்டார். அது இன்றளவும் என் மனதில் மாறாத தழும்பு; மறக்கமுடியாத குறை. அம்மாவின் மரணத்தின் போது நடந்த ஒரு நிகழ்ச்சி, நான் அந்தக் குடும்பத்தில் ஒருவன் என்பதற்கு அத்தாட்சியாக அமைந்தது.

அம்மாவின் மரண ஊர்வலம் புறப்படும்போது பிராமண வழக்கப்படி பிராமணர்கள் தான் தூக்க வேண்டும் என்ற நியதி கடைப்பிடிக்கப்பட்டு, அதற்காகவே உள்ள நான்கு பிராமணர்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தனர்.

சாருஹாசன், சந்திரஹாசன், கமலஹாசன் மூன்று சகோதரர்களும் கையில் தீச்சட்டி ஏந்தி, திரும்பிப் பார்க்கக்கூடாது என்ற சாஸ்திர சட்டத்தைக் கடைப்படித்து, முன்னால் போய்க்கொண்டிருந்தார்கள்.

நாங்கள் எல்லாம் அம்மாவின் உடம்புக்குப் பின்னே நடந்து வந்துகொண்டிருந்தோம். ஊர்வலம் ஆழ்வார்பேட்டை ஜங்க்ஷனைத் தாண்டியபோது திடீரென்று "சிவா" என்று கமல் கூப்பிட்டார். கமல் வீட்டில் பொறுப்புள்ள, பாசமுள்ள ஒரு உதவியாளராக வேலை பார்த்துக் கொண்டிருந்தார் சிவா.

கமலின் குரலைக் கேட்டதும், எங்களோடு வந்துகொண்டிருந்த சிவா, முன்னே ஓடிச்சென்று "என்ன?" என்று கேட்க, திரும்பிப் பார்க்காமல் நடந்து கொண்டிருந்த கமல், நடந்துகொண்டே, "அம்மாவை யார் தூக்கிக்கிட்டு வர்றாங்க?" என்று கேட்டார்.

அதற்கென அமர்த்தப்பட்டிருக்கும் பிராமணர்கள் தூக்கிவருவதாகச் சொன்னார் சிவா.

"சக்தி அண்ணன் எங்கே?" என்று கேட்டார் கமல்.

"பின்னால் வந்துகொண்டிருக்கார்" என்றார் சிவா.

"அவரைத் தூக்கச் சொல்லு" என்று கமல் சொல்ல, சிவா பின்னால் ஓடிவந்து "அண்ணே! உங்களைத் தூக்கச் சொல்றாரு" என்றதும். ஆசையுடன் நான் ஒரு பிராமணரிடம் சென்று, "நான் தூக்கிக்கிட்டு வர்றேன்" என்றதும் அந்த பிராமணர் "நீங்கள்லாம் தூக்கக்கூடாது" என்று மறுத்துவிட்டார்.

மறுபடியும் சிவா ஓடிச்சென்று, கமலிடம் "அந்தப் பிராமணர் கொடுக்க மறுக்கிறார்" என்றதும், "அந்த ஆள் குடுக்குறானா, இல்ல நான் வரட்டுமா? சக்தி அண்ணனையே தூக்கச் சொல்லு" என்று நடந்து கொண்டே கத்தினார்.


கமலின் கோபத்தைக் கண்டதும் சிவாவுக்கு உற்சாகமும், தைரியமும் வந்து என்னைக் கூப்பிட்டு அந்தப் பிராமணரை வலுக்கட்டாயமாக ஒதுக்கச் செய்து, என் தோளில் அம்மாவை சுமந்துவரும் பாக்கியத்தைக் கொடுத்தார்.

எனக்கு விவரம் தெரியாத காலத்திலேயே என் பெற்ற தாயை இழந்தவன். அந்த உடம்பை சுமப்பதற்கு எனக்கு வாய்ப்பு கிடைக்கவில்லை. ஆனால், கொஞ்ச நாளாவது உற்ற தாயாக இருந்த, இவரது உடம்பை சுமக்கவாவது எனக்கு சந்தர்ப்பம் கிடைத்ததே என்று சந்தோஷமாக தோள் கொடுத்தேன்.

ஆனால், ஒதுக்கப்பட்ட அந்த பிராமணரோ சாஸ்திரமும், சம்பிரதாயமும் கெட்டுவிட்டதாகச் சொல்லி புலம்பிக் கொண்டே வந்தார். அவர் போதையில் இருந்ததாக நினைக்கிறேன். அவ்வப்போது அவரது பேச்சில் கெட்டவார்த்தைகள் வந்து போயின.

நான் தோள் கொடுக்க ஆரம்பித்ததும் ஒவ்வொரு நண்பர்களாக வந்து தோள் கொடுக்க ஆரம்பித்தனர். சாஸ்திர, சம்பிரதாயத்தோடு தொடங்கிய அந்த ஊர்வலம் அன்பும், நட்பும் கொண்ட பல நல்ல உள்ளங்களின் துணையோடு முடிந்தது.

ஊர்வலம் கிருஷ்ணாம்பேட்டை சுடுகாட்டை அடைந்ததும், தீச்சட்டியைக் கீழே வைத்த கமல், வழியெல்லாம் புலம்பிக் கொண்டே வந்த அந்த பிராமணரை எட்டிப் பிடித்து, கையை ஓங்கியபடி "ஏன்யா, வழி நெடுக திட்டிக்கிட்டே வர்றே. பிரா



மணர்தான் தூக்கணுமா?" என்று சொல்லிவிட்டு, என்னை நோக்கி கையை நீட்டி, "அவரும் ஒரு பிராமணர்தான்யா. முட்டை கூட சாப்பிட மாட்டார், தெரியுமா உனக்கு? நீ பிராமணங்றீயே.... குடிச்சிட்டு வந்திருக்கே, அது சாஸ்திரத்துக்கு உட்பட்டதா?" என்று ஏகமாகப் பேச ஆரம்பித்ததும், நாங்கள் எல்லாம் கமலை சமாதானப் படுத்தி, அமைதிப்படுத்தினோம்.

இந்த நிகழ்ச்சி, நட்புக்கல்ல, உறவு என்ற சொல்லுக்கல்ல, அதையும் தாண்டிய மனம் நிறைந்த, உண்மையான -எனக்குப் பெயர் சொல்லத் தெரியவில்லை -அதற்கு அடையாளம். ஏனென்றால், அம்மா இருக்கும் போது, எங்கள் இருவரையும் சாப்பிட அழைப்பார்கள். எப்படித் தெரியுமா?

"டே, கமலஹாசத் தேவா, சக்தி ஐயர் சாப்பிட வாங்கப்பா" என்பார். காரணம், கமல் அசைவ உணவை விரும்பிச் சாப்பிடுவார். நான் அசைவம் சாப்பிடுவது கிடையாது.

அம்மாவின் மரணத்தின்போது இப்படி ஒரு நிகழ்ச்சி என்றால், கமலின் அப்பாவின் மரணத்தின்போது மற்றொரு நிகழ்ச்சி. அன்று கமலின் பிறந்தநாள். அதற்கு இரண்டு நாள் முன்னதாக, நான் வீட்டில் இல்லாத நேரத்தில் கமல் ரசிகர் மன்றத்தினர் வீட்டிற்கு வந்து, கமலின் பிறந்தநாள் விழாவிற்கான அழைப்பிதழ் கொடுத்துவிட்டு, "கட்டாயம் வரணும்னு சார் சொல்லச் சொன்னாரு" என்று சொல்லிவிட்டுப் போயிருந்தார்கள்.

நானும் கமலைப் பார்த்து பல நாட்கள் ஆகிவிட்டன. டெலி.ஃபோனில்கூட பேசவில்லை. எனவே விழாவில் கண்டிப்பாகக் கலந்து கொள்ள வேண்டும் என்று முடிவெடுத்தேன்.

(அனுபவங்கள் தொடரும்)

# வீரன் தான் பிரீன்

27

ஐரிஷ் விடுதலைப் போராட்டம் 750 வருடங்களுக்கு மேற்பட்ட நீண்ட நெடிய வரலாறு கொண்டது! 1900ம் ஆண்டு ஆரம்பம் வரை ஐரிஷ் மிதவாதத் தலைவர்கள் பிரித்தாளும் பிரித்தானியரால் ஏமாற்றப்பட்டனர். இந்நிலையில் 1913ம் ஆண்டு ஆயுதம் தாங்கிய ஐரிஷ் தொண்டர் படை உருவானது. இதுவே பிற்காலத்தில்– 1919 ல் ஐரிஷ் குடியரசு இராணுவமானது. ஐரிஷ் தொண்டர் படையின் வீரன் தான் பிரீன். மனதை உலுக்கும் எழுச்சிமிகு உண்மை வரலாறு இது.

வேடிக்கையான புனை பெயர்கள் வைப்பதில் ஐரிஷ்காரர்கள் மிகவும் சாமர்த்தியசாலிகளாதலால் புதியபட்டாளத்திற்கு 'பிளாக் அன்டு டான்ஸ்' என்று பெயர் வைத்தனர். (பிளாக் அன்டு டான்ஸ்' என்றால் கறுப்பும் கபிலமும் கலந்தது என்பது பொருள்.) அயர்லாந்தில் நாதலாங்கைச் சுற்றியுள்ள ஜில்லாவில் கறுப்பும் கபிலமும் கலந்த நிறத்துடன் சில வேட்டை நாய்களுண்டு.

அந்த நாய்கள் 'பிளாக் அன்டு டான்ஸ்' என்று அழைக்கப்பட்டு வந்தன. மக்கள் அந்த நாய்களின் பெயரையே புதிய பட்டாளத்திற்கும் சூட்டினார்கள். புதிய பட்டாளத்தார் வெறி பிடித்த நாய்களிலும் கேடாக நடந்து கொண்டதால், அவர்களுக்குச் சூட்டிய பெயர் பல வழிகளிலும் பொருத்தமானது தான்.


இனி பொலிஸ் படைவீடுகள் தாக்கப்பட்டதைக் கவனிப்போம். முதல் முதலாகக் கால்ட்டீ மலைகளின் தென்பாகத்திலுள்ள அரக்லன் என்னுமிடத்தில் படை வீடுகள் தாக்கப்பட்டு அங்கேயிருந்த பொலிஸார் தொண்டர்களால் பிடித்துக் கொல்லப்பட்டனர். அந்த போராட்டத்தைத் தலைமை வகித்து நடத்தியவர் ஜெனரல் லியாம் லிஞ்ச். (அவர் மூன்று மணித்தியாலங்களுக்குப் பின்னால் உள்நாட்டுக் கலகத்தில் கொல்லப்பட்ட வீரர்களுள் ஒருவர்) லியாம் லிஞ்ச் பிறவியிலேயே தளகர்த்தா.

ஒரு பெரிய பட்டாளத்தை அணிவகுத்து நிறுத்தவும், அடக்கவும், சாமர்த்தியமாய் நடத்தவும் அவர் வல்லமையுடையவர். அவரும் ஸீன் மோய்லன் என்ற மற்றொரு தளகர்த்தாவும் சேர்ந்து கொண்டு பிரிட்டிஷார் திகைக்கும் படி அற்புதமான போராட்டங்கள் செய்திருக்கிறார்கள்.

லீயாம் லிஞ்ச் ஆறு அடி உயரமும், கம்பீரமான தோற்றமும் உடையவர். அவருடைய கண்களில் காணப்பட்ட ஒளியே அவர் போர் வீரர் என்று அறிவுறுத்தியது. அவர் குழந்தையைப் போல் திறந்த வெள்ளைச் சிந்தையுடையவர். ஆனால் போராட்டத்தில் காலனும் அஞ்சும்படியாக எதிரிகளைக் கலக்குவார். ஐரிஷ் தேசியப்படையின் ஒரு பெரும் பிரிவுக்கு அவரே தலைவராக இருந்தார். 1919ஆம் ஆண்டு முதல் அவர் பிரிட்டிஷாரைப் பல இடங்களில் தாக்கியுள்ளார். அரக்லன் வீடுகளைப் பிடித்ததும் அவருடைய சாமர்த்தியமேயாகும்.

அரக்லனைத் தாக்கியதற்குப் பின்னால் மைக்கேல், பிரெனன் 'கிளேர்' என்ற இடத்தில் படை வீடுகளைத் தாக்கி, அங்கிருந்த ஆயுதங்களையெல்லாம் அபகரித்துக் கொண்டார். அங்கு கொன்ஸ்டபிள் பக்லி என்பவன் முதலில் தொண்டர்களை எதிர்த்து நின்று, பின்னால் கீழ்படிந்து விட்டான். (அவன் பிற்காலத்தில் நடந்த உள்நாட்டுக் கலகத்தில் கொரி என்னுமிடத்தில் கைதியாயிருந்த பொழுது கொல்லப்பட்டான்).

தொண்டர்கள் அடுத்தபடியாக ஏப்ரல் 28ம் திகதி பல்லி லண்டர்ஸ் படை வீடுகளை முற்றுகையிட்டுப் பிடித்துக் கொண்டனர். அவ்விடத்தில் மூன்று பொலிஸாருக்குப் படுகாயம் ஏற்பட்டது. படை வீடுகள் முற்றிலும் எரித்துத் தரைமட்டமாக்கப்பட்டன. அங்கிருந்த பொலிஸார் சகல ஆயுதங்களை



யும் தொண்டர்கள் தலைவராய் நின்ற ஸீன் மலோனிடம் சமர்ப்பித்துவிட்டுச் சரணாகதியடைந்தனர்.

தான்பிரீனும் திப்பெரரித் தொண்டர் படையை அழைத்துக் கொண்டு மூன்று இடங்களில் படைவீடுகளைத்தாக்கினான். முதலாவது அவனுக்குப் பணிந்தவை டிரங்கன் படைவீடுகள். அங்கு போராட்டம் நடந்தது ஜுன் 4ஆம் திகதியில்.

டிரங்கனின் நடந்த போராட்டம் முடிவடைய வெகுநேரம் பிடித்தது. அதில் கலந்துகொண்ட தொண்டர்படை அதிகாரிகள் தான்பிரீன், ஸீன் டிரீஸி, ஸீமஸ் ராபின்ஸன், எர்னீ ஓ மல்லி, ஸீன்ஹோகன் ஆகியோர். விடியும்வரை இருபக்கத்தார்க்கும் அருஞ்சமர் நடந்தது. காலை இளஞ்சூரியனின் கிரணங்கள் வீசிய பின்னும் அவ்விடத்தில் தொண்டர்களுடைய துப்பாக்கிகுண்டுகளும் வெடிகுண்டுகளும் சட சட வென்றுவெடிப்பது நிற்கவில்லை. சிறிது நேரத்தில் பகைவர்கள் சுடுவதைத் திடீரென்று நிறுத்தி விட்டனர்.

ஒரு நிமிஷத்திற்குப் பின்பு ஒரு மூலையிலிருந்த ஜன்னல் வழியாகப் பொலிஸார் குழல் ஊதினார்கள். அதைக் கேட்டுக் தொண்டர்கள் அவர்களை வெளியே வந்து நிற்கும் படி உத்தரவு போட்டார்கள். அவ்வாறே அவர்கள் வெளியே வந்து நின்று தங்கள் ஆயுதங்களைச் சமர்ப்பித்தனர். தொண்டர்கள் அவர்களைக் கைதுசெய்து கொண்டு மற்றப்பட்டாளங்கள் வெளியிலிருந்து உதவிக்கு வருமுன்னால், விரைவாக ஊரை விட்டு வெளியேறி விட்டனர். ஊருக்கு வெளியே சென்றதும் அவர்கள் தங்களுடைய கைதிகளை மன்னித்து விடுதலை செய்தார்கள்! அக் கைதிக்கூட்டத்தில் ஆறு கொன்ஸ்டபிள்களும் இரண்டு சார்ஜன்டுகளும் இருந்தனர். தொண்டர்களில் ஒருவருக்குக் கூடக் காயமில்லை.

அதே இரவில் கப்பர் ஒயிட் படை வீடுகளும் வேறு தொண்டர்களால் தாக்கப்பட்டன. ஆனால் அங்கு பொலிஸார் பணியவில்லை.

பத்திரிகைகளில் இவ்விஷயங்களைப் பற்றி உண்மையான விவரங்கள் வெளிவருவதேயில்லை. தொண்டர்கள் வெளிவந்து தாங்கள் செய்த வீரச் செயல்களை வெளியிடக் சூழ்நிலை பக்குவமாயில்லை.

போராட்டத்தில் தப்பிப்பிழைத்த பொலிசாரே தங்களுக்குத் தெரிந்த விஷயங்களை வெளியிட்டு வந்தனர். அவர்கள் தங்கள் இலாகாவுக்குக் கேவலம் ஏற்படாதவாறு, விருத்தாந்தங்களைத் திரித்தும், மாற்றியும், புதிதாய்ச் சிருஷ்டி செய்தும் கூறி வந்தார்கள். தாக்கிய தொண்டர்கள் 80 பேர் என்றால் பொலிஸார் 800க்கு மேற்பட்டவர் வந்திருந்ததாக கூறுவர். ஏனென்றால் 20 பேருக்கு அவர்கள் தோற்றனர் என்பது கேவலமல்லவா! மேலதிகாரிகள் இதைக் கேட்டு அவர்களைக் கண்டிக்கவும் கூடும். சில பத்திரிகை நிருபர்களுக்கு உண்மைச் செய்திகள் கிடைப்பினும் அவர்கள் சர்க்காருக்குக் கேவலத்தையுண்டாக்கும் விடயங்களை வெளியிட அஞ்சினர். வெளியிட்டால் நள்ளிரவில் 'பிளாக் அன்டு டான்ஸ்' படையினர் அவர்களை வாட்டி வருத்துவர்.

அதனால் அவர்கள் செய்தி எழுதுகையில் தொண்டரில் எவரும் காயமடையாமல் இருக்கும்' பொழுது பல தொண்டர்கள் காயமடைந்தனர்: சிலர் இறந்து வீழ்ந்தனர்!' என்று குறிப்பிடுவது வழக்கம். ஆனால் உண்மையிலேயே சில தொண்டர்கள் இறந்திருக்கும் பொழுது, அவர்களுக்கு அவ்விஷயமே தெரியாது போய் விடும்!

அடுத்தாற் போல் தான் பிரீன் கூட்டத்தார் தாக்கிய இடம் ஹால்லி போர்டு. அது திப்பெரரித் தாலுகாவின் வடமேற்குப் பக்கத்திலுள்ளது. அங்கிருந்த பொலிஸாரும் தொண்டர்களிடம் சரணாகதியடைந்து, ஆயுதங்களைப் பறி கொடுத்தனர். அங்கு அந்த போராட்டத்தில் தலைமை வகித்தவர்கள் டிரங்கனில் தலைமை வகித்த தொண்டர் படை அதிகாரிகளேயாவர்.

## தமிழில் ப.ராமஸ்வாமி

ரீயர் கிராஸ் என்னுமிடம் அடுத்தாற்போல் தாக்கப்பட்டது அங்கு போராட்டம் மிக உக்கிரமாக நடைபெற்றது. முடிவில் தொண்டர்கள் பொலிஸாரை முறியடிக்காமலே திரும்ப நேர்ந்தது. இந்தப் போராட்டத்திற்குப் பல இடங்களிலிருந்து தொண்டர்கள் உதவிக்கு வந்திருந்தனர். ஸீன் டிரீஸியும், தான் பிரீனுமே தலைமை வகித்து நின்றார்கள். பொலிஸாரும் உயிரை வெறுத்துத் தீவிரமாக போராடினார்கள், அவர்கள் எறிந்த வெடி குண்டுகளின் சில்லுகள் ஓமல்லி, ஜிம் கோர்மன், டிரீஸி, தான்பிரீன் முதலியோரைச் சிறிது காயப்படுத்தின, தொண்டர்கள் படை வீடுகளைத் தீவைத்து எரித்தார்கள். பல பகைவர்கள் தீயில் வெந்தனர். இருவர் சுடப்பட்டு இறந்தனர்.

மே மாதம் 27ம் திகதி கில்மல்லக் படை வீடுகள் தாக்கப்பட்டன. அந்தப் போராட்டம் மிகவும் புகழ் பெற்றது. தான் பிரீன் அதில் கலந்து கொள்ளவில்லை. ஸீன் மலோன் தொண்டர்களைத் தலைமை வகித்து நடத்தினார். அப்போராட்டம் இரவு 12 மணிக்கு ஆரம்பமாகி காலை 7 மணி வரை நடந்தது. கில்மல்லக் படை வீடுகள் மிகப் பெரியன வாய்,

உறுதியான கட்டிடங்களுடன் நகரின் நடுமத்தியில் இருந்தன. தொண்டர்கள் ஒரு பெரிய சாப்பாடு விடுதியையும் வேறுபல வீடுகளையும் அமர்த்திக் கொண்டு அவற்றில் தங்கியிருந்து போராட்ட நேரத்தில்தான் வெளியே சென்றனர். முதலில் படை வீடுகளின் மேல் ஒரு குழாய் மூலம் பெற்றோலைச் சொரிந்தனர். தீ வைத்தவுடன் அவ்வீடுகள் எரிந்து தரைமட்டமாயின போராட்டத்தில் ஸ்கல்லி என்ற ஒரு தொண்டன் குண்டுபட்டு இறந்தான். பகைவர்களில் காயமடைந்தவர் அறுவர்; இறந்தவர் இருவர்.

இறந்துபோன இரு பீலர்களின் கதை மிகப் பரிதாபமானது. அவர்கள் முதலிலேயே தொண்டர்களுக்குப் பணிந்து விடவேண்டும் என்று சொன்னதற்காக மற்றப் பொலிஸார் அவர்களை ஒரு அறைக்குள் தள்ளிப் பூட்டிவிட்டனர். இந்த அறை தீப்பற்றி எரியும் பொழுது அந்த இருவரும் தப்பிச் செல்ல வழியின்றி எரிந்து சாம்பராயினர்.

பொலிஸாருக்கு தலைமை வகித்து நின்ற சார்ஜண்டு பின்னால் அரசாங்கத்தால் ஜில்லா 'இன்ஸ்பெக்டர்' வேலைக்கு உயர்த்தப்பட்டார். சில மாதங்களில் தொண்டர்கள் அவரையும் வானுலகத்திற்கு அனுப்பி விட்டனர்.

அடுத்த பெரும் போராட்டம் ஊலாவில் நடந்தது. அன்று தான் சர்க்கார் படையின் பிரிகேடியர் ஜெனரல்களுள் ஒருவரான லூகாஸ் தொண்டர்களால் சிறை வைக்கப்பட்டிருந்த இடத்திலிருந்து தப்பி ஓடினார்.

லூகாஸ் என்பவர் ஆங்கிலப்படையில் பிரிகேடியர் ஜெனரல் பதவியிலிருந்தார் அவரையும் வேறு இரண்டு தளகர்த்தாக்களையும் புரட்சித்தலைவரான லியாம் லிஞ்ச் 1920ஆம் ஆண்டு ஜுன் மாதம் 26ஆம் திகதி கைதுசெய்தார். அப்பொழுது லூகாஸ் கொன்னாவில் தம்முடைய நண்பர்களுடன் தங்கியிருந்தர். திடீரென்று லிஞ்ச் தமது படையுடன் அங்கே சென்று அவர்களைப் பிடித்துக் கொண்டார். லூகாஸுன் கலனல் டான் போர்டும், கலனல் டிரெல்லும் இருந்தனர். லிஞ்ச் அம்மூவரையும் அழைத்துக் கொண்டு சமீபத்தில் தயாராய்க் காத்திருந்த ஒரு மோட்டார் காருக்குச் சென்றார்.

பார்ட்டன் என்ற ஐரிஷ் தேசாபிமானி ஒருவர் ஆங்கிலேயரின் சிறையிலிருந்தார். அரசாங்கத்தார் அவர் மீது ராஜத்துவேஷக் குற்றஞ் சாட்டிப் பத்து வருடத் தண்டனை விதித்தனர்.

(பயணம் ...தொடரும்)

---

**தமிழகத்தின் பிரபல நடிகர் ஒருவர் உட்பட சில முக்கிய பிரமுகர்கள் பற்றி கவியரசு கண்ணதாசன் எழுதி பெரும் சர்ச்சை கிளப்பிய தொடர்.** 46

# அரங்கம் அந்தரங்கம்

## கவியரசு கண்ணதாசன்

**இதில் வரும் நிகழ்ச்சிகள் பல கற்பனையே: ஆனால் இதில் காணப்படும் பாத்திரங்கள் யாவும் உண்மையே!**

**அவர்களது பெயர்களைக் கூடக் கொஞ்சம் தான் மாற்றிக் கொடுத்திருக்கிறேன். விவரம் தெரிந்தவர்கள் எந்தப் பாத்திரம், யார் என்பதைப் புரிந்து கொள்வார்கள்.**

**இவர்களைப் பற்றிய ஏராளமான சம்பவங்கள் எனது குறிப்பில் இருக்கின்றன. ஆனால் அவையெல்லாம் ஒரே சம்பவத்தின் பல பதிப்புகளே!**

**நான் எழுதியுள்ள நாவல்களில் உயிரோடு உலாவும் சிலரை முழுக்க முழுக்கப் பாத்திரங்களாக்கி எழுதிய நாவல் இதுதான்.**

**இதில் நானும் ஒரு பாத்திரம். என்னோடு சம்பந்தப்படுத்தப் பட்டு வரும் கமலா, உண்மையில் வாழ்ந்த ஒருத்தி. ஆனால் இவளது உண்மைப் பெயர் வேறு.**

~கண்ணதாசன்~

அரசியல்வாதிகளோடு தொடர்பு வைத்துச் சம்பாதிப்பவர்கள்–

–இவர்கள் அந்தச் சமூகத்தில் அடக்கம்.

இவர்கள் பெரும்பாலும் ஒருவருக்கொருவர் அறிமுகமானவர்களாகவே இருப்பார்கள். பெரிய விருந்துகளில் தங்களை அறிமுகப்படுத்திக் கொண்டிருப்பார்கள். அல்லது விமான நிலையத்து அறிமுகமாக இருக்கும்.

பம்பாய் 'கீ சேஞ்'சிலோ, டில்லி அசோகா ஒட்டலிலோ பழகிக் கொண்டிருப்பார்கள்.

தனக்குப் பழக்கமான புதிய ஒருவரை மற்ற நண்பர்களுக்கும் பழக்கப்படுத்துவது அந்த சமூகத்தின் தர்மம்.

பெரும்பாலோர் தங்கள் மனைவியரையே முதலில் அறிமுகப்படுத்துவார்கள்.

சமுதாயத்தின் நிரந்தரமான கட்டுக்கோப்புகளை விட்டு விட்டு, வெகுதூரம் விலகிப் போனவர்கள் இவர்கள்.

விருந்தையும், விளையாட்டையுமே மூலாதாரக் கொள்கையாகக் கொண்ட இவர்கள், ஒருவன் விழுந்து விட்டான் என்றால், கைகொடுக்க மாட்டார்கள். கூடுமானவரை அவனிடமிருந்து ஒதுங்கி விடுவார்கள்.

இதே கமல் பதவி போவதற்கு முன்னால் வந்திருந்தால் லலிதாவின் உபசாரம் பெரிதாகவே இருந்திருக்கும்; ஆனாலும் அவள் அவர்களை உடனடியாகத் தூக்கி எறிந்து விடவில்லை. தான் இப்போது அவர்களைவிட உயர்ந்த இடத்தில் இருப்பதாக அவளுக்கொரு பிரமை.

அந்த பிரமையில் தான் தங்கியிருப்பது, மதன்லாலின் விடுதி என்பதை அவள் மறந்து போனாள். அந்த அழகான மாடியையே வாங்கி விட்டவள் போல் காட்சி அளித்தாள்.

இந்திரகுமாரைச் சந்தித்ததில் இருந்து, அவளுக்கு எழுந்த கற்பனையின் முடிவே அது.

விடுதிச் சமையல்காரனுக்குச் சாப்பாடு தயாரிக்கும் படி உத்தரவிட்டாள்.

"நன்றாக வசதியாக இருப்பது போல் தெரிகிறது!" என்று சிரித்தார் கமல்.

"வரும்போதே வசதியோடுதானே வந்தோம்!" என்றாள் அவள்.

"குமாரசாமி எங்கே?" என்று கேட்டார் கமல்.

"அவர் வெளியே போயிருக்கிறார்; இன்று வந்தாலும் வருவார், வராவிட்டாலும் இல்லை!" என்றாள் அவள்.

"அவரும் நானும் பலமுறை இங்கு வந்து தங்கி இருக்கிறோம்" என்றார் கமல்.

"அதனால் தானே நேரடியாக இங்கேயே வந்தீர்கள்!" என்றாள் அவள்.

"என் கதை தெரியுமல்லவா?" என்று கேட்டார் கமல்.

அவளுக்கு அவசரம்–இந்திரகுமார் வந்துவிடுவாரோ? விளக்கமாகப் பேசிக் கொண்டிருக்கும் நேரமா அது?

"முதலில் நீங்கள் குளித்து ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள், பிறகு பேசுவோம்!" என்றாள் லலிதா.

யசோதா, கமலுக்கு ஜாடை காட்டினாள்.

"ம்!.. என்னைப் பழிவாங்கியவர்களை நான் வாங்காமல் விடமாட்டேன்!" என்று சொல்லியபடியே சோபாவில்



கையை ஊன்றி எழுந்தார் கமல்.

இருவரும் லலிதா காட்டிய அறைக்குள் நுழைந்தார்கள்.

கமல் குளிப்பதற்காகப் பாத்ருமிற்குள் நுழைந்தபோது வெளியில் கார் வந்து நிற்கும் சத்தம் கேட்டது.

இந்திரகுமார் மாடிக்கு வந்து கதவை தட்டினார்.

"எவ்வளவு நேரம்?" என்றபடியே கதவைத் திறந்தாள் லலிதா.

"என்ன செய்வது? இனி எந்த நேரத்தில் கூப்பிடுவாய் என்று யாருக்குத் தெரியும்?" என்றார் இந்திரகுமார்.

"வழி பார்த்து வழிபார்த்து என் கண்களே சிவந்து போய்விட்டன!" என்றாள் லலிதா.

"நம்முடைய கண்கள் எப்போதுதான் சிவக்கவில்லை!" என்றார் இந்திரகுமார்.

இந்தப் பேச்சைத் தன் அறையில் இருந்தவாறே ஒட்டுக் கேட்டாள் யசோதா.

போலீஸ் அதிகாரியின் மனைவியல்லவா?

"உஷ். சத்தம் செய்யாமல் வாருங்கள்!" என்று தன் அறைக்குள் அழைத்துப் போனாள் லலிதா.

அதையும் சாவித்துவாரம் வழியாகப் பார்த்துக் கொண்டிருந்தாள் யசோதா.

"படம் எடுப்பதுபற்றி என் கணவர் உங்களிடம் ஏதாவது பேசினாரா? நீங்கள் என்ன சொன்னீர்கள்?" என்று கேட்டாள் லலிதா.

"உன் கணவரென்ன, படம் எடுக்க வேண்டும் என்று யார் இப்போது வந்தாலும் நான் உன்னைத்தான் சிபாரிசு செய்து கொண்டிருக்கிறேன்!" என்றார் இந்திரகுமார்.

ஆனந்தம் தாங்காத லலிதா, அவரை அப்படியே கட்டி ஒரு முத்தமிட்டு, "எத்தனை அழகழகான பெண்களை எல்லாம் நீங்கள் சந்தித்திருப்பீர்கள்? என்னிடம் என்ன உங்களுக்கு அவ்வளவு ஆசை?" என்று கேட்டாள்.

"வடநாட்டுப் பெண்கள் பலபேருக்குக் குடும்பப் பாங்கே இல்லை. முடியை 'பாப்' வெட்டிக் கொள்கிறார்கள். 'சூட்டிங்' இல்லாதபோதே உதட்டுப் 'பெயிண்ட்' அடிக்கிறார்கள். கடையில் வாங்கிய சரக்குகளிலேயே தங்கள் கவர்ச்சியைக் காட்டிக் கொண்டிருக்கிறார்கள். பழகும் போதுகூட 'மிஷின்' மாதிரிப் பழகுகிறார்கள். நான் சினிமா நடிகன் என்றாலும், எனக்கு குடும்ப தாகம் உண்டு!" என்று சொன்ன இந்திரகுமார் கையில் கிளாஸை வைத்தபடியே ஏதோ சிந்தனையில் ஆழ்ந்தார்.

(அந்தரங்கம் வரும்)

# இலட்சியவாதி?

களுவாஞ்சிக்குடி யோகன் - சிட்னி



**வி**தவைகள் என்றால் மலிவானவர்கள் என்ற எண்ணம் இன்னமும் எம்மவர்கள் மனங்களில் தங்கியிருப்பது வருந்தத்தக்க ஒரு விடயம். இதை எண்ணி எண்ணித்தான் இந்திரா கலங்கிப் போனாள்.

'இறப்பு என்பது பூலோகத்தில் யார் கையிலுமில்லை. அது எப்பொழுது எந்தக் கணத்தில் சம்பவிக்குமென்று யாராலும் அறுதியிட்டுக் கூறவும் முடியாது. அப்படியிருக்க இளம் பெண் ஒருத்தியின் கணவன் இறந்துவிட்டால் அவள் எப்படி துரதிஷ்ட சாலியாகி விடமுடியும்? அவளை ஏன் இந்தச் சமூகம் இழிவாகப் பார்க்கிறது? அவள் எதற்கும் உடன் படுவாளென்று ஏன் இந்த ஆண்கள் நினைக்கிறார்கள்?' இந்தக் கேள்விகள் மனதில் எழுந்து கண்ணீரை அவள் கண்கள் உதிர்த்துக்கொண்டிருந்தன.

சாதாரண குடும்பத்தில் சந்தோஷமாக வளர்ந்தவள்தான் இந்திரா. மிகச் சிறிய வயதில் தாயாரை இழந்தாலும் தந்தையார் குறையேதுமின்றி வளர்த்து காலாகாலத்தில் கல்யாணமும் செய்து வைத்தார். பாழாய்ப் போன நாட்டுப் பிரச்சனை இந்திரா வாழ்விலும் சதி செய்தது. பல்லாயிரக்கணக்கான விதவைப் பெண்களின் பட்டியலில் அவளும் ஒருநாள் சேர்க்கப்பட்டாள்.

வழக்கொன்று சம்பந்தமாக இளஞ் சட்டத்தரணியான அவளது கணவன் அம்பாறைக்குப் போனான். போனவன்; மாலைபிணமாகவே கொண்டு வந்து கிடத்தப் பட்டான். போர்க்காலச் சூழலுக்குள் அகப் பட்டுப்போனானாம்; துப்பாக்கிச் சூடு அவனின் மார்பைப் பிளந்திருந்தது. துடித்துப் போனாள் இந்திரா. மூன்று வயதுக் குழந்தையுடன் துவண்டு போனாள். மகளின் இந்தப் பரிதாப நிலையைப் பார்க்க முடியாததாலோ என்னவோ, தந்தையும் ஒருநாள் மாரடைப்புக் காரணத்தால் மரணித்துப் போனார்.

அவுஸ்திரேலியாவில் வசித்த அவளது ஒரேயொரு இரத்த உறவான அண்ணன் இதையறிந்து கலங்கினான். அவளை அவுஸ்திரேலியா அழைப்பதற்கு உடனடியாக ஈடுபட்டான். மூன்று வயது மகனுடன் அவள் மெல்போர்ன் நகரில் வந்திறங்கினாள். தாயும் பிள்ளையுமானாலும் வாயும் வயிறும் வேறு. அண்ணாவும் அண்ணியும் எவ்வளவு வற்புறுத்தியும் அதைத் தவிர்த்து தனியாக ஒரு வீடு பெற்று மகனுடன் வாழ்க்கையைத் தொடங்கினாள் இந்திரா.

அவளுக்கு ஒரே மகன் கோபிதான் உலகம். அவனைப் பாடசாலைக்கு அழைத்துப்போவது, அழைத்து வருவது இவைகள்தான் பொழுதுபோக்கு. மகனைப் பாடசாலைக்குக் கொண்டுபோய் கூட்டிவரும் வேளைகளில்தான் அவள் அவனைப் பார்த்தாள். இந்திராவைப் போலத்தான் அவனும் ஒரு குழந்தையை பாடசாலைக்குக் கொண்டு வருவது, அழைத்துப் போவது என்று வந்து போய்க்கொண்டிருந்தான். மிகவும் கண்ணியமாக இருந்தான். குனிந்த தலை நிமிராமல் வந்து போவான். சில நேரங்களில் இந்திராவை அருகில் பார்க்கும் தருணங்களில் சிரித்துக் கொள்வான்.

ஒருநாள் பாடசாலை முடியும் நேரம்; போக்குவரத்தில் ஏற்பட்ட தாமதத்தினால் அவளுக்கு நேரத்திற்கு மகனை அழைக்க முடியாமல் போயிற்று. எங்கே மகன் அழுது தன்னைத் தேடிக்கொண்டிருப்பானோ? என்று பயந்து கொண்டுதான் இந்திரா ஓடினாள். ஆனால் அவன் அங்கு மகனை அழைத்துப் பாதுகாப்பாக வைத்துக் கொண்டிருந்தான். இந்திரா அவனுக்கு நன்றி சொன்னாள். "நன்றியெல்லாம் எதற்கு? ஒரு தமிழனுக்குத் தமிழன் இந்த உதவியென்றாலும் செய்யாவிட்டால் பிறகு வாழ்வதுதான் எதற்கு?" என்று கேட்டான்.

"நீங்கள்தான் நேரத்திற்கு வந்துவிடுவீர்களே! ஏன் இன்று தாமதம்?" என்று வினவினான். "பஸ் தாமதமாகிவிட்டது!" என்றாள் இந்திரா. அப்பொழுதுதான் "நீங்கள் எங்கிருக்கிறீர்கள்?" என்று கேட்டான். இந்திரா வசிக்கும் இடத்தைச் சொன்னாள். உறவுகள் பற்றிக் கதை வந்தபோது, தனது தமயனின் பெயரைத் தெரிவித்தாள் இந்திரா. "ஓ! அவர் அண்ணாவின் சினேகிதராச்சே! அவரிடம் கேட்டுப்பாருங்கள் அண்ணாவைப் பற்றிச் சொல்லுவார், அந்த அண்ணாவின் குழந்தைதான் இது!" என்று விவரித்தான் அவன்.

இப்படி ஆரம்பிக்கப்பட்ட பேச்சுத் தொடர்பு இந்திரா ஒருவிதவையென்று அவன் அறியும் அளவு வளர்ந்தது. அவள் விதவை என்று அறிந்தபோது மிகவும் வேதனைப்பட்டான். "நம் சமூகத்தில் இப்படி எத்தனை ஆயிரம் இளம்பெண்கள் விதவைகளாகிக் கொண்டு வருகிறார்கள்!" என்று சமூக அக்கறையோடு வருந்தினான். தினமும் கிடைக்கும் அந்த சொற்பநேரத்திற்குள் அவன் அதிகம் பேச்சுக் கொடுத்து இந்திராவுடன் கதைத்தான். அவள் வார்த்தை வார்த்தையாகத்தான் பதிலே சொன்னாள். ஆனாலும் ஒரு சந்தர்ப்பத்தில் கதைக்க வேண்டுமென்பதற்காக "எங்கு வேலை செய்கிறீர்கள்?" என்று கேட்டாள்.

"இப்பொழுதுதான் படிப்பை முடித்துவிட்டு வேலை தேடிக் கொண்டிருக்கிறேன், இடையில் அம்மா கல்யாணஞ் செய்யச் சொல்லி நச்சரிக்கிறார். ஆனால் பெண்ணைப் பொறுத்தவரை எனக்கும் ஓர் ஆசை, இலட்சியம், எதிர்பார்ப்பு இவைகளெல்லாம் இருக்கின்றன. அந்த இலட்சியங்களோடதான் என் திருமண வாழ்க்கை அமையும்!" என்றான் அவன்.

நாட்கள் நகர்ந்தன. இந்திரா போகுமிடங்களிலெல்லாம் அவனும் காணப்படத் தொடங்கினான். இப்படி அடிக்கடி கண்டு கொண்டிருப்பதாலோ என்னவோ அவளின் மகன் கோபி அவனை 'அங்கிள்? என்று அழைக்கும் அளவிற்கு அவனுடன் நெருக்கம் உண்டாயிற்று. ஒரு முறை இந்திராவின் மகன் கோபியை பாடசாலையால் சுற்றுலா அழைத்துக் கொண்டு போனார்கள். அப்படிப் போனபோது கோபி புகையிரத நிலையப் படிக்கட்டுக்களில் கால் தவறி உருண்டு நிலத்திலே விழுந்துவிட்டான். முழங்காலில் பலமாக அடிபட்டு இரண்டு நாட்கள் ஆஸ்பத்திரியில் தங்க வேண்டிய நிர்ப்பந்தம் எழுந்தது. மகனுடன் இந்திரா ஆஸ்பத்திரியில் தங்கியிருந்தாள்.

அந்த இரு நாட்களும் அவன் அங்கே வந்தான். "கோபியைக் காணாமல் கஷ்டமாயிருக்கிறது!" என்று மிகவும் அக்கறைப்பட்டு கவலையடைந்தான். இரண்டாம் நாள் ஆஸ்பத்திரிக்கு வந்தவன் "உங்களுடன் கொஞ்சம் கதைக்கலாமா?" என்று மிகவும் பவ்யமாக இந்திராவைக் கேட்டான். அவள் எதுவுமே சொல்லவில்லை. ஆச்சரியமாக அவனைப் பார்த்தாள்.

"உங்களை நான் நேசிக்கிறன். உங்களையே கல்யாணம் செய்யவும் ஆசைப்படுறன். இது ஒன்றும் அவசரமாக எடுத்த முடிவு இல்லை. நிதானமாக, யோசித்து எடுத்த முடிவு. வருங்கால மனைவி சம்பந்தமாக எனக்கும் ஓர் ஆசை, இலட்சியம் இருக்கிறது என்று உங்களுக்குச் சொல்லியிருக்கிறன். அந்த இலட்சியம் கணவனை இழந்த அல்லது கணவனைப் பறிகொடுத்த ஒரு பெண்ணுக்கு வாழ்க்கை கொடுக்க வேண்டுமென்பதுதான். உங்களைப் பார்த்த மாத்திரத்திலிருந்து நீங்கள்தான் என் மனைவி என்று நான் முடிவு செய்துவிட்டேன். தயவு செய்து தீர்க்கமாக யோசித்து சாதகமான ஒரு பதிலை எனக்குத் தெரிவியுங்கள்!" என்று கூறிவிட்டு விடை இப்பொழுது தேவையில்லை என்பது போல் அவன் நகர்ந்து போனான்.

வாழ்க்கையைத் தொடங்க வேண்டிய இருபத்தி நான்கு வயதில் விதவையாகிப் போன இந்திரா குழம்பினாள். ஒருகணம் "டாடி எங்கே மம்மி?" என்று தனது மகன் கேட்டுக் கொண்டிருப்பது சிந்தனைக்குள் வந்து வந்து போனது. அவனது நல்ல குணங்கள் பற்றி மனதில் சஞ்சலங்கள் தோன்றிய நிலையில் எதையும் மனம் விட்டுக் கதைக்கும் தனது அண்ணியிடம் விஷயத்தைத் தெரிவித்தாள் இந்திரா.

"மறுமணஞ்செய், மறுமணஞ்செய்!" என்று வற்புறுத்தியபோதெல்லாம் மறுத்தவள், இப்பொழுது தானாகவே தன் திருமணத்தைப் பற்றிக் கதைக்கிறாளென்றால்? இச்சந்தர்ப்பத்தை விட்டு விடக்கூடாது' என்று அவளின் அண்ணி எண்ணியிருக்க வேண்டும்.

"தாரமிழந்த ஓர் இளம் பெண் தனிமையில் வாழ்வது சாத்தியமில்லை. இந்த நாட்டிலென்ன எந்த நாட்டிலுமே அது சாத்தியப்படாது. தயவுசெய்து இந்திரா உனக்காக இல்லாவிட்டாலும் உன் பாதுகாப்பிற்காகவென்றாலும் நீ சம்மதிக்க வேண்டும். அந்த இளைஞனை எங்களை வந்து பார்க்கச் சொல்!" என்று மிகவும் அதிக நேரம் அவளுடன் கதைத்து அவளைத் தெளிவாக்கினாள் அண்ணி.

மறுநாள் மாலை இந்திராவுடன் அவன் தொடர்பு கொண்டான். "கோபியைக் காண வேண்டும் போலிருக்கிறது. வீட்டுக்கு வரலாமா?" என்று கேட்டான். "வாருங்களேன்!" என்று கூறிவிட்டு, இரவுச் சமயலில் ஈடுபட்டிருந்தாள் இந்திரா. கோபிக்குச் சாப்பாடு கொடுக்கும் நேரம் அவன் வந்தான். அப்பொழுது அவனையும் சாப்பிடக் கேட்டாள் இந்திரா. அவன் மறுக்கவில்லை. மூவருமாகச் சாப்பிட்டார்கள். சாப்பிட்டவுடன் நித்திரைக்குப்போகும் கோபி அறைக்குப் போய் விட்டான்.

ஏ.பி.சி செய்தி போய்க் கொண்டிருந்தது. அவன் செய்தி பார்த்துக் கொண்டிருந்தான். அப்பொழுதுதான் இந்திரா முன்னறையில் வந்து அமர்ந்தாள். "நான் கேட்ட விஷயம் என்னவாயிற்று?" என்று வினவியபடி தான் இருந்த இடத்தைவிட்டு எழுந்து இந்திராவிற்குப் பக்கத்தில் வந்து அமர்ந்தான்.

"அண்ணா குடும்பத்துடன் போய்க் கதையுங்கள்!" என்று அவள் சொன்னாள். "அப்போ சம்மதந்தான்!" என்று குதூகலித்தவன், அவளின் கைகளை மெதுவாகப் பற்றினான். இந்திரா அதை நாசூக்காகத் தவிர்த்தாள். "நாம் தான் திருமணஞ் செய்யப் போகிறோமே!" என்று மறுபடியும் கரங்களைச் சற்று மேலே பற்றி வருடினான்.

"திருமணஞ் செய்யத்தான் போகிறோம்; இன்னும் செய்யவில்லை!" என்று அவள் சட்டென எழுந்திருக்க முயன்றாள். ஆனால் அது அவளால் முடியவில்லை. அவனது முரட்டுப் பிடியும் வெறித்தனமான போக்கும் இந்திராவை நிலை குலையச் செய்து விட்டன. அவள் சற்றும் எதிர்பாராத நிகழ்வினால் அவனுடன் போராட வேண்டி ஏற்பட்டது.

அவன் மிகவும் மூர்க்கத்தனமாக அவளை இழுத்துப் பக்கத்திலே கிடந்த கட்டிலுக்குக் கொண்டு போனான். இந்திராவின் மேலாடை கிழிந்த நிலைக்கு வந்துவிட்டது. அவள் போராடினாள் "விடுடா! என்னை" என்று கத்தினாள். அப்பொழுது என்ன நடந்ததோ தெரியவில்லை. உள் அறையில் படுத்திருந்த கோபி "மம்மி!" என்று பெரிதாக அலறினான். அந்த நேரம் எதிர்பாராதவிதமாய் அவனது பிடி சற்றுத் தளர்ந்தது. அச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, திடீரென அறைக்குள் புகுந்து கதவை அடைத்துக் கொண்டாள் இந்திரா.

இந்நிகழ்வினால் அவள் கதிகலங்கிப் போனாள், அந்தக் கலக்கத்திலும் மகனை நித்திரையாக்கிவிட்டு மெதுவாகக் கதவைத் திறந்து பார்த்தாள். அவன் போய்விட்டிருப்பது தெரிந்தது. அவளுக்கு உடல் நடுங்கி சிந்தனை அதிகரித்தது. 'ஒருவேளை ஆசையின் உந்துதலினால் அவசரப்பட்டுப் போனாரோ?' என்றுகூட எண்ணினாள். அப்படியே உறங்கிப்போனாள்.

இந்நிகழ்விற்குப் பிறகு இந்திரா அவனைப் பார்க்கவில்லை. அவன் பாடசாலைக்கு அழைத்து வரும் குழந்தையை ஒரு பெரியவர் அழைத்து வந்து போய்க் கொண்டிருந்தார். சில காலங்கள் கடந்தன. அன்று காலை அவளது அண்ணி தொலைபேசி எடுத்தாள். "அவன் ஊருக்குப் போய் கல்யாணஞ் செய்து கொண்டு பெண்ணையும் அழைத்து வந்திருக்கிறானாம். கொழுத்த சீதனத்துடன், மிகவும் பணக்காரப் பெண்ணை செய்திருக்கிறானாம். நீ ஒன்றுக்கும் யோசிக்க வேண்டாம். அவன் ஒரு பெண் பொறுக்கி, பெரிய கண்டத்திலிருந்து நீ தப்பியிருக்கிறாய்!" என்று சொல்லிக் கொண்டிருந்தாள். 'தன்னை இலட்சியவாதி என்ற வேஷம் போட்ட, பசுத்தோல் போர்த்திய ஒரு கொடிய மிருகத்திடமிருந்து தப்பிவிட்டேன்' என்று எண்ணியவளாய் மகனை பாடசாலைக்கு அழைத்துப் போக ஆயத்தமானாள் இந்திரா. ■

# இப்படியும் சில மனிதர்கள்

அல்வையூர் காந்தி அருணாசலம் - கனடா



"**அ**டடே, நீலாவா? எப்பிடி இருக்கிறாய்? உன்னைக் கண்டு இருவது இருவத்தைஞ்சு வருசத்துக்கு மேலையிருக்கும். அது சரி, என்ன கோலமிது? மெலிஞ்சு தும்பாப் போனாய்!" என்று படபடவென்று பொரிந்தபடி அருகில் வந்து நீலாவைக் கட்டிக் கொண்டாள் பால்ய சிநேகிதி விமலா.

"ஓ... விமலா, என்னடி அடையாளமே தெரியாமல் ஊதிப் போட்டாய்? படிக்கிற காலத்திலை ஒடிஞ்சு விழுகிற மாதிரி ஒல்லியாயிருப்பாய், இப்ப என்னடா வெண்டால்...." சொல்ல வந்ததைப் பாதியில் நிறுத்தி விட்டு விமலாவின் உப்பிய கன்னத்தை செல்லமாகத் தட்டினாள் நீலா.

பரஸ்பரம் இருவரும் தத்தம் கணவன், குழந்தைகள் பற்றி உரையாடிய பின் விமலா விடயத்திற்கு வந்தாள்.

"ஏதோ இந்த அம்மாளாச்சிதான் இந்தக் கோயில்லை உன்னைக் காண வைச்சது. நான் ஆரிட்டைக் கேப்பம் எண்டிருந்தனான். நம்பிக்கையான ஆளா வேணுமில்லை? கும்பிடப் போன தெய்வம் குறுக்கை வந்த மாதிரிக் கிடக்கு." என்று பீடிகையுடன் தொடங்கிய விமலா நீலாவை நெருங்கி அமர்ந்து கொண்டாள்.

"என்ன பீடிகை பலமாயிருக்கு. விசயத்தைச் சொல்லன்!" என்று நீலா ஆவல் தாங்க முடியாமல் பரபரத்தாள்.

"உங்கடை இந்த ஊர் தான். அல்வாய் கிழக்குப் பக்கமெண்டு நினைக்கிறன். வாசிகசாலைக்குப் பக்கத்து வீடு. சிவானந்தம் மாஸ்ரர் எண்டு நெல்லியடியில் படிப்பிக்கிறவர்..." என்று விமலா தொடருமுன் நீலா முந்திரிக் கொட்டையாக இடைமறித்தாள்.

"நல்லாத் தெரியும், அவருக்குகென்ன?"

"அவருக்கு ஒண்டுமில்லையடி, அவற்றை மகள் அனுவைத்தான் என்ரை பொடியன் நரேசுக்கு புரோக்கர் மூலம் பேசியிருக்கிறம். நரேஸ் கனடாவிலை இருந்து வாற மாசம் வாறான். 'சுமாரான வடிவும் படிப்பும் போதுமம்மா. நல்ல குணமான, குடும்பத்துக்கேற்ற அடக்கமான பெண்ணாப் பாருங்கோ. அதுக்கு நீங்கள்தான் பொறுப்பு' எண்டு கடிதம் போட்டிருக்கிறான். ஏழெட்டு வருசமாச்சு அவனும் கனடா போய். சல்லிக் காசு சீதனம் வேண்டக் கூடாது எண்டிட்டான். எனக்குமென்ன, அவன் ஒரு பிள்ளை தானே? நல்லாயிருக்கிறான். அவன் விரும்பினபடி செய்வம்," என்று மூச்சு விடாமல் தனது மகன் நரேசுக்குப் பெண்பார்க்கும் படலத்தை விவரித்தாள் விமலா.

"ஐயோ கடவுளே, உன்ரையும் உன்ரை பிள்ளையின்ரையும் நல்ல குணத்திற்கு நான் எப்பிடி உண்மையைச் சொல்லாமல் விடுவது?" என்று பரிதாபமாக முகத்தைச் சுருக்கினாள் நீலா.

"ஏன் நீலா, ஏதும் பிரச்சினையே? எதெண்டாலும் உள்ளதைச் சொல்லடி. நான் கேட்டவை எல்லாரும் அந்தப் பிள்ளையை நல்லதெண்டு தானே சொல்லிச்சினம்?" என்று ஆதங்கத்துடன் பெருமூச்சுவிட்டாள் விமலா.

"எல்லாரும் ஒரு மாதிரியெண்டு நினைக்காதை. எனக்கு சிவானந்தம் மாஸ்ரர் தூரத்து முறையில் அண்ணன் உறவு. எண்டாலும் நான் பொய் சொல்ல மாட்டன். அவள் அனு என்ரை மகள் செல்வியோடைதான் படிக்கிறவள். அவளுக்குப் படிக்கிற இடத்திலை போய் பிரண்டோ என்ன நாசமோ அதுவும் இருக்கு. எந்தப் பொடியனைக் கண்டாலும் கதைக்கிறதும் பல்லை இளிக்கிறதும், செல்வி கதை கதையாய் வந்து சொல்லுவாள். எனக்கும் அண்ணன்ரை மகள் எண்டு கொஞ்ச நஞ்ச மனவருத்தமில்லை. அதுக்காக உண்மையை மறைக்க முடியுமே? அதுவும் நீ என்ரை உயிர்த்தோழி. நான் சொன்னனெண்டு மட்டும் இந்த அம்மாளாணை வெளியிலை விட்டிடாதை. எனக்கேன் வீண் வம்பு? அவள் பொடியளோடை கதைச்சுப் பேசினதோடை மட்டும் நிண்டாளோ, என்னவோ, ஐயோ எனக்கென்ன, ஒரு குமர் கரை சேரட்டும். ஆனால் உன்னோடை இவ்வளவு சினேகிதமா இருந்திட்டு எப்பிடி மறைக்கிறது? நாங்களும் எங்கடை செல்விக்கு கனடா மாப்பிளைதான் பாக்கிறம். என்ரை பிள்ளை எண்டு சொல்லேல்லை. தங்கக் கம்பி. குனிஞ்ச தலை நிமிரமாட்டாள். ஒருதர் விரல் மடிக்க மாட்டினம்...." என்று குரலை ஏற்றி இறக்கி சுவாரசியத்துடன் நீலா கதையளக்க விமலா பெரிய கண்டத்திலிருந்து தப்பிய ஆயாசப் பெருமூச்சுடன் நெஞ்சைப் பிடித்துக் கொண்டாள்.

"இப்ப என்ன நீலா பேசி வைச்சிருந்த கலியாணம் எல்லாம் குழம்பிறேல்லையே? நான் இப்பவே புறோக்கரட்டைச் சொல்லி இந்த சம்பந்தம் சரிவராதெண்டு சொல்லச் சொல்லுறன். உன்ரை மகளின்ரை குறிப்பைத் தாவன் பார்ப்பம்." என்று விமலா கட்சி மாறினாள்.

"ஓ... அதுக்கென்ன, நீ கேட்டால் நான் வேண்டாமெண்டா சொல்லப் போறன்?" என்று நீலா வெளியே பிகுவுடனும் உள்ளூர வெற்றிப் பெருமிதத்துடனும் விடை பெற்றுக் கொண்டாள். ■

# ஜன்னல்



உவைஸ்கனி

**ஊ**ர்க் கோடியில் இருக்கும் எனது வீட்டை நினைக்கையில் மனசுக்குள் கவலையாகத்தான் வருகிறது. ஊரிலிருந்து வெளியேறிவரும் போது தெருப்பக்கமாக இருக்கும் இரு ஜன்னல்களும் உடைந்து கிடந்தனவே! அதைக்கூட செய்யாமல் அசட்டையாய் இருந்தது மகா தப்பு எனத் தோன்றிற்று இப்போது.

கைதுகளும், விடுதலைகளும், அடையாளப்படுத்தும் விசாரணைகளும் அடிக்கடி நிகழ்வதால் வாடகை வீட்டையும் குறையின்றி வைத்திருப்பதே புத்திசாலித்தனம்.

நான் இரண்டு வருடம் கழித்து மீண்டும் ஊருக்கு வருகிறேன். வயல் வெளிகளெல்லாம் சோர்ந்து கிடந்தன. வாய்க்கால் வக்கடை எல்லாம் காய்ந்து வெடிப்புக்கள் தோன்றியதாய் காட்சி அழித்தன. அன்றைய காலங்களில் ஊரைக் காணுகின்றபோது ஏற்படும் உள்ளார்ந்த பிரமிப்பு இன்று எனக்குள் ஏற்படவில்லை.

வீட்டு வாசலுக்கு முன்னால் பஸ் வந்து நின்றது. இறங்கி கிழக்குப் பக்கமாய் தன் பாட்டில் நடக்கிறேன். பின்னால் வருபவர்களுக்கு இடம்விட்டு மிகவும் பவ்யமாக நடக்கிறேன். திடீர் என்று இடது பக்கமாய் திரும்பிப் பார்க்கிறேன். பள்ளிக்கூடம் செல்லும் வயதையொத்த சிறுவர்கள் சிலபேர் வட்டமாக இருந்து ஏதோ புகைத்துக் கொண்டிருந்தார்கள். என்னைக் கண்டும்கூட அவர்களில் ஒருவன் வேண்டுமென்றே மூக்கால் புகைவிட்டுக் காட்டினாற்போல் கொல்லெனச் சிரிக்கிறான்.

எனக்கு என்ன செய்வதென்றே தெரியாமல் இருக்கும்போது தூரத்தில் என் பள்ளி நண்பன் வந்து கொண்டிருந்தான். சில விவரங்களை மட்டும் அவனிடமிருந்து அறிந்து கொண்டு பக்கத்திலுள்ள தேநீர் கடைக்குள் நுழைகிறேன். தின்பண்டங்களின் மேல் ஈக்கூட்டங்கள் சுதந்திரமாகக் குந்திக் கொண்டிருந்தன. அதைக் கண்டதும் தேநீருக்கும் சொல்லாமல் குடிக்கவும் மனமில்லாமல் வீட்டுக்கே செல்கிறேன்.

என்னைக் கண்டதும் ஆச்சி முன் வாசல் கதவைத் திறக்காமல் கொல்லைப்புற வாசலால் வருவதற்கு பின் கதவை திறந்துவிட்டாள். மெதுவாகவும் நிதானமாகவும் சென்று எரியும் விளக்கருகில் இருந்து என் இரு கைகளையும் வெளிச்சத்தில் வைத்துப் பார்க்கிறேன். கறைபடிந்த ரேகைகள் ஒன்றையேனும் காண முடியவில்லை. ஆனாலும் ஏனிந்தச் சமூகம் நிராகரித்து நிற்கின்றன என்பதுதான் புரியாமல் இருந்தது.

ஆச்சியோடு எதுவும் பேசாமலேயே இரவும் விடிந்தது. கூலிவீட்டில் இருந்தே பழக்கப்பட்ட எமக்கு வாடகைக்கு பணம் சேர்ப்பதே வாடிக்கையாகிவிட்டது.

உடற் சோர்வு முறித்து உடைந்து விழுந்திருந்த ஜன்னலினூடாக வெளியே பார்க்கிறேன். வளைந்த மரத்துக்குக் கீழிருந்து குடி வகைகள் காசிற்கு விற்கப்பட்டு கொண்டிருந்தன. சிலர் நின்ற நிலையிலேயே மடக்கெனக் குடிக்கின்றனர்.

சட்டென்று என் மூளையில் இப்பொழுது இந்த ஊர் மிகவும் கெட்டுப் போய் இருப்பதாய் தோன்றியது. சமூகத்தை திருத்த நினைத்ததே முன்னர் நான் செய்த பிழை-ஆம் அதனாலேயே சென்று வந்தேன் சிறை.

ஆச்சியை அழைத்தேன். ஆச்சியின் சேலையிலும், ஒரு பெட்டியிலும் வீட்டுச் சாமான்களை அவசரமில்லாமல் பொதி செய்தேன். வீட்டுச் சொந்தக்காரன் வந்தான். விடயத்தை சொன்னேன். அவனுக்கும் வியப்பாகத்தான் இருந்திருக்க வேண்டும். ஏனென்றால் இந்த வீட்டில் வேறு யாரும் வந்து குடியேற மாட்டார்கள். பலகை வீட்டுக்கு ஆயிரம் கொடுத்து யார் வரப் போகிறார்கள்?

நடக்கிறோம். உடைந்த இரு ஜன்னல்களுக்குமிடையால் பார்க்கிறேன். குடித்தவர்களுக்கு போதை ஏறியிருக்க வேண்டும். நடனமாடுவது தெரிந்தது. ■

# மயக்கம் தரும் உடலழகு

## இலக்கிய நயம்

கடலின் இரைச்சலும், சுற்றிவர மனிதர்களின் பேச்சொலியும் நிறைந்த ஒரு மாலைநேரப் பரபரப்பினிடையே, "என்னை உனக்குப் பிடிச்சிருக்கா?" என்று தன் மென்மையான செல்லக் குரலில் கேட்டாள் மாதவி.

"எங்கெங்கெல்லாமோ நான் பார்த்த அழகுகளில் மொத்தச் சேமிப்பு நீ. உன்னை யாருக்காவது பிடிக்காமலிருக்குமா?"

"யாருக்காவது பிடிக்குமா இல்லையா என்றா கேட்டேன்....?" உனக்கு பிடிச்சிருக்கா என்று தானே கேட்டேன்....?"

"உலகிலுள்ள உன்னதங்கள் அனைத்திலுமிருந்து கொஞ்சங் கொஞ்சம் எடுத்து ஒருருவாய்ப் படைக்கப் பட்டவளாமே திலோத்தமை.... அதுபோலத்தாண்டா என் மாதவிக் கண்மணியும். அழகுகளின் கூட்டமைப்பு. பார்க்கிறவர் நெஞ்சமெல்லாம் ஆனந்தம் பெருக்கெடுக்க வைக்கும் அழகின் விளம்பரமே.... உன்னைப் பிடிச்சிருக்கு.... பிடிச்சிருக்கு... பிடிச்சிருக்கு....!"



"ம்..... நிறுத்து நிறுத்து... வர்ணனைகளைக் கொட்டாதே . என் உடலைத்தான் உனக்குப் பிடிச்சிருக்கு. அப்பிடித்தானே?" இவள் வம்புக்கு வருகிறாள் என்பது புரிந்தது விசாகனுக்கு.

"பெண்ணை வெறும் அழகான உடலாக மட்டுமே பார்க்கிறேன் என்று சினம் கொள்ளாதே. நான் உன்னை, அதாவது உன் உள்ளத்தை நேசிக்கிறேன் என்பது உண்மையேயாயினும் உன் அழகு என்னை இந்தப் பாடுபடுத்துகிறது என்பது உண்மையே அல்லவா?"

"உனக்கு மயக்கம் தருகிற இந்த உடலுக்கப்பால் நான் ஒன்றுமில்லையா? எனது இதர குணம், சிந்தனை, திறமை பற்றியெல்லாம் எதுவும் பேச மாட்டாய். என் அழகு மட்டும் தான் உனக்கு பாராட்டுதலுக்குரிய பொருள்.... அப்படித்தானே?"

"இல்லை மாதவி, இல்லை.... எனக்கு நீ வெறும் உடல் மட்டும் அல்ல; ஆனாலும்...... நான் உன் உள்ளத்தைத்தான் நேசிக்கிறேன் என்று பொய் சொல்லத் தயாரில்லை. என் காதலின் அஸ்திவாரமே நீ! பெண் என்ற உண்மையில்தானே எழுப்பப்பட்டிருக்கிறது..... உன் உள்ளத்தையும் தான் நான் நேசிக்கின்றேன் என்று சொல்லலாம்...."

"நீ மட்டுமில்லை, காலகாலமாக இலக்கியங்கள் படைத்து வந்த ஆண்கள் எல்லோரும் பெண்ணின் உடலையே முன்னிறுத்தியிருக்கிறார்கள். எந்தத் தருணத்திலும் உடல்களைத் தவிர்த்து பெண்களைச் சொல்ல அவர்களுக்கு முடிவதில்லை...."

"உண்மைதான், வரலாற்றில் பெண்கள் இழிவுபடுத்தப் பட்டிருக்கிறார்கள், பதுக்கப்பட்டிருக்கிறார்கள்

தருவது

என்பதெல்லாம் உண்மைதான். உடலின் அழகைக் கொண்டாடுவது அவளை ஏமாற்றி அடக்கி வைப்பதற்காக நடைபெற்றிருக்கிறது என்பதிலெல்லாம் உண்மை இருக்கிறதுதான். அதற்காக, என்னை இந்தக் கணம் அவஸ்தைக்குள்ளாக்கும் உன் அழகு பற்றி நான் எதுவுமே பேசாதிருக்க வேண்டும் என்றால் சரியா? உள்ளத்தோடு உன் உடலையும் ஆராதிக்கிறவனாக என்னை இருக்க அனுமதி. உன் அழகால் நான் பாதிக்கப்பட்டு அரற்றுவதில் அடக்குமுறையைத் தேடாதே! உடல் நமக்குத் தரும் எழுச்சிகளை மறைத்துவிட்டு வேஷம் போட முடியாது. உடல் பற்றிப் பேசுவதே ஏதோ கொச்சையான விஷயம் என்பதாகக் கொதிக்காதே.....!"

"நான் அழகாயில்லாது போனால், என்னை வேறு எதற்காகவாவது பாராட்டத் தோன்றுமா உனக்கு? 'ஒவ்வொரு பெண்ணும் பிறக்கிறபோது சொர்க்கத்தில் ஒரு பூ மலர்கிறது.... என்று வியப்பீர்களே தவிர, சக மனுசியாக மரியாதை கொடுக்கத் தெரிந்திருக்கிறதா இந்த ஆண்களுக்கு?"

"சக மனுசியாக, தோழியாக மதித்து நடக்கத் தெரியவில்லை என்பதற்காகக் கோபப்படு, நியாயம்தான். ஆனால் ஒரு மலர்ந்த பூ தருகிற கிளர்ச்சியை பெண்ணும் ஆணுக்குத் தருகிறாள் என்ற உண்மைக்கு, நீயும் மதிப்பு தா. ஆண்டாளுக்கிருந்த உடல் பிரக்ஞை போல அன்பின் உன்னதம் உடல் அடிப்படையிலும் தான் நிகழ்கிறது.... அது அசிங்கமில்லை....!"

"அதற்காக... வாய் வலிக்க வர்ணனைகளையே கொட்டி, 'பெண்ணே உன் பேரழகுக்கு இந்தப் பிரபஞ்சம் ஆடும்' என்று பூச் சொற்களால் ஏற்றிப் போற்றுவதெல்லாம் எங்களை அடிமை கொள்வதற்குத்தான் என்பதாய்தானே நடைமுறை இருக்கிறது....?"

"அது ஒரு பக்கம் உண்மைதான். ஆனால் நான் சொல்ல வருவது, அழகைக் கண்ட உள்ளம் களிபெருவகையில் துள்ளுவது ஆணாக இருந்தாலும் சரி பெண்ணாக இருந்தாலும் சரி இயல்பான ஒன்று என்பதையே. பெண்ணின் உடலாக இருந்தாலும் பேரண்ட வசீகரமாயினும் அழகுதான் தெய்வம். 'தாரணியில் வானுலகில் சார்ந்திருக்குமின்பமெல்லாம் ஒருருவமாய்ச் சமைந்தாய்...' என்று பாரதி சொல்கிற ஒருங்கிணைந்த அழகு தரும் இன்பத்திற்கு எதற்காகத் தடைகள்? 'எல்லையற்ற பேரழகே, எங்கும் நிறை பொற்சுடரே முல்லை நிகர் புன்னகையாய் மோதுமின்பமே....' என்று அழகில் மனதைப் பறிகொடுத்து அந்த இன்பத்தில் வாழ்வதில் என்ன கேவலமிருக்க முடியும்? அழகு - நம்மை வேற்று நினைவின்றித் தேற்றி விண்ணவர்களாகப் புரிகிறது.... அதனால் தான் அழகு தெய்வமாகிறது."

"பாரதிக்கும் அழகென்பது பதினாறு வயதுப் பருவ மங்கையாகத்தான் தெரிகிறது...."

"அவனும் ஆண் கவிஞன் தானே....! ஒரு வேளை பெண்கள் மனம் திறந்து எழுதுவார்களாயின் அவர்களது அழகுத் தெய்வம் ஓர் ஆணாக இருப்பதில் என்ன ஆச்சரியம் இருக்கிறது?

சுந்தரரைப் பார்த்த பரவையாரின் மனதில் தோன்றுவதாக ஆண் கவிஞரான சேக்கிழார் எழுதுகிறார்.

**முன்னே வந்து எதிர் தோன்றும்**
**முருகனோ பெருகு ஒளியால்**
**தன்னேரில் மாரனோ?**
**தார்மார்பின் விஞ்சையனோ?**
**மின்னோர் செஞ்சடை அண்ணல்**
**மெய்யருள் பெற்று உடையவனோ?**
**என்னே! என் மனம் திரித்த இவன்**
**யாரோ? என நினைந்தார்.**

இதையே, உண்மையில் ஒரு பெண் கவிஞர் எழுதினால் இன்னுஞ் சிறப்பாய் எழுதியிருக்கலாம் என்று நினைக்கிறேன். பெண்களை எழுதவிடவில்லை என்பதுதான் பெரிய குற்றம் என்று தோன்றுகிறது....."

## சிந்தியா பதில்கள்

**என்னதான் விஞ்ஞான வளர்ச்சி என்று பீற்றிக் கொண்டாலும் மனிதனால் புரிந்துகொள்ள முடியாத எத்தனையோ விஷயங்கள் இந்தப் பிரபஞ்சத்தில் உண்டு தானே?**

ம.ஜெயகௌரி, கோப்பாய்.

*எல்லாவற்றையும் அறிந்துகொண்டு விட்டால் இந்த வாழ்க்கை சுவாரஸ்யமற்றுப் போய்விடும்.*

**காதலில் தோல்வியுற்றால் ஆண் தாடி வளர்க்கிறான். பெண் என்ன செய்கிறாள்?**

எம்.எம்.இமாம் ஹஸன், ஹெம்மாதகம.

*ஆணுக்கு தோல்வியைக் கூட விளம்பரப்படுத்தி அனுதாபம் தேட முடிகிறது. பெண்ணுக்கோ வெளிப்படுத்திக் கொள்ளவும் முடியாத துயரம் அது.*

**நல்ல மனிதர் என்பவர் யார்?**

எம்.மக்பூல், அநுராதபுரம்.

*கெட்ட குணங்கள் இல்லாதவர்.*

**வானம் நமக்குத் தொட்டு விடும் தூரம் என்றால்..?**

கே.விக்னேஸ்வரன், வவுனியா.

*ஏரோப்பிளேன்கள் நம் இடுப்பைச் சுற்றிப் பறக்கும்.*

**இலங்கை கிரிக்கெட் அணி பாகிஸ்தானில் அமோக வெற்றியீட்டியதற்குக் காரணம் என்னவென்று சிந்தியா கருதுகிறீர்கள்?**

எஸ்.சிங்காரம், கண்டி.

*களத் தடுப்பில் காட்டும் சூரத்தனம், மற்றும் பயிற்சியாளர் வட்மோர் வலியுறுத்துவது போல அணியொற்றுமை, இப்போதைய நிலையைப் பாதுகாத்து வைத்திருப்பார்களாயின் அடுத்த உலகக் கோப்பையையும் கொண்டுவந்து விடலாம். அதற்கிடையில், இத்தகைய தொடர்ச்சியான வெற்றித் துடி துடிப்பில் அணி இருக்கிற போதே அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்காவோடும் மோதிப் பார்த்துவிடமுடிந்தால் நல்லது. வீரர்கள் வெற்றிக்களிப்பில் இருக்கிற சமயம் பார்த்துத்தான் பெரும் படையெடுப்புகளுக்குத் திட்டமிட வேண்டுமென்பது இராணுவ பாடம்.*

**சிந்தியா! கட்சிவிட்டுக் கட்சி தாவுவது, மனிதன் குரங்கிலிருந்துதான் வந்தான் என்பதற்கு ஆதாரம்தானே?**

எஸ்.புவனேந்திரன், அக்கரைப்பற்று.

*சும்மா இருங்கள். தாவுவதற்கு கட்சியே இல்லாத நாங்களெல்லாம் கழுதையிலிருந்தா வந்திருக்கிறோம்?*



**தனியார் வானொலி, தொலைக்காட்சிகள் வந்த பிறகு பத்திரிகைகளும் அவற்றை விமர்சிப்பதற்கெனப் பக்கங்களை ஒதுக்கியிருக்கின்றன. அவற்றின் நிகழ்ச்சிகளைப் பற்றியும் அறிவிப்பாளர்களைப் பற்றியும் காரசாரமாய் எழுதிவருகிறார்கள். நாட்டின் முன்னோடி ஒலிபரப்பு-ஒளிபரப்பு நிலையங்கள் அதிகம் கண்டுகொள்ளப் படுவதேயில்லை, கவனித்தீர்களா?**

வி.பிரியதர்ஷினி, கொழும்பு-13.

*அதிகம் பார்க்கப்படும் கேட்கப்படும் விஷயங்களைத்தானே விமர்சிக்கவும் முடியும்!*

**இன்றைய புதுக்கவிதைகள் பல புரிந்து கொள்ளக் கடினமான புதிர் கவிதைகளாக இருக்கின்றனவே?**

எம்.சிவப்பிரகாசம், கல்லடி.

*எல்லாமே அப்படியென்றில்லை, தொடர்ந்து பயின்றால் பலவற்றை புரிந்து கொண்டு இரசிக்க முடிகிறது. புதிராக இருப்பதிலும் ஒரு வசீகரம் தெரிகிறது. பாரதிராமன் என்பவரின் கவிதை ஒன்றைப் பாருங்கள்.*

*"எதைக் கேட்டாலும்*
*மறுப்புக் கூறுகிறீர்களே?"*
*என்றாள் மனைவி.*
*ஆமாம் என்றால்*
*அவள் கூறியது*
*உண்மையாகி விடுமே என்று*
*"இல்லையே" என்றேன் நான்.*

**'சட்டம் என் கையில்' படத்திலேயே கதாநாயகிக்கு முத்தம் கொடுத்து பரபரப்பை ஏற்படுத்தினார் கமல். 'சூரசம்ஹாரம்' படத்தில் நிரோஷாவுக்கு முத்தம் கொடுத்தார். 'விக்ரமி'ல் டிம்பிளுக்குக் கொடுத்தார். புன்னகை மன்னனில் ரேகாவுக்குக் கொடுத்தார். 'குணா'வில் ரோஷினிக்குக் கொடுத்தார். 'குருதிப்புனலி'ல் கௌதமிக்குக் கொடுத்தார். 'மகாநதி'யில் சுகன்யாவுக்குக் கொடுத்தார். இப்போது 'ஹேராமில்' ராணி முகர்ஜி, வசுந்தரா இருவருக்கும் கொடுத்திருக்கிறார். கமல் பற்றி என்ன நினைக்கிறீர்?**

கே.பெருமாள், ஹற்றன்.

*கொடுத்து வைத்தவர்.*

**அன்பின் சிந்தியா, நான் ஞாபக மறதியாய் வைத்து விட்ட ஒரு பொருளை என் மனைவி தான் தொலைத்து விட்டதாக எண்ணி கண்டபடி திட்டிவிட்டேன். இப்போது பொருளைக் கண்டெடுத்து விட்டேன். இதை மனைவியிடம் சொன்னால் தவறை நான் செய்துவிட்டு அவளைத் திட்டியதற்காக என்னிடம் கோபம் கொள்வாள். சொல்லாமல் விட்டால் அந்தப் பொருள் தொலைந்து போனதை நினைத்து வருத்தப்பட்டுக் கொண்டிருப்பாள். நான் என்ன செய்ய?**

எம்.முஸம்மில், கல்முனை.

*எப்போது நீங்கள் செய்த காரியம் தவறானது என்று உணருகிறீர்களோ, உடனேயே சரிசெய்துவிடுங்கள். தாமதியாது மன்னிப்புக் கேட்டுவிடுங்கள்.*

*இப்போது குட்டிக்கதை ஒன்றைச் சொல்லிவிடுகிறேன்: ஒரு பக்திமிக்க சகோதரர் ஞாயிற்றுக்கிழமை தேவாலயத்தில் நிகழ்த்தப்பட்ட உபதேசத்தை முன் வரிசையில் அமர்ந்து கேட்டுக் கொண்டிருந்தார்.*

*உபதேசம் நடந்துகொண்டிருக்கும் பொழுது அவர் தன்னுடைய ஒரு கால் சப்பாத்தைக் கழற்ற ஆரம்பித்தார்.*

*உபதேசம் கேட்டுக் கொண்டிருந்த மற்றவர்கள் அவரது செயலைக் கவனித்தனர். அவரைப் பார்த்துப் புன்னகை செய்தனர். சகோதரரோ சப்பாத்தைக் கழற்றிவிட்டு காலுறையையும் கழற்றலானார். இதனால் உபதேசத்தைக் கேட்டுக் கொண்டிருந்தவர்களின் கவனம் சிதறியது.*

*இதைக் கண்ட உபதேசியார், உபதேசத்தை நிறுத்தி விட்டு சகோதரரை நோக்கி, "இந்த சமயத்தில் இவ்விதம் காலுறையைக் கழற்ற வேண்டிய அவசியம் என்ன?" என்று வினவினார்.*

*சகோதரர் சொன்னார்:*


*"நான் என்னுடைய காலுறையை உள்புறத்தை வெளியேயும், வெளிப்புறத்தை உள்ளேயுமாக மாறி அணிந்திருப்பதைப் பார்த்தேன்... அதுதான்...."*

*உபதேசியார், " இந்த உபதேசம் முடியும் வரை பொறுத்திருந்து உன்னுடைய காலுறையை சரிசெய்து கொள்ளக் கூடாதா?" என்று கடிந்து கொண்டார்.*

*சகோதரர் பதிலளித்தார்:*

*"அப்படி இல்லை ஐயா, நான் எப்பொழுது தப்பு செய்து விட்டேன் என்று உணர்ந்தேனோ அக் கணமே அதைச் சரிசெய்ய ஆரம்பித்துவிடுவேன்."* ■

'ஹேராம்' படத்தில் கமல்-வசுந்தரா



# திருமறை தரும் பொது நெறி

## புதிய ஆகமம் 37

"ஆண்டவரை நான் கண்டேன்," என்று மகதலாமேரி சீடர்கள் தங்கியிருந்த இடத்துக்குச் சென்று பலத்த சப்தத்துடன் கூறினார். மேரியின் கூற்றை உடனடியாக சீடர்கள் நம்பவில்லை.

இயேசுபிரான் உயிர் நீத்து நல்லடக்கம் பண்ணப்பட்டு மூன்றாம் நாளன்று காலையில் மகதலாமேரி மட்டுமே கல்லறை சென்றதாக யோவானின் நற்செய்தியில் கூறப்பட்டிருக்கிறது. ஆனால் 'லூக்கா எழுதிய நற்செய்தி'யில் மகதலா மேரியுடன் வேறு சில பெண்களும் கல்லறைக்குச் சென்றதாகக் கூறப்பட்டுள்ளது. இயேசுபிரானின் சடலத்துக்குத் தடவுவதற்கான வாசனைப் பொடிகளையும் தங்களுடன் எடுத்துச் சென்றதாகக் கூறப்படுகிறது.

இதேபோன்று மத்தேயுவின் நற்செய்தியிலும் சிறு மாற்றம் காணப்படுகிறது. மகதலா மேரியும் மற்றுமொரு மாதும் கல்லறைக்குச்

# சீடர்கள் மத்தியில் தோன்றினார் இயேசுபிரான்

சென்றனர். கல்லறை மூடியே இருந்தது. அப்போது அங்கு பூமியில் ஓர் அதிர்ச்சி உண்டானது. அதேவேளை ஆண்டவரின் தூதர் ஒருவர் விண்ணகத்திலிருந்து கீழே இறங்கி வந்தார். அவருடைய ஆடை உறை பனி போன்று தூய வெள்ளையாகக் காணப்பட்டது. அவர் தானாகவே கல்லறையை மூடியிருந்த கல்லைப் புரட்டி விட்டு அக்கல்லின்மீது அமர்ந்து கொண்டார்.




தூதரைக் கண்டதும் கல்லறைக் காவலுக்கு நின்றிருந்த காவலர்கள் அச்சமுற்று இறந்தவர்கள் போல தரையில் சாய்ந்தனர். மகதலா மேரியையும் அவருடன் வந்திருந்த பெண்ணையும் பார்த்து அத்தேவ தூதர். "நீங்கள் அஞ்ச வேண்டாம். சிலுவையில் அறையப்பட்ட பின்னர் இங்கு அடக்கம் செய்யப்பட்ட இயேசுபிரானைத் தேடுகிறீர்களா?! அவர் இங்கே இல்லை. அவர் முன்பு கூறியபடியே உயிருடன் எழுப்பப்பட்டார். அவரை வைத்த இடத்தை உள்ளே சென்று பாருங்கள். 'அவர் உயிருடன் எழுப்பப்பட்டார்' என்ற செய்தியை விரைந்து சென்று அவருடைய சீடர்களிடம் கூறுங்கள். அவர் இப்போது கலிலேயாவுக்குச் செல்கிறார். சீடர்கள் அங்கு சென்றால் அவரைக் காணலாம்." இவ்வாறு ஆண்டவரின் தூதர் கூறியது, ஒரு புறம் அச்சத்தை அப்பெண்களுக்கு ஏற்படுத்தினாலும் மறுபுறம் இருவரும், 'இயேசுபிரான் உயிருடன் எழுப்பப்பட்டு விட்டார் என்ற செய்தியால் மிக்க மகிழ்ச்சியடைந்தார்கள்.' சீடர்களிடம் தகவலைக்கூற ஒடிச்சென்றார்கள்.

அப்பெண்கள் இருவரும் செல்லும் வழியில், அவர்கள் முன் இயேசுபிரான் தோன்றி வாழ்த்தினார். அவர்கள் அவரின் காலடிகளைப் பற்றி வணங்கினார்கள். இயேசுபிரான், "அஞ்சாதீர்கள்! என் சகோதரர்களிடம் சென்று அவர்களைக் கலிலேயாவுக்குப் போகுமாறு சொல்லுங்கள். அங்கு அவர்கள் என்னைக் காண்பார்கள்!" என்று கூறி மறைந்தார்.

### காவலர்களும் கண்டனர்

கல்லறைக்காவலுக்கு இருந்தவர்கள் நில நடுக்கம் ஏற்பட்டதைத் தொடர்ந்து வான தூதர் விண்ணிலிருந்து வந்து கல்லறையை மூடியிருந்த கல்லை அகற்றியதைக் கண்டு மூர்ச்சித்து வீழ்ந்தார்கள். அவர்கள் மயக்கம் தெளிந்தபோது, மகதலா மேரிக்கும் அவருடன் வந்திருந்த பெண்ணுக்கும் இயேசுபிரான் காட்சி கொடுத்து உரையாடிக் கொண்டிந்தார். அவர்கள் சென்றதும் அச்சத்தால் பீடிக்கப்பட்ட காவலர்கள், திறந்து கிடந்த கல்லறையை எட்டிப் பார்த்தனர். அங்கு இயேசு பிரானின் சடலம் காணப்படவில்லை.

அவருடைய சடலத்தைச் சுற்றியிருந்த துணிகள் மட்டும் பீடத்தின்மீது சுருட்டி வைக்கப்பட்டிருந்தன.

அங்கு மேலும் தொடர்ந்து நிற்பதில் எதுவித பலனும் இல்லை என்பதனை உணர்ந்த காவலர்கள், தலைமைக் குருக்களின் மாளிகையை நோக்கி ஓடினார்கள். தலைமைக் குருவைக் கண்டு கல்லறையில் தாம் கண்டவற்றை அவரிடம் கூறினார்கள். அவர் தனக்கு நெருக்கமான மூப்பர்களை அழைத்து ஆலோசனை நடத்தினார்.

இயேசுபிரான் ஏற்கனவே கூறிய கூற்றுப் பலித்துவிட்டதை உணர்ந்தனர். இயேசுபிரான் உண்மையில் ஆண்டவரின் அநுக்கிரகம் பெற்றவர்தான் என்று அவர்களுடைய மனச்சாட்சி சுட்டிக்காட்டியது. இருப்பினும் தாங்கள் முன்னர் மக்களிடமும் ஆட்சி பீடத்திலுள்ளவர்களிடமும் இயேசுபிரானைப் பற்றிக் கூறிய கருத்துக்களை இப்பொழுது மறுதலித்துக்கூற முடியாத நிலையில் இருந்தனர். கல்லறைக் காவலர்களை அழைத்து அவர்களுக்கு வேண்டியளவு பணம் கொடுத்து, உண்மையை மறைத்துக் கூறும்படி சொன்னார்கள்.

### பொய்வதந்திக்கு ஏற்பாடு

"கல்லறை வாயிலில் நாங்கள் சற்றுக் கண் அயர்ந்திருந்தபோது, இயேசுவின் சீடர்கள் அங்கு வந்து வாயிலை மூடியிருந்த கல்லை அகற்றி விட்டு இயேசுவின் சடலத்தைத் தம்முடன் எடுத்துச் சென்றுவிட்டனர்." இவ்வாறான பொய்வதந்தியைப்

## இராஜகுமாரன்

பரப்பும்படி அவர்களிடம் தலைமைக் குருவும் மூப்பர்களும் கூறினார்கள். அவர்கள் அவ்வாறே வதந்திகளைப் பரப்பினார்கள்.

மகதலா மேரியும் அவருடைய தோழியும் இயேசு பெருமானின் சீடர்கள் இருந்த விடுதிக்குச் சென்று, சீடர்களிடம் தாங்கள் இயேசு பிரானைக் கண்ட சம்பவத்தைக் கூறியதுடன் அவர் சீடர்களுக்குக் கூறும்படி சொன்ன தகவலையும் கூறினார்கள்.

தூதர்களில் சிலர் இக்கூற்றை நம்பவில்லை. இவர்களுள் பேதுரு எழுந்து கல்லறையை நாடி ஓடினார். கல்லறையினுள்ளே பார்த்தார். இயேசுபிரானின் திருச்சடலத்தை சுற்றியிருந்த துணிகள் மட்டும் கிடப்பதைக் கண்டார். இயேசு பிரானை உயிருடன் கண்டதாகக்கூறிய பெண்களின் வார்த்தையில் உண்மை இருப்பதை உணர்ந்தார்.

திருத்தூதர்களில் இருவர் எருசலேமிலிருந்து எம்மாவு என்ற ஊருக்குச் செல்லப் புறப்பட்டனர். இயேசுபெருமான் உயிர்த்தெழுந்ததாகக் கூறப்பட்ட கதையைப் பற்றி இருவரும் தமக்குள் விவாதித்துக் கொண்டே சென்றனர். அப்போது அவர்களுடன் மற்றுமொருவர் சேர்ந்து கொண்டார். அவர் யார் என்பதை அவர்கள் அப்போது கண்டு கொள்ளவில்லை.

புதிதாகச் சேர்ந்து கொண்டவர் ஏனைய இருவரையும் பார்த்து, "நீங்கள் ஏதோ ஒரு சம்பவத்தைப் பற்றிப் பேசிக்கொண்டே போகிறீர்களே! அதனையிட்டு என்னிடமும் கூறமுடியுமா?" என்று கேட்டார். சீடர்களில் ஒருவர், புதியவரைப் பார்த்து, "நீரும் எருசலேமிலிருந்துதானே வருகிறீர்? அப்படியென்றால் உமக்கும் அங்கு நடந்த சம்பவங்கள் தெரிந்திருக்க வேண்டுமே!" என்றார். தனக்கு எதுவுமே தெரியாது என அவர் கூறினார். ஆகவே அவருக்கு விளக்கம் அளித்தனர்.

"நாசரேத்து இயேசு என்பவரைப் பற்றித் தான் நாங்கள் பேசிக் கொண்டிருந்தோம். அவர் கடவுளுக்கும் மக்கள் எல்லாருக்கும் முன்பாகச் சொல்லிலும் செயலிலும் வல்ல இறைவாக்கினராகத் திகழ்ந்தார். அவர் இஸ்ரயேலை மீட்கப் போகிறார் என்று எதிர்பார்த்திருந்தோம். ஆனால் தலைமைக் குருக்களும் ஆட்சியாளர்களும் அவருக்கு மரண தண்டனை விதித்து சிலுவையில் அறைந்தார்கள். இவையெல்லாம் நடந்து முடிந்து இன்றோடு மூன்று நாட்களாகி விட்டன.

### அடையாளம் காட்டாத ஒருவர்

இன்று எங்களைச் சேர்ந்த சில பெண்கள் எங்களை மலைப்புக்குள்ளாக்கி விட்டனர். அவர்கள் இன்று அதிகாலை கல்லறைக்குச் சென்று பார்த்த போது, அங்கு இயேசுவின் உடலைக் காணவில்லை. அங்கு வான தூதரை அவர்கள் கண்டார்கள். இயேசு உயிருடன்தான் இருக்கிறார் என்று வான தூதர்கள் சொன்னதாகக் கூறினார்கள்.

இவற்றையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த நபர் வேறு யாருமில்லை. சாதாரண வழிப்போக்கரைப் போல் தமது சீடருடன் உரையாடிக் கொண்டு சென்றவர் இயேசுபிரானேதான். அவர் சீடர்கள் இருவரையும் பார்த்து,

"அறிவிலிகளே! இறைவாக்கினர்கள் உரைத்த எல்லாவற்றையும் நம்ப இயலாத மந்த உள்ளத்தினரே! மேசியா தாம் மாட்சி அடைவதற்கு முன் இத்துன்பங்களைப் பட வேண்டுமல்லவா?" என்றார். அத்துடன் மோசே முதல் பிற்பட்ட காலங்களில் வந்த இறைவாக்கினர் தம்மைப் பற்றிக் கூறிய சகல கருத்துக்களையும் அவர்களுக்கு எடுத்துக்கூறி விளக்கினார்.

அப்போது எம்மாவு என்ற ஊர் அருகில் மூவரும் வந்து விட்டனர். சீடர்கள் தங்கள் பாதையில் செல்ல முற்பட்டபோது, இயேசுபிரான் அப்பால் செல்ல வேண்டியவர்போல் காட்டிக் கொண்டார். சீடர்கள் இயேசுபிரானைப் பார்த்து, "மாலை நேரமாகிவிட்டது. ஆகவே இன்றிரவு எங்களுடன் தங்கி ஓய்வெடுத்து விட்டு நாளைக் காலை பயணத்தைத் தொடங்கலாமே!" என்று கட்டாயப்படுத்தினர். அவரும் சம்மதித்தார்.

இரவு உணவுக்காக அவர்கள் பந்தியில் அமர்ந்தார்கள். இயேசுபிரான் அப்பத்தை எடுத்து கடவுளைப் பிரார்த்தித்து விட்டு, அவர்களுக்குக் கொடுத்தார். இச்செயலானது அவர்களுக்குப் பலகாலமாகப் பழக்கப்பட்ட ஒன்று. அப்பத்தை எடுத்து ஆண்டவனைப் பிரார்த்திப்பதற்கு இயேசுபிரான் வழமையாகக் கடைப்பிடிக்கும் முறையானது அவருக்கு மட்டுமே கைவந்ததொன்றாக விருந்தமையினால், இதனைப் பார்த்த இருவரும் திகைப்படைந்தனர். தங்களுடன் எருசலேமிலிருந்து உரையாடிக் கொண்டு வந்து, இதோ தங்களுடன் பந்தியில் வந்து அமர்ந்து இருப்பவர் தங்களுடைய குருவான இயேசுபிரானே என்ற உண்மை அப்போது புலப்பட்டது.

(தொடர்ந்து வரும்)

**திருமறை [பு.ஆ] 35 விடை:**


- ★ இவரே உம்மகன்.
- ★ இவரே உன் தாய்.
- ★ தாகமாக இருக்கிறது.
- ★ எல்லாமே நிறைவேறிவிட்டது

**பரிசு பெறுவோர்:**

1. யூ.எல்.எம்.அஸாம்,
62, ஒஸ்மன் ரோட், சாய்ந்தமருது-05.
2. எம்.ஷர்மிளா,
கந்தப்பளை டிவிசன், கந்தப்பளை.
3. ச.யசோதினி,
கோயில் வீதி, மூதூர்-03.
4. செல்வி எஸ்.கல்யாணி,
33, பிரதான வீதி, பொகவந்தலாவ.
5. எஸ். திலகேஸ்வரன்,
அம்பாந்தோட்டை, கெங்கல்ல.


**திருமறை [பு.ஆ] 37 வினா :-** முதன் முதலில் கல்லறை சென்று பார்த்தவர் யார்?

மார்ச் 04 க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டியமுகவரி:
**திருமறை–பு.ஆ.36–தினமுரசு வாரமலர், த.பெ.இல–1772, கொழும்பு.**











அதிஷ்டத்தை அள்ளித் தரும் அதிசயக் கற்கள்

பல வருடங்கள் ஆராய்ச்சியின் பின் மண்ணுக்கடியில் மறைந்து நிற்கும் மகத்தான இரத்தினங்களை உங்கள் கைப்பிடிக்குள் கொண்டு வந்துள்ளோம். வாழ்வில் வியாபாரம், தொழில், திருமணம், கல்வி, வெளிநாட்டு பயணம் மற்றும் பல வகைகளில் அதிர்ஷ்டத்தை அள்ளித்தரும் முழு சாஸ்திரத்திற்கும் பொருந்தும் இரத்தினங்களை நியாயமான முறையில் இலவசமாகக் கணித்துக் கூறி அதை அணிந்து நீங்களும் அதிர்ஷ்டசாலியாக மாறலாம்.


Accredited by National Gem & Jewellery Authority

அருள் ARUL JEWELLERS

1, Sea Street, Colombo - 11. Tel: 436331

Branch: 105, Galle Road, Colombo 6. Tel: 580230


# நீரோடி



நீர்ச்சறுக்கு விளையாட்டுப் போட்டிகள்- குறிப்பாக அமெரிக்காவில்தான் அதிகம். நன்னீர்த்தேக்கங்களின் மீதும் அலை செறிந்த கடலின் மீதும் வேகமாகச் சறுக்கிச் செல்வது பார்ப்போரைப் பரவசப்படுத்தும் ஒரு விளையாட்டு. கனவேகமாகச் செலுத்தப்படும் படகின் பின்புறமாக, காலில் நீளமான மிதப்பைப் பொருத்திய வண்ணம் நீரோடி, படகிலிருந்து பொருத்தப்பட்ட ஒரு கயிற்றைப் பிடித்த வண்ணம் சறுக்கிச் செல்ல வேண்டும்.

அமெரிக்காவிலுள்ள, ஃபுளோரிடா-மியாமிக்கடலில் 1998 அக்டோபர் 4ம் திகதி இடம்பெற்ற நீரோடிப் போட்டியில் பிரிட்டனைச் சேர்ந்த அண்டி மேப்பின் வெற்றியீட்டினார். கயிற்றை இறுக்கமாகப் பிடித்துக் கொண்டு தனது உடம்பை லாவகமாக நெளித்து நிதானத்தைக் கடைப்பிடித்து நீரின்மீது மிதந்து இழுபட்டுச் செல்ல வேண்டும். ஒரு நொடியேனும் நிதானம் தவறினால் தலைகுப்புற விழுந்து நீரில் மூழ்க வேண்டியதுதான்.




ஸ்ரீ கல்யாணி ஜுவல்லர்ஸ்

SRI KALYANY JEWELLS

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு

5 SEA STREET, COLOMBO 11

செட்டியார் தெரு, கொழும்பு

323657


# விலையுயர்ந்த யுத்த சாதனம்



அண்டவெளியிலுள்ள வேறோர் கோளிலிருந்து வந்து கொண்டிருக்கும் - அடையாளம் காணப்படாத பறக்கும் தட்டாக இருக்குமோ என்று குழம்ப வேண்டாம். அமெரிக்கா தயாரித்து வைத்திருக்கும் 'B2 ஸ்பிரிட்' என்ற யுத்த விமானம் தான் இது. தரையிலுள்ள எதிரிகளின் கண்களுக்குப் படாமல் இரகசியமாகப் பறந்து வேவு பார்க்கும் வல்லமை கொண்ட இவ் விமானம், தருணம் வரும் போது எதிரியின் இலக்குகளைத் தாக்கி அழிக்கும் வல்லமை கொண்டது.

சாதாரண போருக்கான கருவிகளை மட்டுமல்லாது, அணுக்குண்டு மற்றும் பயங்கர ஆயுதங்களையும் இவ்விமானம் எடுத்துச் சென்று படைகளுக்கு வழங்கக்கூடியது. 18,114 தொன் எடையுள்ள போர்த்தளபாடங்களைத் தூக்கிக் கொண்டு எண்ணை நிரப்பாமல் 9,600 கிலோமீட்டர் (5,965 மைல்) வரை பறக்கவல்லது. இவ்விமானத்தை உருவாக்க 13 பில்லியன் டொலர் செலவாகியுள்ளது.

# ராஜரீக முட்டை



அழகியின் கைகளில் இருப்பது ஒரு முட்டை. ஆமாம் முட்டை தான், சாதாரண முட்டையல்ல; விலை கூடிய முட்டை. ராஜரீகமான முட்டை. இம்முட்டை ரஷ்யா நாட்டில் உற்பத்தியானது. இதைப் போல் ரஷ்யாவில் 56 ராஜரீக முட்டைகள் உருவாக்கப்பட்டன.

ஆம், ரஷ்யாவைச் சேர்ந்த 'பேபோஜ்' ஆபரண தயாரிப்பாளர்கள் 1885ம் ஆண்டு முதல் 1917ம் ஆண்டு வரையிலான 32 ஆண்டுகளில் இத்தகைய முட்டைகளை உருவாக்கினார்கள். இவற்றில் ஒன்றில் 3000 வைரக்கற்களைப் பதித்து வைத்திருந்தனர்.

சுவிற்சர்லாந்திலுள்ள ஜெனிவாவில் இம் முட்டை 1994 நவம்பரில் ஏலத்தில் விடப்பட்ட போது, 5 கோடி 58 இலட்சத்து 7308 டொலருக்கு விலைபோனது.

அந்த அற்புதமான ராஜரீக முட்டையை சுவிஸ் மாடல் அழகி இவ்வாறு தனது அழகான கைகளில் ஏந்தியிருக்கிறார்.

## 4வது பிறந்ததின வாழ்த்து

**செல்வன் சிவாண் குமார்**

**29.02.2000**



கல்முனை உதயகுமார்-சபினா தம்பதியினரின் செல்லப் புதல்வன் சிவாண் தனது நான்காவது பிறந்ததினத்தை 29.02.2000 அன்று, Land str. 10, Koblenz, Swiss என்னுமிடத்தில் உள்ள தனதில்லத்தில் குதூகலமாகக் கொண்டாடுகிறார்.

இவரை அன்பு அப்பா, அம்மா, இலங்கையிலுள்ள பூட்டி அழகம்மா, பூட்டன் ஆழகய்யா, அத்தைமார்களான சுகந்தி, வசந்தி, ஜெயந்தி, மாமாமார்களான கனகசுந்தரம், ஜெகராஜன், புவிராஜா, லண்டன் பெரியப்பா, மச்சான்மார்களான கவிதாஸ், ராஜ்குமார், டிலான், திசான், மச்சாள் கவிதா, பாட்டன்மார்கள், பாட்டிமார்கள், சித்தப்பாமார், அத்தைமார், மற்றும் புத்தளம் அம்மம்மா, பளரியான்மாமா, குமிண்டமாமா, பெரியம்மாமார்களான- மெற்றில்டா, கலிஸ்டா, ராஜி, ஜெயா, ஸ்டெலாமாமி, பத்மாமாமி, பெரியப்பாமார்களான- குமிண்டஸ், நிஹால், யூட், செல்வநாதன், மற்றும் மச்சான்மார், அக்காமார், அண்ணாமார், மச்சாள் சுவிஸ் அரசிங்கம்மாமா அகிலன் மாமா சில்வஸ்ரர் அண்ணா முன்னேஸ்வரம் ரஜனி அன்ரி ஆகியோர் மற்றும் ஏற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் சிவாண்குமாரை பலகலையும் கற்று சீரோடும் சிறப்போடும் பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

Vinayagam Uthayakumar
Land Str 10
5322 Koblenz
Switzerland
T.Phone 0562462137

# ஒலிம்பிக் வெற்றிகள்



சர்வதேச மட்டத்தில் பல்வேறு ஒலிம்பிக் போட்டிகளில் ரஷ்யா மிகக் கடினமான வெற்றிகளை ஈட்டியுள்ளது. மொத்தம் 22 வெற்றிகளைப் பெற்று முன்னணியில் நிற்கிறது. 1956, 1964, 1968 ஆண்டுகளில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகளிலும் 1954 முதல் 1990 வரையிலான ஒலிம்பிக் போட்டிகளில் குளிர் போட்டிகளிலும் கணிசமான வெற்றிகளை ரஷ்யா ஈட்டியுள்ளது. முழு அளவிலான ரஷ்ய வீரர்களைக் கொண்ட அணி என்ற ரீதியில் 1972, 1976, 1984, 1988, 1992ம் ஆண்டுகளில் 8 ஒலிம்பிக் சாதனைகளை நிலைநாட்டியது. சோவியத் ரஷ்யா என்ற அமைப்பிலிருக்கும் போது 47 விளையாட்டுகளுக்கு, எவராலும் வீழ்த்த முடியாத வெற்றிகளைத் தக்க வைத்துக் கொண்டது.